உதயன்
அங்காடி
விளம்பர சிறப்பிதழ்
உள்ளே

உதயன்
UTHAYAN - A Lively National Tamil Daily
பக்கம் : 56
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30
சுடர்: 29 கதிர்: 047 வள்ளுவர் ஆண்டு: 2044 | மார்கழி 28, ஞாயிறு 12.01.2014



மப்பான வானிலை
29 °C 24 °C

நடைபாதை வியாபாரிகளுக்கு மன்னாரில் கடும் கட்டுப்பாடு 03
இலங்கையின் அபிவிருத்தியும் புலம்பெயர் இலங்கையரும் 12
நெல்லியடி, உடுப்பிட்டி அணிகள் இறுதியாட்டத்தில் பலப் பரீட்சை 22
மலிங்கவை தக்க வைத்தது மும்பை இந்தியன்ஸ் அணி 23

## இரு பிள்ளைகளை கொன்றுவிட்டு தமிழ்ப் பெண் தானும் தற்கொலை

### *வடமேற்கு பிரிட்டனில் சோகச் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஜன. 12

பிரிட்டனில் வசித்து வந்த, இலங்கையின் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண் ஒருவர் தனது 7 மாதம் மற்றும் 5 வயதுப் பிள்ளைகள் இருவரையும் கொலை செய்து விட்டுத் தானும் தற்கொலை செய்து கொண்

21 ஆம் பக்கம் பார்க்க



## காட்டமான அறிக்கையை சமர்ப்பிப்பார் ஸ்ரீபன் ராப்

கொழும்பு,ஜன 12

இலங்கைக்கு ஐந்து நாள் பயணமாக வந்திருந்த அமெரிக்கப் போர்க்குற்ற நிபுணர் ஸ்ரீபன் ராப் நேற்று அமெரிக்கா திரும்பியுள்ளதாகவும், தனது இலங்கைப் பயணம் தொடர்பில் அவர் ஜெனீவா மனித உரிமைகள் அமர்வில் காட்டமான அறிக்கையைச் சமர்ப்பிப்பார் என்றும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் சபையின் அமர்வு நடைபெறவுள்ளது. இந்த அமர்வின் போது இலங்கையின் இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் பிரேரணையைக்

21 ஆம் பக்கம் பார்க்க

# அமெ. - இலங்கை இடையே இராஜதந்திர முறுகல் தீவிரம்

## *ராப் வருகையுடன் மோசமடைந்தது நிலைமை*

கொழும்பு, ஜனவரி 12

போர்க் குற்றங்கள் தொடர்பாக ஆராய்வதற்கான அமெரிக்காவின் சிறப்புத் தூதர் ஸ்ரீபன் ராப்பின் இலங் கைப் பயணத்தின் பின்னர் கொழும்புக்கும் வோஷிங்ரனுக்கும் இடையிலான இராஜ தந்திர உறவுகளில் முறுகல் நிலை தீவிரமடைந்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெற உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பில் அமெரிக்கா கடும்போக்கைக் கடைப்பிடிக்கும் என்பதற்கான சமிக்ஞை வெளியிடப் பட்டதைத் தொடர்ந்தே முறுகல் தீவிரமடைந்திருக்கிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இரணைப்பாலை என்ற இடத்துக்குச் சென்ற அமெரிக்க சிறப்புத் தூதர் ஸ்ரீபன் ஜே. ராப் மற்றும் கொழும்புக்கான அமெரிக்கத் தூதர் மிச்சேல் சிசன் ஆகியோரின் ஒளிப்படத்தை வெளியிட்டது அமெரிக்கத் தூதரகம். அந்த இடம் 2009 ஜனவரியில் இராணு வத்தின் எறிகணைத் தாக்குதலில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப் பட்ட பகுதி எனத் தூதரகம் குறிப்பிட்டிருப்பது இலங்கை தொடர்பான அமெரிக்காவின் கடும் நிலைப்பாட்டின் எதிரொலி என்று கொழும்பிலுள்ள அமெரிக்க அதிகாரி ஒருவர் ஏ.எவ்.பி. செய்திச் சேவைக்குத் தெரிவித்திருக்கிறார்.

தூதரகத்தின் 'டுவிட்டர்' குறிப்பு அமெரிக்காவின் அதிகார பூர்வ நிலைப்பாட்டை வெளிப் படுத்துகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் 'டுவிட்டர்' ஒளிப்படம்வெளியானதைஅடுத்து

21 ஆம் பக்கம் பார்க்க

## பிரதமர் இன்று யாழ்.வருகிறார்

யாழ்ப்பாணம், ஜன. 12

தைப்பொங்கலை முன்னிட்டு விசேட முத்திரை வெளியிடுவதற்காக, பிரதமர் தி.மு.ஜயரத்ன யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகிறார்.

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், தமிழர் திருநாளாம் தைப் பொங்கலை முன்னிட்டு விசேட முத்திரை வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பங்கெடுப்பதற்காகவே பிரதமர் தி.மு.ஜயரத்ன யாழ்ப் பாணத்துக்கு வருகிறார். (த-5)

## ஆவா குழுவை மடக்கிய பின்பும் கத்திகளுடன் வீடு புகுந்து திருட்டு

### *உடுவில் அம்பலவாணர் வீதியில் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஜன 12

யாழ். குடாநாட்டைக் கலக்கி வந்த வாள் வெட்டுக் குழு ஒன்றைப் பொலிஸார் கடந்த வாரம் கைது செய்துள்ள நிலையில் நேற்றுப் பட்டப் பகலிலும் கத்தி உள்ளிட்ட ஆயுதங்களுடன் வீடு புகுந்து ஏழரைப் பவுண் நகைகள் உட்பட்ட பல பெறுமதியான பொருள்களை இனந்தெரியாதவர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

ஆயுததாரிகள் தாம் கொண்டு சென்ற கத்தி ஒன்றையும் அங்கு தவறவிட்டுச் சென்றுள்ளனர். தாம் அதனை மீட்டுள்ளதாகவும் விசாரணை தொடர்வதாகவும் சுன்னாகம் பொலிஸார்

21 ஆம் பக்கம் பார்க்க

## நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம் பக்கச் சார்பாகச் செயற்படுகின்றதா ?

### *பாதிக்கப்பட்டவர்கள் விசனம்*

யாழ்ப்பாணம், ஜன. 12

வடக்கு மாகாண ஆளுநரினால் பாதிப்புக்குள்ளான இலங்கை நிர்வாக சேவை ஊழியர்கள், இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கத்துக்கு முறைப்பாடு செய்தபோது எது வித நடவடிக்கைகளையும் எடுக்காத அந்தச் சங்கம், பிரதம செயலாளர் முறைப்பாடு செய்தபோது மட்டும் முழுமூச்சாக நடவடிக்கை எடுக்கக் களமிறங்குவது ஏன் என்று வடக்கு மாகாண இலங்கை நிர்வாக சேவை ஊழியர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி

21 ஆம் பக்கம் பார்க்க

## வீடுகள் மீது கற்கள் வீசியதாக படையினருடன் மக்கள் முறுகல்

### *வட்டு. பிளவத்தையில் நேற்றிரவு பதற்றம்*




யாழ்ப்பாணம், ஜன. 12

வீடுகளின் மீது கல்லெறிந்த படையினருடன் மக்கள் நியாயம் கேட்டுத் தர்க்கப்பட்டதைத் தொடர்ந்து, மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் பெரும் களேபரம் மூண்டது. இதனையடுத்துப் பொலிஸாரின் முன்பாகவே கொலை செய்துவிடுவோம் என்று இராணுவத்தினர் தம்மை மிரட்டினர் என்று மக்கள் தெரிவித்தனர்.

வட்டு வடக்கு, பிளவத்தைப் பகுதியில் நேற்று இரவு இந்தச் சம்

21 ஆம் பக்கம் பார்க்க



*1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி பலாலியில் இருந்து 48 பயணிகளுடன் கொழும்பு நோக்கிப் பயணித்த வேளை புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் 'லயன் எயார்' விமானத்தின் பாகங்கள் அண்மையில் இரணைதீவுக் கடலில் இருந்து மீட்கப்பட்டன. இதன்போது கைப்பற்றப்பட்ட உடைமைகள் மற்றும் தடயப் பொருள்கள் என் பன நேற்று யாழ்ப்பாணத்தில் காட்சிப்படுத்தப்பட்டன. இதன்போது அந்த விமானத்தில் பய ணித்தவேளை காணாமற்போன பாலசுந்தரம் மனோ ரஞ்சிதம் (வயது -[illegible]), [illegible] செந்தில்வேல்(வயது -24), இளையவி ரகுநாதன் (வயது -24), [illegible] (வயது-36), ஐயாக்குட்டி பகீரதன் (வயது-23) ஆகியோரின் உடைகள், பொருள்கள் என்பவற்றை அவர்களது உறவினர்கள் அடையாளம் காட்டினர்.*

## தமிழக மீனவருடன் ராஜித பேச்சு

கொழும்பு, ஜன.12

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு எதிர்வரும் 14 ஆம் திகதி இந்தியா செல்லும் இலங்கை மீன்பிடித் துறை அமைச்சர் ராஜித சேனாரத்

21 ஆம் பக்கம் பார்க்க

## விசேட தேவையுடையோருக்கான முதல் தொழிற்பயிற்சி நிலையம்

### *மன்னாரில் நேற்றுத் திறப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 12

விசேட தேவையுடையோருக்கான முதலாவது தொழிற்பயிற்சி நிலையம் மன்னாரில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி நிலையங்கள் வடக்குகிழக்கு முழுவதும் இந்த

21 ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி
இன்னும் 5 நாள்களில்
(C/11196)
Gold Sponsor
dimo TECHNOLOGY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணை கொண்டுவந்தால் விளைவுகள் பாரதூரமானவையாகும்

## எச்சரிக்கிறார் மூத்த ராஜதந்திரி தயான் ஜயதிலக

கொழும்பு, ஜன. 12

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் சர்வதேச விசாரணை கொண்டுவரப்பட்டால் அதன் விளைவுகள் மிகப் பாரதூரமானவையாக இருக்கும் என்பதுடன் இதனால் சர்வதேசப் பொருளாதாரத் தடை உள்ளிட்ட பல்வேறு தடைகள் இலங்கை மீது விதிக்கப்படலாம் என்று எச்சரித்துள்ளார் இலங்கையின் மூத்த இராஜதந்திரிகளில் ஒருவரும், ஐ.நா மற்றும் பிரான்ஸுக்கான முன்னாள் தூதுவருமான தயான் ஜயதிலக.

'இறுதிக் கட்டப் போரின் போது நூற்றுக்கணக்கான குடும்பங்கள் அரச படையினரின் பீரங்கித் தாக்குதலில் கொல்லப்பட்ட இடம்' என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அதிகாரபூர்வமாக வெளியிட்டுள்ள டுவிட்டர் குறுஞ்செய்தி தொடர்பில் பி.பி.சி செய்திச் சேவைக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்படி எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

**சர்வதேச விசாரணை சுதந்திரமற்றது**

மேற்படி டுவிட்டர் செய்தி நடுநிலையற்றது என்று சாடியுள்ள தயான், விசாரணை எதுவுமில்லாத முற்கூட்டிய அனுமானம் எனவும் தெரிவித்துள்ளார்.

சாதாரண இராஜதந்திர முறைப்படியான வழக்கங்களை விட வேறுபட்ட விதத்தில் தான் அமெரிக்கா அதிகாரபூர்வமாக நடந்து கொண்டிருக்கிறது. நட்பு நாடொன்றிடமிருந்து இவ்வாறான வழக்கத்தை எதிர்பார்க்க முடியாது.

இந்த டுவிட்டர் செய்தியைப் போல, அனைத்துலக விசாரணைக்கான கோரிக்கையும் ஒரு போதும் சுதந்திரமானதாக இருக்க வாய்ப்பில்லை.

**தவறான வெளிவிவகார கொள்கை**

இலங்கை அரசின் தவறான வெளிவிவகாரக் கொள்கை மற்றும் இராஜதந்திர நடவடிக்கைகளே தற்போதைய கடுமையான அனைத்துலக அழுத்தங்களுக்குக் காரணம் என்ற போதிலும், இலங்கை மீதான அழுத்தங்கள் அனைத்தையும் நியாயமானவை என்று கூறமுடியாது.

இலங்கையில் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட 2009 ஆம் ஆண்டிலேயே இத்தகைய சர்வதேச விசாரணைக்கான முயற்சியொன்றை அமெரிக்கா எடுத்திருந்தது. ஆனால் அப்போது அது முடியாமல் போய்விட்டது.

ஜெனிவாவில் இலங்கையின் பிரதிநிதித்துவத்தினால் அப்போது கிடைத்த வெற்றி காரணமாக அவர்களின் முயற்சி தோல்வி கண்டது. அப்போது இருந்த வெளிவிவகாரக் கொள்கை மற்றும் இராஜதந்திர நகர்வுகள் இன்று இல்லாததால் தான் இலங்கைக்கு கடுமையான பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன.



**விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும்**

சர்வதேச விசாரணையை நோக்கிய அமெரிக்காவின் செயற்பாடுகளின் விளைவுகள் மிகப் பயங்கரமாக இருக்கும். அது அமெரிக்கா கூட எதிர் பார்க்காத அளவுக்கு அபாயகரமானதாக இருக்கலாம்.

சர்வதேச விசாரணைக்கான பொறிமுறை ஒன்று உருவாகுமானால் இரண்டு வழிகளில் அது ஏற்படலாம். ஐ.நா.வின் சிறப்பு தூதுவர் ஒருவர் நியமிக்கப்படலாம் அல்லது சர்வதேச விசாரணை ஆணைக்குழு ஒன்று உருவாகலாம்.

அந்த விசாரணையின் தீர்ப்புகளுடன் இலங்கை ஒத்துழைத்துச் செயற்படத் தவறினால், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளின் நாடாளுமன்றங்களால் இலங்கைக்கு எதிராகச் சர்வதேச ரீதியான பொருளாதார, வணிக மற்றும் நிதித் தடைகள் கொண்டு வரப்பட்டு இலங்கையின் பொருளாதாரக் குரல் வளை நசுக்கப்படலாம்.

**சமூக இடைவெளியை அதிகரிக்கும்**

அதற்கும் முன்னதாக, எதிர் வரும் மார்ச் மாதத்தில் கொண்டுவரப்படும் தீர்மானத்தில் இலங்கை மோசமாகத் தோல்வி கண்டால் அது நேரடியாக பங்குச் சந்தைகளைப் பாதிக்கும்.

அதே போல இலங்கை இராணுவ அதிகாரிகள் மட்டுமன்றி மற்றைய அதிகாரிகளுக்கும் சர்வதேசப் பயணங்களை மேற்கொள்ள முடியாதபடி புலம்பெயர் தமிழர்களால் வழக்குகள் போடப்படலாம்.

அமெரிக்கா போன்ற நாடுகளின் இவ்வாறான கடுமையான நிலைப்பாடுகள் இலங்கையினுள் இனரீதியான சமூக இடைவெளியை இன்னும் அதிகரிக்கச் செய்யவும் வாய்ப்பிருக்கிறது.' என்றும் தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார். (த-5)



சிவபூமி முதியோர் இல்லத்தில் வசிக்கும் திருமதி இராஜேஸ்வரி தனது 103 ஆவது பிறந்த தினத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடினார்.

# வடக்கு ஆயர்கள் பயங்கரவாதிகள்

## பிரதியமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 12

வடக்கு ஆயர்கள் பயங்கரவாதிகள் எனச் சாடியுள்ள தொழில் மற்றும் தொழிலாளர்கள் உறவுகள் பிரதியமைச்சர் றியர் அட்மிரல் சரத் பி.வீரசேகர, ஆயர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

போர்க்குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்று போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் அமெரிக்கத் தூதுவர் ஸ்ரீபன் ராப்பிடம், யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை ஆகியோர் தெரிவித்திருந்தனர்.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள, கடற்படையின் முன்னாள் அதிகாரிகளில் ஒருவரும், தற்போது பிரதியமைச்சருமான றியர் அட்மிரல் சரத் பி.வீரசேகர, 'பயங் கரவாதிகள் என்றால் நாட்டுக்கு எதிரானவர்கள் என்பதே அர்த்தம். அதற்கு வேறு எந்த அர்த்தமும் கிடையாது என்று கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-பயங்கரவாதம் என்பதற்கு நடுவில் எவரும் வேறு எந்த அர்த்தமும் கூற முடியாது. எமது படையினர் மனிதாபி மானப் போரையே நடத்தினர். எமது கடற்படையினர் பலரைக் கொன்ற, கடற்புலிகளின் தளபதி சூசையின் மனைவி பிள்ளைகளையும் இறுதிப் போரில் கைது செய்தனர்.

இது யாருக்கும் தெரியாது. அவர்களை எதுவும் செய்திருக்கலாம். ஆனால் எமது படையினர் அவர்களைப் பாதுகாத்தனர். இன்று அவர்கள் மகிழ்ச்சியாக உயிர் வாழ்கின்றனர்.

அது போன்றே, இறுதிக்கட்டப் போரின் போது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் 250 பொதுமக்களைப் பணயக் கைதியாக வைத்துக் கொண்டு சுற்றிவர கண்ணி வெடிகளைப் புதைத்து இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தினார். எமது படையினர் நினைத்திருந் தால் பீரங்கித் தாக்குதல்களை நடத்தியிருக்கலாம். ஆனால் அதைச் செய்யவில்லை மாறாக கண்ணி வெடிகளுக்கு மேலாக நடந்து சென்று பிரபாகரனைக் கொன்று மக்களை பாதுகாத்தனர். இதனால் எமது படையினர் 300 பேர் கால்களை இழந்தனர்.

**கூட்டமைப்பு எங்கே ?**

விடுதலைப் புலிகள் பொது மக்களையும் புத்திஜீவிகளையும் கொன்ற போதும், சிறுவர்களைப் படைக்குச் சேர்த்த போதும் இந்த ஆயர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் எங்கே இருந்தனர்.

போர் முடிந்த பின்னர் புலி கள் புதைத்து வைத்த 5 இலட்சத்துக்கும் அதிகமான கண்ணி வெடிகளை எமது படையினரே உயிரைப் பணயம் வைத்து அகற்றினர்.

மக்களுக்கு 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகளை நிர்மாணித்துத் கொடுத்தனர். அடிப்படை வசதிகளை ஏற்படுத்தினர். இதன் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோ ஆயர்களோ ஏதாவது உதவிகளைச் செய்தார்களா? ஒன்றும் செய்யவில்லை.

அவ்வாறானவர்கள் இன்று அமெரிக்காவின் பிரிவினை வாதத்துக்குத் துணை போகின்றனர். பயங்கரவா தத்தை உருவாக்க முனைகின்றனர். இவர்கள் தமிழ் மக்களின் நிம்மதியான வாழ்வுக்காகச் செயற்படவில்லை. மாறாக அதற்கு எதிரானவர்களாகவே செயற்படுகின்றனர் - என்றார். (த-5)

## இடமாற்றம் கிடைக்காத ஆசிரியர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.12

வன்னி மாவட்டத்தில் 5 வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றி இடமாற்றம் கிடைக்கப் பெறாத ஆசிரியர்கள் நாளை திங்கட்கிழமை வட மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளனர்.

இடமாற்றத்தால் பாதிப்படைந்துள்ள ஆசிரியர்கள் கடந்த 11ஆம் திகதி வட மாகாண முதலமைச்சருக்கு இது தொடர்பான மனு ஒன்றைக் கையளித்திருந்தனர். இந்த நிலையில் அடுத்த கட்டமாக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வட மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் தொடர்புடைய ஆசிரியர்களை நாளை திங்கட்கிழமை யாழ். முத்திரைச் சந்தியில் ஒன்று கூடுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-14)

## மத வழிபாட்டுத் தலங்களை அமைப்பதாயின் அனுமதி தேவை

### மத விவகார அமைச்சு அறிவிப்பு

இலங்கையில் புதிதாக மத வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் புத்த சாசனம் மற்றும் மத விவகார அமைச்சின் எழுத்து மூலம் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என புத்த சாசனம் மற்றும் மத விவகார அமைச்சின் செயலாளர் எம்.கே.பீ. தர்மதாசா மீண்டும் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலில்,

நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் விகாரைகள், கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள், தியான நிலையங்கள், ஜெப நிலையங்கள் எவ்வித தர நிர்ணயங்கள் இன்றியும் அனுமதி இன்றியும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இந் நிலைமை மத ஒற்றுமைக் கோட்பாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதி தொடர்பாக 2008 இல் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையும் இந்த அறிவித்தலில் நினைவுபடுத்தப்பட்டுள்ளது. (த-10)

## பொங்கல் அரிசிக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.12

தைப்பொங்கலுக்கான உள்ளூர் தீட்டல் அரிசிக்கு இம்முறை பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டில் போதிய மழை வீழ்ச்சி உரிய நேரத்தில் பெய்யாதமையால் பெரும்போக நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

பெரும்போக நெற்செய்கை பாதிப்பின் எதிரொலியாக நெல்லுக்கு இம்முறை பலத்த பற்றாக்குறையும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

நெல்லுக்கு ஏற்பட்ட பற்றாக் குறையால் உள்ளூர் அரிசிகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தைப்பொங்கல் காலத்துக்குரிய உள்ளூர் தீட்டல் அரிசியைப் பெறுவதில் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதுடன் அதன் விலையும் அதிகரித்துள்ளது.

வர்த்தக நிலையங்களில் மொட்டைக்கறுப்பன் தீட்டல் அரிசி கிலோ 75 ரூபா முதல் 85 ரூபா வரை விற்கப்படுகின்றது. (த-17)

## வடமாகாண ஆளுநர் சந்திரசிறியின் உதவிச் செயலராக அண்ணாத்துரை

யாழ்ப்பாணம், ஜன. 12

வடமாகாண ஆளுநரின் உதவிச் செயலராக, ஓய்வுபெற்ற முன்னாள் விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண பிராந்திய அலுவலகங்களின் ஆணையாளர்கள் பதவிக்குப் பதிலாகவே உதவிச் செயலாளர் பதவி உருவாக்கப்பட்டுள்ளது.

அந்தப் பதவிக்கே கடந்த வருடம் ஓய்வு பெற்றுச் சென்ற விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு உடனடியாகவே, வடக்கு மாகாண பேரவைச் செயலகத்துக்கென வழங்கப்பட்ட வாகனம் மீளப் பெறப்பட்டு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. த-5)

## சங்கங்கள் திறக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஜன.12

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சகல கிளை விற்பனை நிலையங்களும் இன்று திறக்கப்படும்.

தைப்பொங்கல் பொருள்களை நுகர்வோருக்கு விநியோகிக்கும் பொருட்டே கிளை நிலையங்கள் முழுமையாக இன்று திறக்கப்படவுள்ளன. (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகற்றப்பட்டது இராணுவ முகாம்

யாழ்ப்பாணம்.ஜன.12

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு முன்பாக இருந்த இராணுவ முகாம் நேற்று முன்தினம் அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளது. கடந்த 4 வருடங்களுக்கு மேலாக இருந்த இராணுவ முகாம் தனியார் வீடொன்றில் அமைக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது அவ்விடத்தில் இருந்து அது வேறு இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவ முகாம் இருந்தமையால் வீட்டின் உரிமையாளர் பல சிரமங்களை எதிர்கொண்டு வந்த நிலையில் தற்போது இராணுவத்தின் பிடியில் இருந்து வீடு விடுவிக்கப்பட்டுள்ளதால் மீளக் குடியமர்வதற்கான நடவடிக்கைகளை வீட்டின் உரிமையாளர் மேற்கொண்டு வருகிறார். (த-422)

# நடைபாதை வியாபாரிகளுக்கு மன்னாரில் கடும் கட்டுப்பாடு

## *நகரசபை துரித நடவடிக்கை*

மன்னார், ஜன.12

மன்னார் நகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் வீதியோர மற்றும் நடைபாதை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் மன்னார் நகரசபை ஈடுபட்டு வருகின்றது.

பாதசாரிகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்படும் நடைபாதை மற்றும் அங்காடி வியாபாரிகளுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மன்னார் பஸார் பகுதிக்கு சென்ற மன்னார் நகர சபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் உட்பட நகரசபைச் செயலாளர், அலுவலர்கள் ஆகியோர் பாதசாரிகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் காணப்பட்ட நடைபாதை வியாபார நிலையங்களை அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அதேவேளை அரச மற்றும் தனியார் பஸ் நிலைய வளாகத்தில் பயணிகளின் நலன் கருதி குடிதண்ணீர் தாங்கிகளையும் மன்னார் நகர சபையினர் நிறுவியுள்ளனர்.

இந்த நடவடிக்கைகளில் மன்னார் நகரசபைத் தலைவர், செயலாளர் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் இணைந்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-56)

# தலைமைத்துவப் பயிற்சிக்கு செல்லும் மாணவருக்கு பஸ்

யாழ்ப்பாணம்.ஜன.12

யாழ் மாவட்டத்திலிருந்து மின்னேரியா மற்றும் மாதுறு ஓயா ஆகிய இடங்களுக்கு தலைமைத்துவப் பயிற்சிக்காகச் செல்லவுள்ள மாணவர்களுக்கான விசேட பஸ் சேவையை எதிர்வரும் 18 ஆம் திகதி இலங்கைப் போக்குவரத்துச் சபை நடத்தவுள்ளது.

பயிற்சிக்குச் செல்லும் மாணவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 6 மணிக்கு யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இந்தச் சேவையை பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ். சாலை முகாமையாளர் செ.குலபாலச் செல்வம் அறிவித்துள்ளார். (த-14)

# முழு நிலா கருதரங்கு

தென்மராட்சி.ஜன.12

மீசாலை உயர் கலைக் கல்லூரியினால் மாதந்தோறும் பௌர்ணமி தினங்களில் நடத்தப்படும் முழுநிலா கருத்தரங்கில் ஜனவரி மாதத்தில் இந்து நாகரீகம், நாடகமும் அரங்கியலும் பாடங்கள் இலவசமாக நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை மு.ப.9 மணி தொடக்கம் இந்தப் பாடங்கள் வளவாளர்களால் உயர் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடத்தப்படும்.

2014 ஜி.சி.ஈ.உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் இதில் பங்குபற்றலாமென நிறுவன இயக்குநர் எஸ்.வீரசுதாகரன் அறிவித்துள்ளார்.

நிறுவனத்தினரால் மாதாந்தம் பௌர்ணமி தினத்தன்று க.பொ.த.சாதாரண தரம், உயர்தரம் ஆகிய பரீட்சைகளுக் குத் தோற்றும் மாணவர்களுக்கு இலவசமாகக் கருத்தரங்குகள் புலமைசார் வளவாளர்களால் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (த-9)

# குரங்குகளின் அட்டகாசத்தால் பழ உற்பத்தியில் பெரும் பாதிப்பு

## *தென்மராட்சிப் பிரதேச மக்கள் விசனம்*

தென்மராட்சி. ஜன.12

தென்மராட்சி பிரதேசத்தில் குரங்குகளினால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக மக்கள் பெரிதும் கவலை தெரிவித்தனர்.

பிரதேசத்திலிருந்து குரங்குகளை அப்புறப்படுத்துமாறு உரிய அதிகாரிகளுக்கும் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றோருக்கும் பல தடவைகள் மனுக்கள் வழங்கியும் பயன் கிடைக்கவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் குரங்குகளால் ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் இழப்புக்கள் பற்றி திரட்டப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் வருடாந்தம் பிரதேசத்தில் 100 மில்லியன் ரூபாவுக்கு மேல் இழப்பு ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பழ வகைச் செய்கைக்கு பெயர் போன தென்மராட்சிப் பிரதேசத்தில் பழச்சாறு உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அது போதிய உற்பத்தியை, இலக்கை அடைய முடியாத நிலையில் உள்ளது.

குரங்குகளின் தொல்லைகளால் வீட்டில் உள்ள நீண்ட நாள்கள் பயன்தரக் கடிய மாமரங்கள் தறித்து வீழ்த்தப்படுகின்றன. குரங்குகளின் அட்டகாசம் தீர்க்கப்படாவிடின் பிரதேசத் தில் மாமரங்களைக் காண்பதே அரிதாகும் நிலை ஏற் படலாம்.

பெறப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் பிரதேசத்தில் மாமரங் கள் 265 ஹெக்ரெயர் காணியிலும், வாழை 114 ஹெக் ரெயரிலும், தேசிக்காய் 22 ஹெக்ரெயரிலும், பப்பாசி 15 ஹெக்ரெயரிலும், பயிரிடப்படுகின்றன.

இவற்றில் மாமரத்திலிருந்து 2 ஆயிரத்து 210 மெற்றிக் தொன் பழ உற்பத்தியும், வாழை மரத்திலிருந்து 3 ஆயிரத்து 420 மெற்றிக் தொன் உற்பத்தியும் பப்பாசி மரத்திலிருந்து 450 மெற்றிக் தொன் பழங்களும் உற்பத்தி இலக்காக மேற்கொள்ளப்படுகிறது.

இதில் குரங்குகளால் மாமரத்திலிருந்து ஆயிரத்து 272 மெற்றிக் தொன்னும், வாழை மரத்திலிருந்து 2 ஆயிரத்து 52 மெற்றிக் தொன்னும், பப்பாசியிலிருந்து 270 மெற்றிக் தொன்னும், சேதப்படுத்தப்படுகின்றன. இதனால் மாமரத்தினால் 19.08 மில்லியன் ரூபாவும் வாழை மரத்தினால் 41.04 மில்லியன் ரூபாவும், பப்பாசி மரத்தினால் 8.1 மில்லியன் ரூபாவும் இழப்பீடாக காணப்படுகிறது.

முருங்கை உட்பட காய்கறி உற்பத்திகாலபோகத்தில் 229.5 ஹெக்ரெயரிலும் சிறுபோகத்தில் 168 ஹெக்ரேயரிலும் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றின் மூலம் 4 ஆயிரத்து 750 மெற்றிக் தொன் விளை பொருள்கள் கிடைக்குமென இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும் குரங்குகளினால் ஆயிரத்து 900 மெற்றிக் தொன் உற்பத்திப் பொருள்கள் அழிக்கப்படுவதால் 28.5 மில்லியன் ரூபா இழப்பு ஏற்படுகிறது.

இவற்றை விட வீடுகளுக்கு அருகில் காணப்படும் மரங்களிலிருந்து பாய்ந்து செல்வதால் வீட்டின் கூரைத் தகடுகள், ஓடுகள், முகட்டு ஓடுகள் சேதமாக்கப்படுகின்றன.

இவற்றை விட வீட்டில் உள்ள தளபாடங்கள் சேதப்படுத்தல் குடிசை வீடுகளுள் செல்லும் குரங்குகள் அங்கிருக்கும் உணவுப் பொருள் களை சேதப்படுத்தல், அழித்தல் போன்றவற்றினால் பல மில்லியன் ரூபா இழப்பு ஏற்படுகிறது.

2000 ஆம் ஆண்டளவில் சோலைப் பகுதிகளில் மட்டும் கூட்டமாக வசித்து வந்த குரங்குகள் பல்கிப் பெருகி தற்போது கிராமங்களில் பெரும் தொகையில்காணப்படுகின்றன.

குரங்குகளைக் கொல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் இவற்றை இரும்புக் கூடுகள் உருவாக்கி கிராமம் கிராமமாக வைத்துப் பிடித்து வேறு பிரதேசங்களில் அல்லது சரணாலயங்களில் விடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இரும்புக் கூடு தயாரிப்பதற்கு 70 ஆயிரம் ரூபா தொடக்கம் ஒரு லட்சம் ரூபா வரை செலவாகும். இதனைத் தயாரிப்பதற்கு கிராம மக்கள் அல்லது விவசாய அமைப்புக்கள் முன்வந்து உருவாக்கி கட்டுப்படுத்தலாம். சாவகச்சேரியில் உள்ள பிரதேச செயலகம் இதற்கென நிதி பெற்றும் உள்ளூராட்சி சபைகள் நிதி ஒதுக்கீடு செய்தும் பொதுமக்களுக்கு வழங்கி குரங்கைக் கட்டுப்படுத்தலாம். கூடுகளில் குரங்குகள் பிடிக்கப்பட்டதும் வன விலங்கு பரிபாலன சபைக்கு அறிவித்தால் அவர்கள் அந்த இடத்துக்கு வந்து பெற்று உரிய சரணாலயத்தில் கொண்டு சென்று விடுவார்கள். அல்லது தனியார் நிறுவனங்கள் இரும்புக் கூடுகளை அமைத்து வாடகைக்கு வழங்குவதன் மூலம் குரங்குகளின் தொகையைக் குறைக்கலாம். தாட்டான் இனத்தைச் சேர்ந்த குரங்குகள் தென்மராட்சி பிரதேசத்தில் நடமாடுவதால் அவை ஆண்களின் பலத்துக்கு சமமானவையென கண்டறியப்பட்டுள் ளது.

இவை பெரும்பாலும் வீதிகளில் செல்லும் சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்றவற்றில் பாய்வதால் ஏற்படும் விபத்துக்களால் உயிராபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. இவ்வாறான விபத்துக்களில் சிக்கி காயமடைந்த பலர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-9)

# வடக்கு மீனவர் பிரச்சினை; 15 ஆம் திகதி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.ஜன.12

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் வட பகுதி மீனவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு வட மாகாண கடற்றொழிலாளர்களின் கூட்டமைப்பின் யாழ். காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டமைக்காகப் படகுகளுடன் மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் நிலையில் இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையில் நிரந்தரமான தீர்வு காண்பது தொடர்பான பேச்சு எதிர் வரும் 20 ஆம் திகதி இந்தியாவில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்திய மீனவர்களால் வட பகுதி மீனவர்களே பெரிதும் பாதிக்கப்படும் நிலையில் மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பான பேச்சில் வட பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் யார் என்பது தொடர்பான தகவல்கள் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில் இந்திய இழுவைப் படகுகளின் ஊடுருவல் மற்றும் வடக்கு மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக வட மாகாணக் கடற்றொழிலாளர்கள் கூட்டமைப்புடன் எதிர்வரும் 15 ஆம் திகதி கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-14)

> இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையில் நிரந்தரமான தீர்வு காண்பது தொடர்பான பேச்சு எதிர் வரும் 20 ஆம் திகதி இந்தியாவில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# வாழ்வக ஸ்தாபகரின் உதயநாளும் பரிசுத் தினமும்



வலி. வடக்கு, ஜன.12

வாழ்வகத்தின் ஸ்தாபகரும் அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் 79 ஆவது உதயநாளும் பரிசுத்த தினமும் நேற்றுக்காலை 9.00 மணிக்கு மருதனார்மடம் வாழ்வகத்தில் தலைவர் ஆ. ரவீந்திரன் தலைமையில் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வழிபாடு இடம் பெற்றதைத் தொடர்ந்து வாழ்வக கொடியை தலைவர் ஏற்றி வைத்தார்.

விருந்தினர்களின் மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து நிலைய மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம் பெற்றது.

வரவேற்புரையை நிறுவனத்தின் பொருளாளர் த. வாமதேவன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி செலின் சுகந்தி செபஸ்தியனும், சிறப்பு அதிதிகளாக சமூக சேவைகள் அமைச்சின் அங்கவீனமுற்ற ஆள்களுக்கான தேசிய சபையின் உறுப்பினர் வெ. சுப்பிரமணியம், ஹற்றன் நஷனல் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் க. இந்திரவாசன், யாழ்ப்பாணம் பிரதேச செயலக சமூக சேவை அலுவலர் வ. சுரேஷ்குமார், தொழில் உரிமையாளர் ஜே. எஸ். அலெக்ஸ் நிக்ஷன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக செஞ்சொற் செல்வர் ஆறு திருமுகனும் கலந்து கொண்டனர். (த-86)

# மாணவர்களை துரத்தும் நாய்கள்



தென்மராட்சி, ஜன.12


காலை வேளைகளில் அவிழ்த்து விடப்படும் வளர்ப்பு நாய்களால் ரியூசனுக்குச் செல்லும் மாணவர்கள் துரத்தப்படும் சம்பவங்கள் அண்மைக் காலமாகச் சாவகச்சேரி டச்சு வீதியில் இடம்பெற்று வருகின்றன.

இரவு வேளையில் அவிழ்த்து விடப்படும்நாய்கள் காலையில் வீதியில் சைக்கிளிலும் நடந்தும் செல்லும் மாணவர்களைத் துரத்துவதாகத் தெரிவிக்கப்பட்டது.

டச்சு வீதி பல இடங்களில் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் மாணவர்கள் இவற்றினுள் வீழ்ந்து எழும் நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவீன வசதிகளுடன் மலசலகூடம், குளியலறை



அடம்பன் பொதுச் சந்தை வளாகத்தில் நவீன மலசல கூடம்.

மன்னார், ஜன.12

அடம்பன் பொதுச் சந்தை வளாகத்தில் நவீன மலசல கூடமும், குளியலறையும் அமைக்கப்பட்டுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி அனுசரணையுடன் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினால் மாந்தை மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட அடம்பன் பொதுச் சந்தைக் கட்டட வளாகத்தில் அமைக்கப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய பொது மலசலகூடம் மற்றும் குளியலறைக் கட்டடத் தொகுதி கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மாவட்ட தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் அதிகாரிகளினால் மாந்தை மேற்கு பிரதேச சபையின் செயலாளரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் உத்தியோகத்தர்களும் மாந்தை மேற்கு பிரதேச சபையின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்தக் கட்டடத் தொகுதியில் ஊனமுற்ற விசேட தேவையுடையோருக்கும் ஏற்ற வகையில் மலசலகூடம் மற்றும் குளியலறை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். (க-56)

# தமிழ் பேசும் அதிகாரிகளை நியமிப்பதற்கு நடவடிக்கை

## ஒட்டுசுட்டானில் தெரிவித்தார் மரக் கூட்டுத்தாபனத் தலைவர்

முல்லைத்தீவு, ஜன.12

தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் பேசும் அதிகாரிகளை நியமிக்க உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு தெரிவித்தார் அரச மரக் கூட்டுத்தாபனத் தலைவர் சுனில் அபயசிங்க.

ஒட்டுசுட்டானில் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் கிளை அலுவலகமொன்றை கடந்த 2 ஆம் திகதி திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

இந்த மாவட்டத்திலே மரங்களைப் பெறுவதில் மக்கள் பல இன்னல்களை எதிர்கொள்கின்றனர். மேலும் இந்த மாவட்டத்தில் பணியாற்றுகின்ற அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களில் தமிழ் பேசுகின்றவர்கள் இல்லாத குறை காணப்படுகின்றது. இது தொடர்பாக ஜனாதிபதியுடனும், அமைச்சருடனும் நான் கலந்தாலோசித்ததன் விளைவாக விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதற்கிணங்க யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. அவற்றைப் பரிசீலனை செய்து தமிழ் அதிகாரிகளை நியமிக்க ஆவன செய்வேன். ஒட்டுசுட்டானில் அமைக்கப்பட்ட இந்தக் கிளை அலுவலகத்துக்கு அரச அதிபர், வன இலாகாவினர் மற்றும் மக்கள் அனைவரதும் ஒத்துழைப்புக் கிடைக்கும் என நம்புகின்றேன் எனவும் தெரிவித்தார். (க-500)

> "–"
> இந்த மாவட்டத் தில் பணியாற்றுகின்ற அதிகாரி கள் மற்றும் உத்தியோகத்தர் களில் தமிழ் பேசுகின்றவர்கள் இல்லாத குறை காணப்படு கின்றது.

## 300 வறிய மாணவர்களுக்கு வங்கிப் புத்தகம் கையளிப்பு


மன்னார், ஜன.12

வடமாகாண ஆளுநரின் நிதியத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக வங்கிக் கணக்குகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுவங்கிப் புத்தகங்கள்கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சியான் தலைமையில் முருங்கன் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

மன்னார் கல்வி வலயத்தைச் சேர்ந்த 85 பாடசாலைகளில் கல்வி கற்கும் வறிய மாணவர்கள் 300 பேருக்கு இவ்வாறு வங்கிப் புத்தகங்கள் கையளிக்கப்பட்டன.

தரம்-01 தொடக்கம் 5 வரையான மாணவர்களுக்கு 500 ரூபாவும், 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு 1000 ரூபாவும் உயர்தர மாணவர்களுக்கு 2000 ரூபாவும் வங்கிப் புத்தகங்களில் இடப்பட்டன. இவ்வாறு 9 மாதங்களுக்கான கொடுப்பனவுகள் வங்கியில் வைப்பிலிடப்பட்டு வங்கிப் புத்தகங்கள் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் ரிஸாத் பதியுதீன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக், வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு வங்கிப் புத்தகங்களை வழங்கினர். இதன்போது பாடசாலை அதி பர்கள், அமைச்சரின் இணைப்பாளர்கள் உட்படப் பலர்கலந்துகொண்டனர். (க-56)



மன்னார் மாவட்டத்தில் கல்வி கற்கும் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கென அவர்களின் பெயரில் வங்கியில் பணம் வைப்பிடப்பட்டு அதற்கான வங்கிப் புத்தகங்களைக் கையளிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் ரிசாத் பதியுதீன் மாணவர் ஒருவருக்கு வங்கிப் புத்தகத்தைக் கையளிக்கின்றார். (க-56)

## கைக்கெட்டாத நிலையில் நிரந்தர வீட்டுத் திட்டம்

### விசனம் தெரிவிக்கின்றனர் சமயபுரம் மக்கள்

வவுனியா, ஜன.12

வவுனியா சமயபுரம் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு இதுவரை நிரந்தர வீட்டுத் திட்டம் கிடைக்கவில்லையென அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

போர்இடர்களால்இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்த சமயபுரம் பகுதி மக்கள் நிரந்தர வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படாததால் தற்காலிகக் குடிசைகளில் வாழ்வதால் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட நிலை யில் வாழும் இவர்கள் நிவாரணத்தையே நம்பியிருக்கின்றனர்.

பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பியைக் கூட வாங்கிக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கும் இவர்கள் நிரந்தர வீடுகளை அமைப்பது என்பது சாத்தியமில்லாத விடயமாகவே காணப்படுகின்றது.

இவர்கள் தமக்கும் நிரந்தர வீட்டுத் திட்டத்தை வழங்குமாறு பலரிடமும் கோரிக்கை விடுத்த போதிலும் இதுவரை சாதகமான பதில் கிடைக்க வில்லை எனவும்தெரிவிக்கின்றனர். (க-402)

## புதுக்காடு, அழகாபுரி பகுதிகளுக்கு தருமபுரத்திலிருந்து கசிப்பு விநியோகம்

கிளிநொச்சி தருமபுரம் பகுதி யிலிருந்து இராமநாதபுரத்திலுள்ள புதுக்காடு, அழகாபுரி ஆகிய கிராமங்களுக்கு கசிப்பு எடுத்து வரப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். அவ்விதம் எடுத்து வந்த சிலர் பொலிஸாரி டம் சிக்கிக் கொண்ட போதிலும் தருமபுரத்திலிருந்து தொடர்ந்தும் கசிப்பு எடுத்து வரப்படுகின்றது. புதுக்காடு, அழகாபுரி ஆகிய கிராமங்களில் வறுமை நிலையிலுள்ள குடும்பங்களே வசித்து வருகின்றன. (க-18)


## கண்ணீர் அஞ்சலி

கிளி/கிளாலி றோ.க.த.க. பாடசாலையில் கடமை யாற்றும் ஆசிரியர் திருமதி சிவகௌரி விஜிதரன் அவர்களின் அன்புத் தந்தை



### துரைசாமி இராசலிங்கம்

அவர்கள் கடந்த 10.01.2014 அன்று சிவபதமடைந்தார். அவரின் மறைவால் துயருற்றிருக் கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
கிளி/கிளாலி றோ.க.த.க. பாடசாலை,
எழுதுமட்டுவாழ்.

(42304) (10.14)

## கண்ணீர் அஞ்சலி



எமது மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் அர்ப்பணிப்பு மிக்க பணியாளராக கடந்த ஆறு ஆண்டுகளாகப் பணியாற்றிய

### சிங்கராஜர் புஸ்பராஜா

அவர்கள் நேற்று (11.01.2014) அமரத்துவம் அடைந்தமையையிட்டு ஆழ்ந்த துயரடைந்துள்ளோம்.

அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதுடன், அவரின் பிரிவால் கலங்கி நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இயக்குநர், அங்கத்தவர்கள், பணியாளர்கள்,
திருமறைக் கலாமன்றம்.
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(சி10770) (12.3.6)

## மரண அறிவித்தல்

### மாரிமுத்து பசுபதி



மாவை, கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் மல்லாகம், நீதிமன்ற வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து பசுபதி நேற்று முன்தினம் (10.01.2014) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரம் மாரிமுத்துவின் அன்பு மனைவியும், முருகன் பொன்னி நாகியின் அன்பு மகளும், தங்கச்சிப்பிள்ளை, சரஸ்வதி, நடேசன், ஐயாத்துரை (பிரதேசசபை உறுப்பினர் -வலி வடக்கு), நாகம்மா, ராசமணி, தேவராசா, தருமகுலராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராசா (கா.சீ.தொ), பூரணம், கதிரவேலு (கா.சீ.தொ), நடேசன் (கா.சீ.தொ), கணேசன் (ல.சீ.தொ) ஆகியோரின் மைத்துனியும், வரதராசா (ப.தெ.வ. கூ.ச. தெல்லிப்பழை), சௌந்தரராசா (துபாலகம் தெல்லிப்பழை), விஜயராசா (சவுதி), பவளராணி, சிதம்பரநாயகி, சத்தியநாயகி (ஆசிரியர் யா/போக்கட்டி அ.த.க.பா), ரகுராசன் (சவுதி), துசியந்தராசா ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற கருணாநிதி (கா.சீ.தொ), ராஜசுலோசனா, உமாவதி, சறோஜாதேவி, விஜயகுமார், சிவகுமார் (ஆசிரியர் கிளி/விநாசியோடை அ.த.க.பா), விஜிதவேணி, ஸ்ரீமுகுந்தினி ஆகியோரின் பாசமிகு மாமியும், கமலினி (ஆசிரியர் யா/குட்டியப்புலம் அ.த.க.பா), துளசிராஜன், றோகினி (ஆசிரியர் மன்/நானாட்டான் ம.ம.வி), பிரபு, சௌந்தரியா, வித்தியாசாகரன், தேவகி, தனேஸ் (துபாலகம் தெல்லிப்பழை), ஜானகி (பல்கலைக்கழகம் மட்டக்களப்பு), புஸ்பகாந்தி, முகுந்தன் (டோகா), பிரகாஸ் (பிரான்ஸ்), ரமணன் (தொழில்நுட்பக் கல்லூரி), ஆர்த்தி, சுஜிந்தன், ஆகாஸ், சுருதி, திவ்வியன், சிவதனுஸ், வர்ஜா, வைஸ்ணவி, ஸ்ரீராம் மற்றும் விக்கினேஸ்வரன் (முகாமையாளர் சமுர்த்தி வங்கி தெல்லிப்பழை), கோமளா (ஆசிரியர் மு/கொக்கிளாய் அ.த.க.பா), றஞ்ஜித், ஜோன்சன், பத்மினி, சசிகுமார், ஜஸ்மின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மிதுசன், மதுசா, லத்திகா, சாயிகுமரன், மஹதி, கவிசாந், வினோஜன், சாகித்தியா, சாணுஜா, அஸ்னவீன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நீதிமன்ற வீதி மல்லாகம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (12.01.2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அளவெட்டி இந்து மயானத்துக்கு தக[illegible] எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமன்ற வீதி, மல்லாகம்.
077 5001404, 077 6315915

(42312)(10.14)

தகவல்: குடும்பத்தினர்.

## வீடு வாடகைக்கு

செட்டி வீதி, இணுவில் மேற்கு, என்னும் முகவரியில் 4 பரப்புக் காணியுடன் சகல வசதிகளுமுடைய மூன்று வீடுகள் உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-
0775821399
0779415716

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் சபாரத்தினம்

(ஓய்வு பெற்ற அதிபர் சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயம்)



சந்திவெளி மொறாக்கொட்டாஞ்சேனையைப் பிறப்பிடமாகவும், புத்தூர் வீதி, மீசாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சபாரத்தினம் (ஓய்வு பெற்ற அதிபர் சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம்) நேற்று (11.01.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் மந்துவில் குடியிருப்பைச் சேர்ந்த காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும் இராசம்மாவின் (ஓய்வு பெற்ற அதிபர் சாவகச்சேரி, சக்தி அம்மன் வித்தியாலயம்) அன்புக்கணவரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

புத்தூர் வீதி,
மீசாலை வடக்கு கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிரந்தர வேலை வாய்ப்பு

உங்கள் வாழ்க்கை, நிரந்தர தொழில். உடனடியாக அழையுங்கள், எம்மிடம் கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் கோழி இறைச்சி/காமென்ட்ஸ்/Water bottel/தூரிகை/சொக்லேட்/தேயிலை/குளிர்பானம்/Mycola/பென்சில் போன்ற பல தயாரிப்புகளுக்கு உற்பத்தி உதவியாளர்/லேபல்/பொதியிடல்/தரம்பிரித்தல் பிரிவுகளுக்கு 17-50 வயது ஆண், பெண் தேவை. உணவு, தங்குமிட வசதிகள் குறைந்த விலைகளில். சம்பளம் 20,000/=, 32,000/= (நண்பர்கள்/குழுக்கள்/தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்) வருகை தரும் நாளிலே வேலை வாய்ப்பு.

தொடர்புகளுக்கு: 077 556 1883 (43592) (7.6.3)


## துயருடன்...



கலங்கரை விளக்கொன்று
கானல் நீராய்க் கரைந்த மாயமென்ன....

கடந்த 09.01.2014 சிவபதமடைந்த எமது மூத்த அச்சக உரிமையாளர்

அமரர்

### கணபதிப்பிள்ளை சிவகுரு

[ஸ்தாபகர், தமிழ்ப் பூங்கா அச்சகம்]

அவர்களின்

பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். மாவட்ட அச்சுத்துறையினர் சார்பில்
**கரிகணன் பிறிண்டேர்ஸ்**
இல. 681, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

# இளைஞரைக் காணவில்லை

வலி. வடக்கு, ஜன. 12

ஏழாலை வடக்கைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காணாமற் போயுள்ளார் என்று சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. ஏழாலை வடக்கு சிவகுரு கடையடியைச் சேர்ந்த திருஞானசெல்வம் சயந்தன் (வயது-16) என்ற வாய்பேச முடியாதவரே காணாமற் போயுள்ளார். புதன்கிழமை மதியம் வரை வீட்டில் இருந்த அவர் சைக்கிளையும் எடுத்துக் கொண்டு சென்றிருந்தார் என்றும் இன்று வரை வீடு திரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-86)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி இரத்தினம்மா (துணைவி)



கொட்டுடை துணைவியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இரத்தினம்மா நேற்று (11.01.2014) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான திரு.திருமதி நாகலிங்கத்தின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனை வியும் காலஞ் சென்ற வர்களான மார்க்கண்டு தம்பதி யரின் மருமகளும் காலஞ் சென்றவர்களான இராச லட்சுமி கந்த சாமியின் சகோதரியும் ஆவார். அன்னா ரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.01.2014) ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத் தில் மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பெறாமக்கள்

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் பூபாலசிங்கம் (துரை)



யாழ்ப்பாணம், கச்சேரியடி, 22/1, பாரதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரை என்று அழைக்கப்படும் சுப்பிரமணியம் பூபாலசிங்கம் நேற்று முன்தினம் (10.01.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-அருளம்மா தம்பதியரின் புதல்வனும், பத்மாவதியின் அன்புக் கணவரும் சின்னத்துரை-இராசம்மா தம்பதியரின் மருமகனும், ஜெயா, சீலன் (ஆட்டோ) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமார், யசிதா ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற பவளம், ரெத்தினம், கிளி, ராஜேஸ்வரி, லீலாவதி, ராசன், குலம், நதி, முருகையா ஆகியோரின் அன்புச் சகோதரனும், டிசாந், உஷாந், தர்சனா, மிதுஷன், பானுஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C/10778)(10.14) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இரத்தினசிங்கம் மகேந்திரன் (குட்டி)



மாங்குளத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் மகேந்திரன் (குட்டி) நேற்றுமுன்தினம் (10.01.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் நாகம்மா தம்பதியரின் (இந்தியா) அன்பு மகனும், இராமேஸ்வரி (கலா) அவர்களின் பாசமிகு கணவரும், பிரசன்னா (கனடா), நிருசன்னா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராஜேந்திரன் (கனடா), இராஜேஸ்வரி (இந்தியா), காலஞ்சென்றவர்களான இரஃணேஸ்வரி, அரசரட்ணம் (அரசன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.00 மணியளவில் 137, கோயில் குளம், வவுனியா எனும் தற்காலிக முகவரியில் நடைபெற்று, பூதவுடல் கோவிற்புதுக்குளம் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

137, கோயிற்குளம்,
வவுனியா. (42297) (12.3-6)

தகவல்:
குடும்பத்தினர்.
0778612291

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை பாஸ்கரன்

(ஆசிரியர், யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
முன்னாள் ஆசிரியர். யா/இந்துக் கல்லூரி)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பாஸ்கரன் (ஆசிரியர், யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) கடந்த (09.01.2014) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் பார்ப்பதிதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான Dr. கதிரேசு, கிருஷ்ணமணி மற்றும் சந்திரகாந்தா ஆகியோரின் அன்பு மருமகனும், சுமித்திராவின் பாசமிகு கணவரும், மஹீதரனின் அன்புத் தந்தையும் பிறேமாவதி, காந்திமதி, சறோஜாவதி, ஶ்ரீதரன், சிவபாலன், காலஞ்சென்ற பானுமதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலகிருஸ்ணன், செல்வராஜன், ஆனந்தக் குமாரசுவாமி, ஞானபூரணி, கலாவல்லி, சிவசோதிநாதன்,பிரணதார்திஹரன், கதிர்மணி, கிருஷ்ணமணி, சுரேஸ்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கோகிலவாணி, நடராஜா, சிவ யோகம் மற்றும் காலஞ் சென்ற சாந்தி ஆகியோரின் சகலனும், தீனஜா, சஜீரன், தனுஜா, சரண்ஜன், குழலி ஆகியோரின் பெரியப்பா வும், பிரியந்தினி, மதுரந்தினி, சாந்தமீனா, சசீதரன் ஆகியோரின் சிறிய தந்தையும், சஞ்சீவ், ரஜீவ், பிரதீப், புருஷாத், நாந்தகி, அபிராம், உமாகாந், அனுஷா, ஜோலான் ஆகியோரின் மாமாவும் ஆவார். அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று 12.01.2014 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் இடம் பெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

481, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 9337

தகவல்:
குடும்பத்தினர்.


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



T.C.T. பல்பொருள் விற்பனை நிலையத்தில்
புதுப்பொலிவுடன் பொங்கல் பொதிகள்,
பொங்கல் பானைகள் விற்பனைக்குத் தயார்!

பொங்கல் பொதியினை முதன் முதலில் அறிமுகம் செய்த
உங்கள் T.C.T யில் இம்முறையும் புதுப்பொலிவுடன்
பொங்கல் பொதிகள் உங்கள் முன்னிலையில்

**பொதிகளின் விலை விவரம்**

| 1kg பொதி | 2kg பொதி | 3kg பொதி |
|---|---|---|
| 650.00 | 880.00 | 1250.00 |

மிகக் குறைந்த விலையில் நிறைவான பொங்கலுக்கு, தரம் மிக்க எல்லாப் பொருள்களும் ஒரே பொதியில்!

அத்துடன் பொங்கல் பொதியில் உள்ள ஊதுபத்தி பைக்கற்றில் உள்ள பரிசில்களை வழங்கும் அதிர்ஷ்ட சிட்டைகளும் உள்ளன.
அதில் உள்ள அதிர்ஷ்டத்தைப் பரிசோதியுங்கள்.

"உங்கள் நிறைவினை மற்றவர்களிடம் தெரிவியுங்கள்
உங்கள் குறைகளை எம்மிடம் தெரிவியுங்கள்"

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
நலன்விரும்பிகள் அனைவருக்கும்
எமது பொங்கல் வாழ்த்தினைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

"அறப்பணியே முதற் பணி"

தொலைபேசி இல : 021 745 1895
077 751 1285

527, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி/10773)(10.6)


## கண்ணீர் அஞ்சலி



எமது அன்புச் சகோதரர்
குமார் அண்ணா (க. ராஜ்குமார்)
அவர்களின் பாசமிகு அப்பம்மா

### செல்லம்மா சுப்பிரமணியம்

கடந்த 09.01.2014 அன்று இறைபதம் எய்தினார். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நண்பர்கள்
வீரமாகாளி அம்மன் கோயிலடி.


வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

➡ 220ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான மிகக் குறைந்த கட்டணம்.
➡ வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், அன்பளிப்புப் பொருட்கள் உணவுப் பண்டங்கள் என்பவற்றை மிகவிரைவாக அனுப்பிட.

உங்கள் இல்லங்களில் இருந்தவாறே பொதிகளை அனுப்பிட தொடர்பு கொள்ளவும் 0766858509



11Kg மேற்பட்ட பொதிகளுக்கு மிகக் குறைந்த கட்டணம்

3-5 வேலை நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்

வெளிநாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்துகொடுக்கப்படும்.

**திருமுருகன் கொம் நெற்**
இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7835

➡ இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
➡ இல. 30, [illegible]
➡ பிரதான வீதி, சங்கானை.
➡ இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
(HNP வங்கிக்கு அருகாமையில்)

TCN EXPRESS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## முத்தர் பொன்னம்பலம்



சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி (மடத்தடி)யைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட முத்தர் பொன்னம்பலம் நேற்றுமுன்தினம் (10.01.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தர் -வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - கனகம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்புச் சகோதரனும், கோகிலாம்பாள் (ஜேர்மனி), இராகவன் (ஜேர்மனி), இராசதுரை (சுவிஸ்), அருந்ததி ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருபாகரன் (ஜேர்மனி) மாலினி (ஜேர்மனி), பாமினி (சுவிஸ்), பரமேஸ்வரன் (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி - ஊழியர்) ஆகியோரின் அன்பு மாமனும், யதுசன், மிதுசன், திருசிகா, ரஞ்சித், அஜித்தன், சபேசன், டிலாஜினி, சந்செயன், ராஜினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.01.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி கிந்திட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி. (42280) (2.6.46) தகவல்: குடும்பத்தினர்

## திருமதி பரமேஸ்வரி சின்னத்தம்பி



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி சின்னத்தம்பி கடந்த (10.01.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் (சாக்கர்) - நாகம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - சின்னாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் நல்லைநாதன், கமலவல்லி, கமலேஸ்வரி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு (முன்னாள் யா.பலநோக்கு கூ.ச. களஞ்சிய பொறுப்பாளர்) மற்றும் அம்பிகாவதி, சிவநாதன் ஆகியோரின் அன்புத்தாயும் நாகரட்ணம், சந்திரபோஸ், விஜயலக்சுமி, ஸ்ரீகுமார், வசந்தி ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான நடராசா ,கனகம்மா, மயில்வாகனம், கந்தசாமி, சண்முகநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தயாளினி - ஞானசுந்தரம், ஜெயந்தினி - மதியழகன், பாமினி (ஆசிரியை யாழ். இந்து மகளிர் கல்லூரி) - கேதீஸ்வரன் (முகாமைத்துவ உதவியாளர்-அஞ்சல் திணைக்களம் யாழ்ப்பாணம்), தயாகரன்-சசிலா, சந்திரவதனா - பிரதீபநிதி (தீபன்), சஞ்சீவன் - சம்யுதா, கஜேந்தினி - ஜெயந்தன், துவாரகா (முகாமைத்துவ உதவியாளர் பிரதேச செயலகம்-சண்டிலிப்பாய்)- செல்வசேகரன், ஸ்ரீகாந், அபிராமி (ஆசிரியை உடையார்கட்டு ம.வி), காயத்திரி, உமாசங்கர், நமீதன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஐங்கரன், சாரங்கா, இசையழகன், மாதங்கி, மாலதி, கார்த்தீபன், சங்கவி, ஆரணி, விதுஸ், சனோஸ், ஜதீஸ், டிலான், கெவின் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் துண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

44, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி. (42296) (4.6.3)
தகவல்: குடும்பத்தினர்.

"உறுதியாக சொல்கிறேன் நீர் இன்று வான்வீட்டில் என்னோடு இருப்பீர்" லூக்கா (23: 43)

## திருமதி அசெம்ரா (பொன்ராணி) பற்குணம்



குருநகரைப் பிறப்பிடமாகவும் 4 ஆம் கட்டை, ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட அசெம்ரா பற்குணம் 09.01.2014 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பற்குணத்தின் (பெரியதம்பி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சவிரியான்குட்டி-அரியமலர் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-இரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும், நிர்மலறஞ்சன், சேகர், றகு, அன்ரன், றஜனி, அமல், கவிதா, விமல் ஆகியோரின் அன்புத்தாயும், சியாமினி, சுமதி, சுபா, சுகி, றமா, சுறேனி, லங்கன் ஆகியோரின் அன்பு மாமியும், நிலூட்சியா, றெஜினோல்ட், கௌசல்யா, ஸ்ரெபானா, லியானா, சர்மிகா, றக்ஷிகா, ஜோவியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (13.01.2014) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணியளவில் மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு காக்கைதீவு சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4 ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை. (42206)(3.6.4)
தகவல்: கணவர், பிள்ளைகள், மருமக்கள்.

## கால்கோள் விழா எதிர்வரும் 16இல்

தென்மராட்சி, ஜன.12

பாடசாலைகளில் தரம்-1 இல் மாணவர்களை இணைக்கும் கால்கோள் விழா எதிர்வரும் 16ஆம் திகதி அனைத்துப் பாடசாலைகளிலும் நடத்தப் படவுள்ளது. இதன் பிரகாரம் மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய கால்கோள் விழா 16ஆம் திகதிகாலை9மணிக்கு வித்தியாலய நூற்றாண்டு விழா மண்டபத்தில் இடம் பெறும்.

வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் இடம் பெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக கொமர்ஷல் வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் ரி.பிரஜீவ் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி முதன்மை ஆசிரியர் ந.ஸ்ரீகாந்தா, நுணாவில்குளம் கண்ணகை அம்பாள் ஆலய நிர்வாக உறுப்பினர் இ.வசிகரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ந-9)

## பொங்கல் விழா

வவுனியா, ஜன.12

முருகனூர் சாரதா வித்தியாலயத்தின் பொங்கல் விழா நாளை இடம்பெறவுள்ளது.

காலை 9 மணியளவில் பாடசாலை அதிபர் பி.நேசராசா தலைமையில் இந்தப் பொங்கல் விழா இடம் பெறவுள்ளது.

பொங்கல் தொடர்பான சிறப்புக் கலை நிகழ்வுகளும் இங்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-421)

## பட்டம் விடும் போட்டி

வல்வெட்டித்துறை, ஜன.12

வல்வெட்டித்துறை விக்னேஸ்வரா சனசமூக நிலையம் நடத்தும் வருடாந்த பட்டம் விடும் போட்டி தைப்பொங்கல் தினமான நாளை மறுதினம் 14ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெறும் என சனசமூக நிலையத்தின் செய [illegible] அறிவித்துள்ளார். (க)


# இதய அஞ்சலி



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில்
விலங்கியல் ஆசானாய் விளங்கி
அறிவூட்டிய
ஐயாத்துரை பாஸ்கரன்
அவர்களின் மறைவுக்கு எமது
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

1991 ஆம் பிரிவு மாணவர்கள். (42259) (2.6.3)

# கண்ணீர் அஞ்சலி



யாழ்.இந்து அன்னையின்
மைந்தர்களுக்கு விலங்கியல்
உயிரியல் ஆசானாய்
வழிகாட்டிய முன்னாள்
ஆசிரியர்
ஐயாத்துரை பாஸ்கரன்
அவர்களின் மறைவுக்கு எமது
கண்ணீர் அஞ்சலிகளைச்
செலுத்துவதோடு, அன்னாரின்
ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம். (42258) (2.6.3)

பழைய மாணவர் சங்கம்.
யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஜெயலக்சுமி பாலசிங்கம்



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கந்தர்மடத்தை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி ஜெயலக்சுமி பாலசிங்கம் 09.01.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லலிங்கம் - ராசமணி தம்பதியரின் மூத்தபுதல்வியும், காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம்- மாரிமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பரராஜசிங்கம் பாலசிங்கம் அவர்களின் அன்புத்துணை வியாரும், தனேஸ்வரி, கணேஷ் (கொழும்பு), புவனேஸ்வரி, லோகநாதன் (கனடா), சோமநாதன், மகேஸ்வரி, ஜெக தீஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2014) ஞாயிற்றுக் கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (சி10744) (12.3.6)

208,பலாலிவீதி,கந்தர்மடம்.0212226926 தகவல்: குடும்பத்தினர்

## செல்லம்மா சுப்பிரமணியம்




வட்டுக்கோட்டை, சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும், 362, அரசடி வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லம்மா சுப்பிரமணியம் 09.01.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2014) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (2.6.3)(42214)

நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தகவல்: பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## வல்லிபுரம் கதிரவேலு (மீசை)



குடத்தனையைப் பிறப்பிடமாகவும், மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கதிரவேலு (மீசை) நேற்று (11.01.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.10.00 மணிக்கு கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி. (42291) (12.3-6)
தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிவிற்பனைக்கு

யாழ்ப்பாணம், கச்சேரிக்கு அண்மையாக கச்சேரி-நல்லூர் வீதியில் 1¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(41783)(4.6.3) தொடர்புக்கு:077 712 0968

## வீடு வாடகைக்கு

A9வீதி, கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு அருகிலும், மின்சாரசபை (Ceylon Electricity Board-Power House)முன்பாகவும் உள்ள சகல வசதிகளையும், வாகனத் தரிப்பிடம் உள்ளடக்கியதாகவும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: **077 361 8619**

## தொழில்வாய்ப்பு

மலர்ந்திருக்கும் பிரகாசமான புத்தாண்டில் திறமையுள்ள உங்களுக்கு தொழில் வாய்ப்பு துறைமுகம் (தனியார்) சாதாரண ஊழியர்கள், தச்சர், பெயின்டிங், வெல்டர் மற்றும் விமான நிலையத்தில் (தனியார்) சுத்திகரிப்பாளர்/கேட்டரீங்/லொன்றி பிரிவுகளுக்கு 18-45 ஆண், பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் 18000/= -32 000/= உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில் தரப்படும். (43591)(4.6.3)
தொடர்பு: 077 431 2176/077 556 1883

## தேவை

கட்டட நிர்மாணத்துறையில் தேர்ச்சி பெற்றவரா? மேசன்/தச்சர்/வெல்டர்/பெயின்டர்/இலற்றீசியன் (1200/=-1500/=) கை உதவியாளர் (800/=, 1100/=) தங்குமிடம், உணவு, வசதி உண்டு. (கொழும்பை அண்மித்த பிரதேசங்கள், யாழ், கம்பஹா, கண்டி) (43590)(4.6.3)
(18-45 வயது ஆள்கள் தேவை)
தொடர்பு: 077 556 1883

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி, பாண்டியன் தாழ்வு கொழும்புத் துறைறோட்டுக்கு அண்மையில் 6 பரப்பில் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
(41784)(4.6.3) தொடர்புக்கு:077 614 6434

## வீடு வாடகைக்கு

நல்லூர் வடக்கு, சட்டநாதர் வீதியில் மாபிள் நிலத்துடன் இணைந்த குளியலறை 2, கொமெட் வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 548 4726/ 075 721 7086 (42220)(40.6.3)
Email: abinaya12@hotmail.com

## NEW ADMISSION

**ADVENTIST INTERNATIONAL PRE-SCHOOL, 850, HOSPITAL ROAD, JAFFNA.**

NEW ADMISSION TO THE PRE-SCHOOL
APPLICATIONS ACCEPTED FROM JANUARY 13th 2014 TO JAN.31st 2014.
PLEASE HURRY!
HEAD MISTRESS

## உடனடியாகத் தேவை

எமது தனியார் காரியாலயத்திற்கு சிங்களம் பேசக்கூடிய தமிழ் பெண் தேவை. (வயது 19-28) (எழுதுவினைஞர் Clerk) சம்பளம் 12000/= தனியார் வகுப்புகளுக்கு செல்லாதோர் அவசியம். வவுனியாவை அண்மித்தோர் விரும்பத்தக்கது.
தொடர்பு:
Sakya Pvt Ltd
No. 103/1, Station Road, Vavuniya.
077 556 1883 (43049)(7.6.3)

## பரிசளிப்பு நாள்

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் பரிசளிப்புத் தினம் பாடசாலை மண்டபத்தில் இன்றுஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.
பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும், கௌரவ விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமாரும்கலந்துகொள்ளவுள்ளனர்.
பரிசில்களை திருமதி சித்ரா குருகுலராஜா வழங்கிக் கௌரவிப்பார். (ஓ-35)

## நெல்லியடியில் பதுக்கிய அங்கர் பால்மா பைக்கற்றுகள் மீட்பு

நெல்லியடியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த அங்கர் பால்மா பைக்கற்றுகள் மீட்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாண வீதி, கொடிகாமம் வீதிகளில் உள்ள வியாபார நிலையங்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 100 இற்கும் மேற்பட்ட அங்கர் பால்மாப் பைக் கற்றுகளே பாவனையாளர் அதிகார சபையினரால் நேற்றுமுன் தினம் மீட்கப்பட்டன.
கைப்பற்றப்பட்ட பால்மாப் பெட்டிகளை விற்பனைக்காக காட்சிப்படுத்த உத்தரவிட்டதோடு பொருள் களைப் பதுக்கிய குற்றத்துக்காக அவர்களுக்கு எதிராக வழக் கும் தாக்கல் செய்யப் படவுள்ளது. (ஓ-35)

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
## வழங்குநர்களையும், ஒப்பந்தகாரர்களையும்
## பதிவு செய்தல் - 2014

சபையானது! 2014ஆம் ஆண்டுக்கான கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் சேவைகளை வழங்குவதற்குத் தம்மைப் பதிவுசெய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

### (I) பொருள்கள்

01. காகிதாதிகள் எழுது பொருள்கள்
02. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள்)
03. நூலகங்களுக்கான நூல்கள்
04. துணி வகைகள்
05. கட்டட பொருள்கள் (சீமெந்து, ஓடுகள், கம்பி வகைகள்)
06. கற்கள், மணல்
07. தீந்தைகள் வகைகள் (Paints) நிறந்தீட்டும் பொருள்கள்
08. நீர் வழங்கும் குழாய்கள் மற்றும் ஏனைய பொருள்கள்
09. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருள்கள்
10. மின் வழங்கு பொருள்கள், மின் பாவனைப் பொருள்கள்
11. எரிபொருள்கள், உராய்வு நீக்கிகள்
12. இரும்புப் பொருள்கள்
13. தீராந்திகள், பலகைகள், சட்டங்கள்
14. பனை மரங்கள், சலாகைகள்
15. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின் கலங்கள்
16. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
17. சுத்திகரிப்புப்பொருள்கள், கிருமிநாசினிகள்
18. பாதணிகள், தோற்பொருள்கள்
19. அலங்காரப் பொருள்கள்
20. இலத்திரனியல் பொருள்கள்.

### (II) சேவைகள்

01. அச்சிடுதல்
02. மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரம் திருத்தல்
03. வாகனங்களுக்கான ரியூப் ஒட்டுதல்
04. ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
05. மின் சாதனங்கள் திருத்தம், மீள மின் வலுவூட்டல்
06. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல்
07. வாகனங்கள் சுத்திகரிப்பு
08. கோலவுடை தைத்தல்
09. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம்,சுத்திகரிப்பு (Service)
10. இறப்பர் முத்திரை தயாரித்தல்

### (III) ஒப்பந்த வேலைகள் (ICTAD பதிவு உள்ளவர்கள் மட்டும் விண்ணப் பிக்க முடியும்)

01. கட்டட நிர்மாண வேலை
02. கிணறு அமைத்தல்
03. வீதி நிர்மாணம்/திருத்த வேலைகள்

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களைச் சபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00 (வரிகள் நீங்கலாக) செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் - 2014" எனக் குறிப்பிட்டுப் பதிவுத்தபால் மூலம் **"தலைவர்", தலைமை அலுவலகம், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
விண்ணப்பப்படிவங்கள் 31.01.2014 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.
மேலதிக விபரங்களுக்கு:024 - 222 5737 அல்லது 024 - 205 0067 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்

(சி/10745) (45.3) தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை

## அச்சக வேலையாள்கள் தேவை

கொம்பியூட்டர் தெரிந்தவர்கள் அச்சியந்திரம் இயக்குபவர்கள் (Ryobi - 500N) அச்சகங்களில் வேலைசெய்து கொண்டிருப்பவர்கள் முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் உடன் தொடர்பு கொள்ளவும். கேட்கப்படும் சம்பளம் வழங்கப்படும். யாழ்.நகரில்.
தொடர்பு:
**077 123 4831/077 051 5984**

## சிறுநீரகம் தேவை

ஆண் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு B+ அல்லது O குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை.
வயது எல்லை 30-50 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
(42207)(7.6.3) தொடர்பு: **076 661 1022**

## கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரரின் பொங்கல் தினத்தை முன்னிட்டு மாநகரம் காணாத மலிவு விற்பனை

★ சாறி ★ சல்வார் ★ சேட் ஆகியவற்றில்
**01 வாங்கினால் 01 இலவசம்.**
**சனி, ஞாயிறு, திங்கள், செவ்வாய்**
ஆகிய நான்கு தினங்கள் மட்டுமே.
பெற்றுக்கொள்ளலாம். *(நிபந்தனைக்குட்பட்டது)*
114, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
**T.P: 021 221 9393** (42227)(6.2.3)

## வேலை ஆள்கள் தேவை

எமது நிறுவனதிற்கு பின்வரும் பணியாளர்கள் உடன் தேவை

* பாரஊர்தி சாரதிகள்
* JCB இயக்குநர்கள்
* உதவியாளர்கள்
* களஞ்சியப் பொறுப்பாளர்
* மேற்பார்வையாளர்
* அலுவலக உதவியாளர்கள்
* சந்தைப்படுத்துநர்
* ஓட்டோ எலக்ரிஷன்

அனுபவம் / தகுதி / ஆர்வமுடையவர்கள் சுயவிவரத்துடன் இம் மாதம் 20ஆம், 21ஆம், 22ஆம் திகதிகளில் முற்பகல் 10.30 -4.00 வரை நேரடியாக வரவும்.
தொழில் பயிலுநர்களும் விண்ணப்பிக்கலாம்.
**மாருதி றெடிமிக்ஸ் பிறைவேற் லிமிற்றெட், கேரதீவு வீதி, நாவற்குழி.**
தொடர்பு: **021 205 0999**
**Email Maruthvreadvmix@gmail.com**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள எமது வீட்டில் தங்கி நின்று பணி செய்வதற்கு பணிப்பெண் தேவை. தொடர்பு : 077 087 0817 (42279)(7.6.3)

## ஜேர்மன் டொச் வகுப்பு

German, Swiss செல்ல இருப்போருக்கு டொச்மொழி வகுப்பு ஆரம்பமாய் உள்ளது. இம்மாதம் முதல் சேர ஆரம்பிக்கலாம். வீடு வந்தும் கற்பிக்கமுடியும். Embassy பரீட்சைக்கு தயார்படுத்தித்தரப்படும்.
(42026)(4.6.3) இடம்: மானிப்பாய் சந்தி, 077 270 7121

## காணி விற்பனைக்கு

அளவெட்டியிலிருந்து தெல்லிப்பழைக்குப் போகும் றோட்டில் ஜெயா பிறஸ். சந்தியிலிருந்து ஏறத்தாள 75 யார் தூரத்தில் (கணேஸ்வரம்) 4 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
(42110) தொடர்பு: **011 494 9234**

## காணி விற்பனைக்கு

வடமராட்சி ஆலங்கட்டை, கொற்றாவத்தை வீதியில் இருந்து 200 மீற்றர் தொலைவில் கண்ணன் கோயிலுக்கு அருகில் முது பனைகளுடன் 8 பரப்பு சதுரக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு : 077 034 4581 (சி/10769)(7.6.3)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நீராவியடியில் கடைச்சாமி வீதியில் 2 பரப்பு வெறும் காணி கிணற்றுடனும் சுற்று மதிலுடனும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 316 4595 (சி/10758)(4.6.3)

## தேவை

கார்த்திகைக் காய்களின் பருவம் இது. நன்கு முற்றிய பச்சைக் காய்கள் தேவை. (41881)(4.6.3)
தொடர்புக்கு:
EK & CO
55/1, ஸ்ரீ மகிந்த தர்மாவத்தை, கொழும்பு -00900
T.P:011267 707 7/011269 772 9

## வீடு வாடகைக்கு

நாவற்குழி, A9 வீதியில், அசோக் லேலன்ட், மாகாணசபைக்கு அண்மையில் சகல வசதிகளுடனான மேல் மாடிவீடு வாடகைக்குண்டு. நிறுவனத்திற்கு ஏற்றது.
தொடர்பு: **077 467 9137**

## Pharmacist தேவை

நெல்லியடி பிரதான வீதியில் உள்ள மருந்தகத்திற்கு முன் அனுபவமுள்ள Pharmacist தேவை. ஆண்/பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. முழு நேரக் கடமையாற்றக் கூடியவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர். (43049)(7.6.3)
தொடர்பு : 021 321 2945

## வீடு வாடகைக்கு

இல.22/1, பிள்ளையார் வீதி, கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கில் (தாஸ்கடைக்கு அண்மையில்) நான்கு அறைகளைக்கொண்ட வீடு இரண்டு வருட வாடகைக்கு உடனடியாக விடப்படும்.
மேலும் LP - Fridge One Door விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: **077 251 7640** (42210) (45.6.3)

## மணமக்கள் தேவை

திருமண வயதினையுடைய மணமகள்- மணமகன்கள் தேவை. எம்மிடம் வெளிநாட்டில் பணிபுரியும் PR பெற்ற மணமக்களின் ஜாதகங்களும், உள்நாட்டு மணமக்களின் ஜாதகங்களும் உள்ளன.
விவாகரத்துப் பெற்ற மணமக்களின் ஜாதகங்களும் தேவை.
உடனடியாகத் தொடர்பு கொள்ளவும் போட்டோ, ஜாதகம் சுயவிவரங்களுடன் வரவும்.
Note: இங்கு ஜாதக பலன்கள், திருமண பொருத்தம், ஜெனன ஜாதக குறிப்பு என்பன எழுதிப் பலன் பார்த்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு : திருமண பொருத்துனர் K.N. கந்தையா சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.
077 007 1128, 077 914 9489 (42284)(7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

யாழ் நகரில் இல. 08, குருசோ வீதியில் அமைந்துள்ள சகல வசதிகள் கொண்ட வீடு விற்பனைக் குண்டு. 2 ½ பரப்பு காணியில் 4 அறைகள், 2 Hall, கராஜ் (Garage), மேலே பல்கனி, சுற்றுமதில், நல்ல தண்ணீர் கிணறு, மோட்டார், தண்ணீர் தாங்கி யாழ் நகர சபை இணைப்புடன் உள்ளது. கண்டி வீதியில் இருந்து 150 யார் தொலைவில் Press Road குருசோ வீதி சந்திக்கு அருகில், மரியன்னை பேராலயத்தில் இருந்து 100 யார் தொலைவிலும் சென். பற்றிக்ஸ், சென் ஜோண்ஸ், சுண்டிக்குளி மகளிர் கல்லூரிகள் மத்தியில் அமைந்துள்ளது.

தொடர்புகளுக்கு: Fr. Paul Nadchethiram OMI

Phone No: 222 8086, Cell No: 077 6913177, 076 6684804

## STUDY IN UK USA




New Zealand
Netherland
Singapore
Canada
Australia

DON'T WORRY
WE WILL HELP YOU

INTERNATIONAL CITY COLLEGE

No: 07, W.A.SILVA MAWATHA, WELLAWATTE, COLOMBO-06.

TEL: 0114 594 104 Hot: 077 12 50 789 FAX: 0112 582722

E-mail: citycollegelanka@gmail.com - Web:icclanka.com

UK, Australia, Canada, USA, New Zealand, Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden etc...

## வங்கியில் பணவைப்பு

Saving book, Fixed Deposit, Statement

3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின்) பணவைப்பு (அரசவங்கிகளில் மட்டும்)

Migration / Skill Migration / Visit Visas / Student Visas / Dependent / Business / Investment,/ New Applications etc...

(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

SKYWALK Visa Solutions

ஸ்கைவோர்க் வீசா சொலுஷன்

No.65, 1/1, Galle Road, Dehiwala. (Food City - 1st Floor)

077-7711905

## கால அவகாசம்

தலைமைத்துவப் பயிற்சிகளின் மூன்றாம் கட்டத்தில் கலந்து கொள்ளும் மாணவர்களின் பல்கலைக்கழக பதிவுகளுக்காக ஒரு வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இப் பயிற்சிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் பெப்ரவரி 7 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. மூன்றாம் கட்டத்துக்காகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்ப்பட்டியலை www.mohe.gov.lk என்ற முகவரியில் அறிந்து கொள்ளலாம். (த-10)

## வீடு வாடகைக்கு

கோண்டாவில் மேற்கு யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடனும் கூடிய மூன்று அறைகளைக் கொண்ட வீடு உண்டு.

தொடர்பு:- 075 0867047

## USED SOLAR PANELS

விற்பனைக்குண்டு

19, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம்.

## DACHSHOUND PUPPIES FOR SALE

PARVO GIVEN
6 WEEKS OLD, LIVER BROWN & BLACK WITH ORIGINAL MARKINGS

T.P : 077 5456126 Kokuvil Jaffna

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம். அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52, Hospital Road, Jaffna.

## வீடு வாடகைக்கு

மிக வசதிகளுடன் போதிய படுக்கையறை, வரவேற்பறைகளுடன் கூடிய வீடு யாழ். மத்திய சந்தைக்கு மிக அருகில் உள்ளது. அரசாங்க உத்தியோகத்தர் மற்றும் வங்கிகளில் வேலைபார்க்கும் சிறு குடும்பத்தினருக்கு மிக வசதியானது. (நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம்)

தொடர்பு:-077 5160291

## கார் விற்பனைக்கு

வங்கி முகாமையாளரது பாவனையிலுள்ள WP KD XXXX, 2005 இல் இறக்குமதி செய்யப்பட்ட சில்வர் நிற TOYOTA COROLLA 121 AUTO கார் உடன் விற்பனைக்குண்டு. விலை பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 072 4108953

## சோதிடம்

கல்வியில் சித்தி கிட்டுமா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? வெளிநாடு போகலாமா? விவாகம் நடைபெறுமா? வியாதிகள் விலகுமா? கேட்டுப் பாருங்கள்!

ஜாதகம், கைரேகை, எண் விஞ்ஞானம் மூலமாகப் பலன் சொல்லப்படும்.

"சிவா சோதிடம்"

100, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(யாழ்/ இந்து மகளிர் கல்லூரியடி)

(42306) (10.14) 077 899 6281

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்றைய தினம் பட்டம் (B.Sc Com.SC) பெற்ற

### சோமசுந்தரம் மயூரன்

அவர்களிற்கு பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். அம்மாவின் கனவை நனவாக்கி அப்பாவின் ஆசையை நிறைவேற்றி தங்கை தம்பியர்க்கு வழி காட்டி நிற்கும் எங்கள் அண்ணா மேலும் பல பட்டங்கள் பெற்று அவனியிலே சீரும் சிறப்புமாக வாழ அம்மாவின் ஆசி வேண்டி வாழத்துகின்றோம் உன் பாசமலர்கள் நாம்

Congratulation Best Wishes

வாழ்த்துவோர் : பெற்றோர், உறவினர்கள்

வேலணை மேற்கு 7 ஆம் வட்டாரம் வேலணை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று (11.01.2014) நடைபெற்ற 29 ஆவது பட்டமளிப்பு விழாவில் 2013 நுண்கலை மாணி (நடனம்) B.F.A (Dance) 2nd Class பட்டம் பெற்ற செல்வி

### கோமகள் நகுலேஸ்வரன்

அவர்களைப் பாராட்டுவதுடன் அவர் மென் மேலும் பட்டங்களைப் பெற இறைவனை வேண்டி ஆசி கூறுகின்றோம்.

Congratulations Best Wishes

வாழ்த்துவோர்
நகுலேஸ்வரன் (அப்பா),
சாந்தநாயகி (அம்மா),
ஜனகன் (அண்ணா), கோபிகா (அண்ணி),
சஞ்சீவன் (சின்னண்ணா)

24/3 சிவகுருநாதர் வீதி,
நீராவியடி
யாழ்ப்பாணம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 29 ஆவது பட்டமளிப்பு விழாவில் மருத்துவமாணி (MBBS) பட்டம் பெற்ற



Congratulations

### Dr. சிந்துஜானி கணேசரட்ணம்

அவர்களைப் பாராட்டுவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்வடைய வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்
அத்தான் றிஜினோல்ராஜ்
அக்கா தாரணி,
மதுரிகா, அஷ்மிகா

Best Wishes

41/5, முருகமூர்த்தி றோட்,
வண்ணார்பண்ணை.

## நீங்கா நினைவலைகளில்...

4-ஆம்-ஆண்டு 17-ஆம்-ஆண்டு



தோற்றம் 25.04.1943 — மறைவு 26.12.2009

தோற்றம் 28.01.1943 — மறைவு 18.12.1996



திதி: 09.01.2014

### அமரர் Dr.கந்தையா செல்லையா சோமசுந்தரம்

பால்ய வயதிலேயே பெற்றோரை இழந்தாய் - ஆயினும்
பெரும் கல்வியும் நல்வாழ்வும் உன் உழைப்பினால் அடைந்தாய்
ஏழை எளியவரையும் ஆதரவற்ற மழலைகளையும் அரவணைத்தாய்
காலன் அழைத்தபோதும் கடமையே கருத்தாய் இருந்தாய் - உங்கள்
மறைவின் பின்னும் உங்கள் பணி முடிவின்றித் தொடரும்

### திருமதி நாகேஸ்வரி சோமசுந்தரம்

நாள்கள் பல நூறு ஓடி மறைந்தாலும் - எம்
நெஞ்சில் நிலைத்திருக்கும் பாசதீபம் - உங்கள்
நினைவுகள் என்றும் அழியாது
கண்ணின் இமை போல எமைக் காத்த அம்மா - உங்கள்
கனவுகள் யாவும் நிறைவேறும்

(C/10768)(2.6.3)

உங்கள் பிரிவால் துயருறும்;
பிள்ளைகள்: சோ. ஜகத்ஜயன், சோ. சா[illegible] சோ. [illegible]
மருமகள்மார், பேரபிள்ளைகள், சகோதரிகள், பெறாமக்கள்.

தகவல்:
சோ. ஜகத்ஜயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமக்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1981 மூல நட்சத்திரம், லக்கின செவ்வாய், பாவம் (49) 5 '2" உயரமுடைய தனியார் நிறுவன கணக்காளருக்கு மணமகள் தேவை.

1986 பூரட்டாதி நட்சத்திரம் பாவம் 22, 5' 3" உயரமுடைய மணமகளுக்கு மணமகன் தேவை.

தொடர்பு:- 077 0443645

## சாரதி தேவை (அமைய அடிப்படை)

- வயது: 45 வயதிற்கு மேல்
- வதிவிடம்: யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேசத்தவர்கள் மாத்திரம்.
- முன் அனுபவம் மிக முக்கியம். உடனடியாக வேலையில் இணையத் தயாராக இருத்தல் வேண்டும்.
- வேதனம்: நாளொன்றுக்கு 500/=, மேலதிக நேரப்படி உண்டு.

9 மணி நேர வேலை, 1 மணித்தியாலம் உணவு இடைவேளை.
நேர்முகத் தேர்வு: 12.01.2014 பி.ப. 5.00 மணிக்கு.

திசைகாட்டி (பிறை)லிமிற்,
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

லண்டன் / கனடா / அமெரிக்கா / சுவிஸ் / ஜேர்மனி பிரான்ஸ் / இத்தாலி / டென்மார்க் / அவுஸ்திரேலியா நியூஸிலாந்து மற்றும் ஏனைய நாடுகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கு

## வங்கியில் பணவைப்பு

அரச வங்கியில் 3, 6, 12 மாதங்களுக்கான முன் பின் வங்கியில் பணவைப்பு

Saving Book - FD - Statement

For: Student | Business | Migration | PR | Visit Family | Dependant | Refused | Visas

077 4789289

விசா பெற்றுக்கொள்வதற்கு தேவையான சகல உதவிகளும் எம்பசி வேலைகளும் செய்து தரப்படும்

No.52, Davidson Road, Colombo -04.

நேரத்தை முன்கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்.

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 150

# உடல்நிறை குறைப்பு ஓர் இலகுவான கலை

## பகுதி 3

சென்றவாரத் தொடர்ச்சி..........

உடல் நிறையை குறைத்துக்கொள்வது மட்டும் எமது இலக்காக இல்லாது எமது உடலின் ஆரோக்கியத்தையும் தொழிற்பாட்டு வீதத்தையும் அழகையும் மேம்படுத்தி உடல்நிறையை குறைத்துக்கொள்வது எவ்வாறு என்று சிந்திக்க வேண்டும். இதற்கு ஊட்டச்சத்துள்ள உணவுகளும் உடற்பயிற்சியும் இன்றியமையாதவையாக அமைகின்றன.

உடல்நிறையை குறைப்பதற்கு எந்த வகையான உணவுவகைகளை தெரிவு செய்ய வேண்டும் என்று சுருக்கமாக வரைவிலக்கணப்படுத்துவதாக இருந்தால் "அந்த உணவு வகைகள் உடல்நிறை அதிகரிப்பை ஏற்படுத்தாத கலோரிப் பெறுமானம் குறைந்த ஊட்டச் சத்துக்கள் நிறைந்த சுவையான, பசியைப் போக்கி திருப்தியைக் கொடுக்கவல்ல உணவு வகைகளாக இருக்க வேண்டும்" என வரையறுக்கலாம். இந்த வகையான உணவு வகைகளைத் தெரிவு செய்தால் மாத்திரமே எமது நிறைகுறைப்பு முயற்சியை ஊக்கத்துடனும், மகிழ்ச்சியுடனும் முன்னெடுக்க முடியும். பசி கிடந்து, பட்டினி கிடந்து, துக்கப்பட்டு, துயரப்பட்டு, கஷ்டப்பட்டு, கவலைப் பட்டு, வெட்கப்பட்டு, வேதனைப்பட்டு செய்யும் நிறைகுறைப்பு ஆரோக்கியத்துக்கு வழிவகுக்காது. இதற்கு மாறாக ஒட்டகங்கள் போல ஒரேயடியாக உண்டு எதிர்காலத்துக்கு தேவையான உணவையும் உடலிலே சேமித்துவைக்க முயன்றால் அதுவும் உடல்நலத்துக்கு நல்லதல்ல.

சரியான உணவு வகைகளை தெரிவுசெய்து உண்ணுவோமாயின் உடலின் வினைத்திறன் அதிகரிப்பதுடன் உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்ற ஊக்கமும் பிறக்கும்.

சில சமயங்கள் உடல்நிறை அதிகரிப்பு சில நோய்களின் அறிகுறியாகவோ அல்லது சில வகை மருந்துகளின் பாவனை காரணமாகவோ இருக்கலாம். அதிகரித்த உடல் நிறை காரணமாக சிலருக்கு சில நோய்கள் ஏற்பட்டிருக்கலாம். அவை கண்டறியப்பட வேண்டும். ஆனால் அநேகமானவர்களில் தவறான உணவுப் பழக்கங்களும் போதிய பயிற்சி இன்மையுமே இந்தப் பிரச்சினைகளுக்கு காரணமாக அமைகின்றன.

உடல் நிறை குறைப்பு நடைமுறைப்படுத்துவதற்கு தடைக் கல்லாக, ஒரு விடயம் பொதுவாக நிறை கூடிய அனைவரிலுமே காணப்படும். அந்த தடைக்கல் அடையாளம் காணப்பட்டு அப்புறப்படுத்தப்பட வேண்டும். இதுவே நிறை குறைப்பு நடவடிக்கையின் முதலாவது படிநிலை. இந்தத் தடைக்கல் அகற்றப்பட்டால் மட்டுமே நிறை குறைப்பை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி அளவான உடல் நிறையைத் தொடர்ந்து பேண முடியும்.

அது என்ன தடைக்கல்? அதை எவ்வாறு அடையாளப்படுத்தி அகற்றுவது?

"நான் உணவு விடயத்திலே கவனமான ஒருவர். உண்ணும் அளவு எவ்வளவோ குறைவு. சில வேளைகளில் உண்ணுவதே இல்லை, பல உணவு வகைகளைத் தவிர்த்துவிட்டேன். நிறை ஏன் அதிகரித்து வருகின்றது என்பது ஒரு புரியாத புதிராக இருக்கிறது" என்று எண்ணிக்கொள்ளும் ஓர் ஆழமான மன உணர்வே அந்தத் தடைக்கல் ஆகும்.

"உணவு விடயத்தில் எங்கோ தவறு நடக்கிறது. இதுவே நிறை அதிகரிப்பிற்கு அடிப்படை. அதனை நிவர்த்தி செய்ய வேண்டும்" என்ற விடயத்தை அவர்களது மனது ஏற்றுக் கொள்ள மறுக்கும். நிறை அதிகரிப்பிற்கு வேறு ஒரு விடயம்தான் காரணம் என நிறுவ மனம் எத்தனிக்கும்.

இந்தத் தடைக் கல்லைத் தகர்த்து எறிவதற்கு உணவு வகைகளின் கலோரிப் பெறுமானங்கள் பற்றிய அறிவும் எமது உடலின் கலோரி தேவைகள் பற்றிய அறிவும் பேருதவியாக அமையும்.

தொடரும்......

**Dr.S.சிவன்சுதன், MD,**
பொது வைத்திய நிபுணர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# குழந்தைகளினதும், இளம்பிள்ளைகளினதும் உணவூட்டல் முறைகள்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

குழந்தைக்கு எத்தனை தடவைகள் உணவு வழங்கப்பட வேண்டும் என்பது, குழந்தை உண்ணும் உணவின் சக்தியினளவிலும், கொடுக்கப்படும் உணவில் எவ்வளவை குழந்தை உட்கொள் கின்றது என்பதையும் பொறுத்தும் அமையும். ஒன்று தொடக் கம் இரண்டு தேக்கரண் டியளவு எண்ணெயை உணவு தயாரிப்பதற்காக பயன்படுத்தும் போது, உணவிலுள்ள சக்தியினளவு அதிகரிக்கும். பொதுவாக மேலதிக ஆகாரம் கொடுக்க ஆரம்பிக்கப்பட்டு 1-2 மாதங்களில் குழந்தை அதற்குப் பழக்கப்பட்டு விடும். பின்வரும் அட்டவணையில் குழந்தைகளின் வயதிற்கேற்ப பொதுவாக வழங்கக் கூடிய மேலதிக உணவுகளும், அளவுகளும், வேளைகளும் தரப்பட்டுள்ளது.

| வயது மாதங்களில் | உணவின் வகையும் தன்மையும் | உணவுவழங்கவேண்டிய தடவைகள் | உணவின் அளவு |
|---|---|---|---|
| 7-8 மாதங்கள் (200 Kcal/d) | நன்றாக கடையப்பட்ட உணவுகள். கடையப்பட்ட சோற்றை கொடுக்கத் தொடங்கி படிப்படியாக, கிழங்கு வகைகள், போஞ்சி, கரட், கீரை வகைகள், மீன், நெத்தலி, இறைச்சி, முட்டை மஞ் சட் கரு என் பன கொடுக் கலாம். | ஒரு நாளைக்கு 2-3 தடவைகள், தாய்ப்பால் தொடர்ந்து கொடுக்கப்பட வேண்டும். | 2-3 தேக்கரண்டி அளவில் தொடங்கி படிப்படியாக அதிகரித்து 8 மாத முடிவில், ஓர் உணவு வேளைக்கு ½ தேநீர் கோப்பை அளவு உணவு வழங்க வேண்டும். |
| 9-11 மாதங்கள் (300 Kcal/d) | சிறு துணிக்கைகளாக வெட்டி சமைக்கப்பட்ட அல்லது கடையப்பட்ட உணவுகள் மேலும் குழந்தை விரல்களால் பிடித்து உண்ணக்கூடிய உணவுகள். | 3-4 தடவைகள். (தாய்ப் பாலிற்கு மேலதிகமாக) பசியைப் பொறுத்து 1-2 தடவை இடைப் பட்ட உணவுகளையும் கொடுக்கலாம். | ¾ தேநீர் கோப்பை அளவு ஒவ்வொரு உணவு வேளைக்கும். |
| 12-23 மாதங்கள் (550 Kcal/d) | குடும்ப உணவுகள் வெட்டப்பட்ட அல்லது ஓரளவு மசிக்கப்பட்ட உணவுகள். | 3-4 தடவைகள் (தாய்ப்பால் உண வின் பின்கொடுக்க வேண்டும்) பசி யைப் பொறுத்து 1-2 தடவைகள் இடைப்பட்ட உண வுகளையும் கொடுக் கலாம். | ஒரு தேநீர் கோப்பை அல்லது அதற்கு சற்று அதிகமாக ஒவ்வொரு தடவையும் வழங்க வேண்டும். |

* உணவு தயாரிப்பதற்கு 1-2 தேக்கரண்டி எண்ணெய் சேர்க்கப்படலாம்.

* உணவு வேளைகளின் பின்னர், கொதித்தாறிய நீர் வழங்கலாம்.

* மேலதிக ஆகாரங்களில் அடங்கியிருக்க வேண்டிய போசாக்குகள் எவை? அனைத்து விதமான போசனைகளையும் பெறுவதற்கு, பலவிதமான உணவுகளை குழந்தைகளுக்கு வழங்குவது முக்கியமாகும். எனினும், ஒரு புதிய உணவை அறிமுகப்படுத்தி, அதற்குப் பழக்கப்படும் வரை 4-5 நாள்கள் கொடுத்த பின்னரே, இன்னொரு உணவை அறிமுகப்படுத்த வேண்டும். புதிதாக ஒரு உணவை அறிமுகப்படுத்தும்போது, அரிதாக ஏற்படக்கூடிய ஒவ்வாமையின் அறிகுறிகளான, தொடர்ச்சியான அழுகை, தோலில் ஏற்படக்கூடிய சிவப்புத் தடிப்புக்கள், சத்தி, வயிற்றோட்டம், இழுப்பு என்பவற்றை அவதானிக்க வேண்டும். அவ்வாறான சமயங்களில் வைத்தியரின் ஆலோசனையைப் பெறுவது அவசியம். ஏழாம் மாதத் தொடக்கத்திலிருந்தே இரும்புச் சத்து அதிகமுள்ள உணவுகளை அறிமுகப்படுத்த வேண்டும். அவையாவன மீன், நெத்தலி, கோழி இறைச்சி, முட்டை மஞ்சட்கரு, ஈரல், கீரை வகைகள், பச்சைக் காய்கறிகள், சோயா, பாசிப்பயறு, கௌபி மற்றும் பேரீச்சம்பழம், மாதுளம் பழம் என்பன வழங்கப்படும். உணவிலுள்ள இரும்புச்சத்து உடலில் நன்றாக உறிஞ்சப்படுவதற்கு விற்றமின் சி அதிகமுள்ள தோடம்பழம், எலுமிச்சை, நெல்லி, வாழைப்பழம், பப்பாசிப்பழம் என்பன வழங்கலாம். ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு பழத்தை மசித்தோ அல்லது ஓரளவு வளர்ந்த குழந்தைகளுக்கு துண்டாக வெட்டியோ கொடுக்கலாம்.

விற்றமின் ஏ அதிகமுள்ள உணவுகளான முட்டை மஞ்சட்கரு, மஞ்சள் பூசனிக்காய், கரட், பப்பாசிப்பழம், மாம்பழம், கரும்பச்சை இலை வகைகள் என்பன ஒவ்வொரு நாளும் சிறி தளவாயினும் சேர்க்கப்பட வேண்டும். ஒவ்வொரு வேளை உணவிலும் தேவையான அளவு கொழுப்பு உணவுகளும் சேர்க்கப்பட வேண்டும். சமைக்கும் போது தேங்காய்ப் பாலோ அல்லது 1-2 தேக்கரண்டி நல்லெண்ணெய் அல்லது மரக்கறி எண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் சேர்ப்பது குழந்தைகளுக்கு வழங்கப்படும் மேலதிக ஆகாரத்திலுள்ள சக்தியை அதிகரிக்க உதவும். மாறாக சமைத்த உணவுகளுக்கு சிறிதளவு மாஜரின் அல்லது பட்டர் சேர்க்கலாம். வழங்கப்பட வேண்டிய கொழுப்பு உணவுகளின் அளவு பிள்ளையின் நிறையைப் பொறுத்ததாகும். அதிக நிறையுள்ள குழந்தைக்கு சிறிதளவு கொழுப்பும் (நல்லெண்ணெய் போன்றன) நிறை குறைந்த குழந்தைக்கு அதிகளவு கொழுப்பு உணவுகளும் தேவைப்படலாம்.

பாலுணவுகளான யோக்கட், தயிர் என்பனவற்றை இடைப்பட்ட உணவுகளாக (Snacks) ஏழாம் மாதத்தின் பின்னர் வழங்கலாம். தயிர் கொடுப்பதாயின், அதற்கு சீனியோ, தேனோ சேர்க்கக்கூடாது.

ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு உணவு தயாரிக்கும் போது சீனியோ அல்லது உப்போ சேர்க்கக்கூடாது.

இயன்றவரைக்கும் வீட்டில் சமைத்த மலிவான சத்தான உணவுகளையே வழங்க வேண்டும். பதப்படுத்தப்பட்ட, பக்கெட்டுகளில் அடைத்த சமைத்த உணவுகளை வழங்குவதைத் தவிர்ப்பது நல்லது.

மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குரிய உணவுகளில் சிறிய, உருண்டையான, கடினமான, துண்டுகளான கடலை, கச்சான், பருப்புகள், மிக்சர் போன்ற உணவுகளை கொடுக்க கூடாது. ஏனெனில், அவற்றை குழந்தை உட்கொள்ளும் போது புரையேறுவதற்கான சந்தர்ப் பங்கள் அதிகமுண்டு.

எட்டு மாதம் முடிந்தபின், உணவுகளை அதிகம் கடைந்து கொடுக்காமல், கையால் மசித்து பிள்ளை ஓரளவு பற்களால் அரைத்து சாப்பிடக் கூடியவாறு வழங்க வேண்டும்.

ஒரு குழந்தையின் வளர்ச்சி வீதம் குறைவாயின், அது உண்ணும் உணவின் சக்தியினளவை அதிகரிப்பதற்காக, பின்வருவனவற்றைச் செய்யலாம்.

1. இடைப்பட்ட உணவுகளான பிஸ்கட், பாண் போன்றவற்றுடன் பட்டர் அல்லது மாஜரின் சேர்த்தல்.
2. பிரதான உணவுகளுடன் சேர்க்கும் எண்ணெயின் அளவைக் கூட்டல்.
3. இயலுமானால் உணவு வழங்கும் தடவைகளைக் கூட்டல்.

குறைந்தபட்சமாக, ஒரு நாளைக்கு வழங்கப்பட வேண்டிய உணவுகளின் அளவும், தடவைகளும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

***Dr.*** *ந.ஸ்ரீசரவணபவானந்தன்*
*குழந்தை வைத்திய நிபுணர்*
*யாழ். போதனா வைத்தியசாலை.*

| உணவு வகை | 7-9 மாதங்கள் | $9^{+}$-12 மாதங்கள் | $12^{+}$-24 மாதங்கள் | $2^{+}$-5 வருடங்கள் | |
|---|---|---|---|---|---|
| தானிய வகை | 2-3 தடவைகள் | 3 - தாடவைகள் | 3-4 தடவைகள் | 4 அல்லது அதற்கு மேல் | 230 g நாளுக்கு |
| தாய்ப்பால் | விரும்பிய வேளைகளில் | விரும்பிய வேளைகளில் | சாப்பிட்டபின் தேவையானபோது | சாப்பிட்டபின் தேவையானபோது | |
| பாற் பொருள்கள் யோகட், தயிர், சீஸ் | ½-1 | 1 | 1 | 1-2 | |
| மீன், இறைச்சி, முட்டைகள் | 1 | 1-2 | 1-2 | 2 | 50 g நாளுக்கு |
| போஞ்சி, அவரை, கடலை வகை | 1 | 1 | 1-2 | 1-2 | 60 g நாளுக்கு |
| பழங்கள் | 1 | 1-2 | 1-2 | 1-2 | 50 g நாளுக்கு |
| காய்கறிகள் | 1 | 1-2 | 1-2 | 1-2 | 50 g நாளுக்கு |
| பச்சை இலை வகைகள், கீரை | 1 | 1 | 1 | 1 | 50 g நாளுக்கு |
| கொழுப்பு வகை | ஒருதேக்கரண்டி / ஒரு உணவு வேளைக்கு | 1-2 தேக்கரண்டி / ஒரு உணவு வேளைக்கு | சிறிதளவு | சிறிதளவு | 30 ml நாளுக்கு |
| இனிப்பு வகைகள் சீனி | | | சிறிதளவு சாப்பாட்டின் பின் | சிறிதளவு சாப்பாட்டின் பின் | 25 g நாளுக்கு |
| [illegible] குழந்தையாயின் | 500-600 ml | 500-600 ml | 2 தடவைகள் மட்டும் | 2 தடவைகள் மட்டும் | 400 ml நாளுக்கு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயான அபிவிருத்தி பொதுக் கூட்டம் நாளை

தென்மராட்சி, ஜன.12 சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அனைத்து மயானங்களுக்கும் அபிவிருத்திச் சபைகள் அமைக்க பிரதேச சபைத் தலைவர் ஏற்பாடுகளைமேற்கொண்டுள்ளார்.

இதன் முதற்கட்டமாக தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள மயானங்களுக்கு அபிவிருத்திச் சபையினரைத் தெரிவு செய்வதற்கான கூட்டங்கள் நாளை திங்கட்கிழமை நடத்தப்படவுள்ளன.

அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு எழுதுமட்டுவாழ்தெற்கு கிராமியன் மயானம் தொடர்பான கூட்டம் எழுதுமட்டுவாழ்தெற்கு கிராம அலுவலர் அலுவலகத்திலும் நண்பகல் 12 மணிக்கு கரம்பகம் வேதக்கால் இந்து மயானம் தொடர்பான கூட்டம் ஒட்டுவெளி கிராவில் பிள்ளையார் ஆலய முன்றிலிலும்-

பி.ப.2 மணிக்கு எழுதுமட்டுவாழ் வடக்கு செம்பாட்டு மயானம், ஆசைப்பிள்ளையேற்ற மயானம் ஆகியவற்றின்கூட்டம்மிருசுவில் படித்த மகளிர் திட்ட பொது மண்டபத்திலும், மிருசுவில் வடக்கு பெரியாணோடை இந்து மயானம் தொடர்பான கூட்டம் பாரதி முன்பள்ளி மண்டபத்திலும் நடைபெறுமென பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா அறிவித் துள்ளார்.

பிரதேச சபை எல்லைக்குள் 96 மயானங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ந-9)

# புல்லாங்குழல் இசை நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஜன.12 யாழ்.பல்கலைக்கழக இசைத்துறையின் ஏற்பாட்டில் புல்லாங்குழல் இசை நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதிக் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் புல்லாங்குழல் இசையை வேணு கானமணி" பிச்சையப்பா ஞானவரதன் வழங்குவார். (ஓ-14)


## கடை வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் ராஜா தியேட்டருக்கும், கன்னாதிட்டிச் சந்திக்கும் இடையில் நீளம் 32 அடி, அகலம் 22 அடி விஸ்தீரணமுள்ள கடை வாடகைக்குண்டு. (புதிய கட்டடம், வாகன தரிப்பிட வசதி உண்டு) காட்சி யறைகள் நிறுவனங்களுக்கு உகந்தது. தொடர்பு: (42282)(7.6.3)

077 821 7574, 077 269 9052

## பிரத்தியேக வகுப்புக்கள்

க.பொ.த (உயர்தர) மாணவர்களுக்கான Engineering Technology துறைசார்ந்த விரிவுரையாளர்களினால் இரு மொழிகளிலும் சுண்டுக்குளியில் நடத்தப்படுகின்றது.

தொடர்பு: 077 711 1748

## SPOKEN ENGLISH

SPOKEN ENGLISH COURSE FOR ALL LEVELS

Duration- Only 3 Months

Conducted By- DR. R. SANGAR

"BY THE END OF THE COURSE STUDENTS WILL LEARN THE SKILL TO INCREASE THEIR VOCABULARY AND TO SPEAK FLUENTLY"

Starts on 15 Jan. 2014 (10.00 am)

SPECTRA SKILLS
No: 19, Stanley Road, Jaffna.
021 222 1422 | 021 222 1423

## BANKING & AAT

Foundation Intermediate Final — CLASSES FOR YOU

புதிய பிரிவுகள் ஆரம்பம்
25 JAN 2014 (Sat)
நேரம் காலை 8.30

மிகத்தரமான விரிவுரையாளர்களுடன் இணைந்து கொள்ளுங்கள்

SPECTRA SKILLS
No: 19, Stanley Road, Jaffna.
021 222 1422 | 021 222 1423

## நிச்சயமாக தொழிலை இலக்காகக் கொண்ட பாடநெறி!

O/L பின் School of Nursing IVA

ஒரு வருட தாதியர் பயிற்சி பாடநெறி

இம்முறை க.பொ.த சா/த மாணவ மாணவிகளுக்கும் விண்ணப்பிக்க முடியும்.



பாடநெறியினை சிறந்த முறையில் பூர்த்தி செய்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் நிறுவனத்தினால் தொழில் வாய்ப்புக்கள் பெற்றுத்தரப்படும்.

நுழைவுக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகள்
க.பொ.த சா/த 6 பாடங்கள் சித்தி
வயது: 16 - 30 இடைப்பட்டிருத்தல்
உயரம் 4 அடி 10 அங்குலம்

இலவசமாக சீருடையும், தாதியர் பாடநெறிக்கு ஏற்ற ஆங்கில பாடநெறியும், தூரப் பிரதேச மாணவர்களுக்காக பாதுகாப்பான தங்குமிட வசதிகளும் உண்டு-

After A/L Medical Laboratory Technology Assistant
ஆய்வுகூட உதவியாளர் பாடநெறி

நாடு முழுவதிலும் அமைந்துள்ள ஆய்வுகூட உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக க.பொ.த. உ/த விஞ்ஞான பாடத்திற்குத் தோற்றிய நீங்களும் இப்போது ஆய்வுகூட உதவியாளராக ஆகலாம்.

6 மாத நிறுவனத்தினுடனான பயிற்சிக்குப் பின் சேவை இடங்களுக்கு சேர்க்கப்படுவார்கள்.



## மருந்தாளர் பாடநெறி

தற்போது தனியார் துறைகளில் வைத்திய சேவையிலே மருந்து தொடர்பான சேவையில் ஈடுபட்டுள்ள தகுந்த கல்வித் தகைமை இல்லாதவர்களுக்கு தொழிலுக்கு ஏற்ற செயன்முறைப் பயிற்சியுடன் சான்றிதழும் வழங்கப்படும்.

அரச வைத்திய வித்தியாலயத்தினால் நடாத்தப்படும் வெளிவாரி மருந்தாளர் பரீட்சைக்கு வகுப்புக்கள் நடைபெறும்.

நடாத்துபவர் ( வைத்தியர் ராஜவேலாயுதம் — ஞாயிறு தினங்களில் காலை 9.00 முதல் 4.00வரை

| யாழ்ப்பாணம் | மட்டக்களப்பு | வவுனியா | அனுராதபுரம் | பதுளை |
|---|---|---|---|---|
| இல 323, கஸ்தூரியா வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.071-8722350, 0718-722 353 | இல. 61/1, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே.0718-722 352 0718-722 353 | இல. 36/1, 88/1, 2ம், குறுக்கு வீதி, வவுனியா. தொ.பே. 0718-722 351 0718-722 353 | இல 396/3, சுவசேவன வைத்தியசாலை, நீதிமன்ற பகுதி, கடதொளாஹ அனுராதபுரம். தொ.பே. 0718-722 355 | இல 20/1/1, ஹுணுகொடுவ வீதி, பதுளை. தொ.பே.0718-722 354 |
| **கண்டி** | **கம்பஹா** | **பானதுறை** | **தங்கல்ல** | **இரத்தினபுரி** |
| சிங்கர் நிறுவனம், டி.எஸ். சேனநாயக்க வீதி, கண்டி. தொ.பே. 0711-980 980 0710-336 329 | 77/1/4 யக்கல வீதி கம்பஹா. தொ.பே. 0718-657 775 | இல 36, சுவிமதா வைத்தியசாலை, சுசந்த மாவத்தை, பானதுரை. தொ.பே. 0710-336 332 | ஆரோக்யா வைத்தியசாலை, முஹுது மாவத்தை, சம்பத் வங்கி அருகில், தங்கல்ல. தொ.பே. 0710-336 334 | இல 85, உள் சுற்று வீதி, இரத்தினபுரி. தொ.பே. 0715-980 980 |

Registered Education Institute in the republic of Sri Lanka

பிரதான காரியாலயம்
அய்வா
சர்வதேச தாதியர் பாடசாலை
இல 85, உள் சுற்று வீதி, விபர்டி கட்டிடம், இரத்தினபுரி.
NTS P.V. 91973

ரு 40/= பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் தெரிவு செய்த கிளையை குறிப்பிட்டு விண்ணப்பப்படிவத்தினை அருகிலுள்ள எமது கிளைக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

தொ.பே : 0454 980 980
0715 980 980 Fax : 045 2233000
E-mail : manojhewaduwa@yahoo.com

கையடக்கத் தொலைபேசி குறுந்தகவல் மூலம் விண்ணப்பத்தைப் பெறலாம். 0710 755 755

மாதிரி விண்ணப்பப்படிவத்தை எமது இணையத்தில் அவதானிக்கலாம். www.nursingiva.com

இல. P 07/0096 கீழ் தொழில் மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு சபையால் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனமாகும்.

## Drive your Vehicle

நாங்கள் தருகிறோம் நீங்களே ஓட்டிச் செல்லுங்கள்




PEAKING RENT A CAR
அழையுங்கள் 0777484820

## வவுனியா மற்றும் யாழ். நகரில் மீண்டும் புதுப்பொலிவுடன் Diploma in Mass Media (அறிவிப்பாளர் பயிற்சி)

வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளராக தயாரிப்பாளராக நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக வருவதற்கு ஆசைப்படுகின்றீர்களா ?

இதோ...... காலம் : 3 மாதம்

Full Time / Part Time Course

வடமாகாணத்தில் (திறமையின் தேடல்) ஊடகத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களை தலை சிறந்த அறிவிப்பாளராக உருவாக்கி வரும் வவுனியா Sun British College in Media Unit வழங்கும் அறிவிப்பாளர் பயிற்சி நெறி (Diploma in mass media)

வானொலி அறிவிப்பு, நிகழ்சிதயாரிப்பு, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, விளம்பர தயாரிப்பு, நேரடி வர்ணனை, செய்தி வாசிப்பு, பத்திரிகை வாசிப்பு இன்னும் பல. (பயிற்சியினை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு 5 நாள் மழை FM வானொலியில் அறிவிப்பாளராக கடமையாற்ற சந்தர்ப்பம் !

நீங்கள் இலங்கையிலும் சர்வதேசத்திலும் துடிப்புமிக்க ஒரு சிறந்த அறிவிப்பாளராக ஊடகவியலாளராகவேண்டுமா ? பதிவுகளுக்கு விரையுங்கள்

எமது நிறுவனத்தில் அறிவிப்பாளர் பயிற்சியினை மேற்கொண்ட மாணவர்கள் அரச தனியார் வானொலி தொலைக் காட்சிகளில் அறிவிப்பாளராக கடமையாற்றுகின்றார்கள்

அனைத்து வகுப்புக்களும் இம்மாதம் ஆரம்பம் 18.01.2014

SUN BRITISH COLLEGE
NO - 26 Appalo Hospital
Upstair Building
Station Road, Vavuniya.
T.P : 077 7929475, 024 2226649

BTEC No. 21, Sirambiyadi Lane off Stanly Road, Jaffna
T.P : 021 7904468, 077 7929475 (43595)(3.6.4)

## MOBILE PHONE REPAIRING COURSE

நீங்கள் பாடசாலைக் கல்வியை இடை நிறுத்தியவரா? சுயதொழில் ஒன்றை செய்ய எதிர்பார்ப்பவரா? வேலை செய்து கொண்டு பகுதி நேரமாக வருமானம் ஈட்ட வேண்டுமா?

புதுப்பொலிவுடன் யாழ். மற்றும் வவுனியாவில்

உங்கள் எதிர்காலத்துக்கு மாதம் 150, 000/= இக்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர தொழில் வாய்ப்பு. சர்வதேச தரத்திலான டிப்ளோமா சான்றிதழ்.

திருத்தும் துறையில் 10 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரும், இலங்கையில் 2000 இக்கு மேற்பட்ட மாணவர்களை உருவாக்கிய முதல்தர ஆசிரியர்.

Ganesh.K

பாடநெறிக்கு செலுத்திய கட்டணத்தை முதல் மாதத்திலே சம்பாதித்துக் கொள்ள முடியுமா முதலீடு. நவீனமான MOBILE போன் REPAIR செய்யும் முறைகள் பயிற்றுவிக்கப்படும். மிகக் குறைந்த செலவில் மிகச் சிறிய இடத்தில் மிகக் குறைந்த முதலீட்டில் ஆரம்பிக்கக் கூடிய ஒரு சிறந்த சுய தொழில்.

4 DAY COURSE — 5ஆவது நாளில் தொழிலை ஆரம்பிக்க உங்களுக்கு 100% நாங்கள் உத்தரவாதம் வழங்குவோம்.

வவுனியாவில் ஆரம்பம்:
26, 27, 28, 29
SUN BRITISH COLLEGE
No. 26, Station Road, Vavuniya
T.P. 0777 929475, 024 2226649

யாழ் நகரில் ஆரம்பம்:
JANUARY 22,23, 24, 25
No. 21, Sirambiyadi Lane, off Stanley Road, Jaffna
T.P. 0777 929475, 021 7904468 (43594)(3.6.4)

## வடமாகாணத்தில் அறிமுகமாகின்றது... பாடசாலை மாணவர்களுக்கான அறிவிப்பாளர் பயிற்சி நெறி

வடமாகாணத்தில் (திறமையின் தேடல்) ஊடகத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களை தலைசிறந்த அறிவிப்பாளராக உருவாக்கி வரும் வவுனியா இல.26, புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள Sun British College பெருமை யுடன் அறிமுகப்படுத்தும்

பாடசாலை மாணவர்களுக்கான அறிவிப்பாளர் பயிற்சி நெறி
(School voice of mass media)

பாடசாலை மாணவர்களே இதோ உங்கள் பாடசாலையில் நடைபெறு கின்ற கலை கலாசார நிகழ்ச்சி தொகுப்பாளராக/ அறிவிப்பாளராக / கிரிக்கட் வர்ணனையாளராக / காலை நேர நிகழ்ச்சி அறிவிப்பாளராக/ விவாத மேடை அறிவிப்பாளராக / பத்திரிகை செய்தி வாசிப்பு மற்றும் அனைத்து நிகழ்ச்சி களையும் திறம்பட அறிவிப்புப் பாணியில் தொகுத்து வழங்கும் ஒரு சிறந்த பாடசாலை அறிவிப்பாளராகுவதற்கு ஆசைப்படுகின்றீர்களா? இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்! பாடசாலை மாணவர்களுக்கான ஒரு மாத கால பயிற்சி நெறி (School voice of mass media) பாடநெறியைத் தொடர்வதன் மூலம் நீங்களும் சிறந்த பாடசாலை அறிவிப்பாளராக மாறலாம்.

பயிற்சியின் முடிவில் School voice of mass media சிறப்புச் சான்றிதழ் வழங்கப்படும்.

[பிரிவு-01 வார நாள்களில் பி.ப 3.00 மணி தொடக்கம் மாலை 5.30மணி வரை]
[பிரிவு-02 சனி, ஞாயிறு பி.ப 3.00 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை]

பதிவுகளுக்கு விரையுங்கள்:
SUN BRITISH COLLEGE
No-26, Appalo Hospital,
Upstair Building,
Station Road, Vavuniya.
T.P: 0777 929475, 024 222 6649. (43596)(10.14)

அனைத்து வகுப்புக்களும் இம்மாதம் ஆரம்பம் : 18.01.2014
BTEC
No-21,Sirambiyadi Lane, off Stanley Road, Jaffna.
T.P: 021 790 4468, 0777 929475


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவை விடுங்கோவன்....

*(சூரியகாந்தி 27 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

இருக்கு. நாளைக்கு இதால எனக்குத் தான் பிரச்சினைவரும்." என்கிறார். பேசிக்கொண்டிருக்கும் போது அடிக்கடி இதைச் சொல்கிறார்.

"கதிர்காமர் முகாமுக்கு எங்களை மாத்திச்சினம். 2009 செப்டெம்பர் மாதம் நாங்கள் யாழ்ப்பாணம் போனம். நல்லூரில் வாடகைக்கு வீடு எடுத்துத் தங்கியிருந்தம். அவர் தச்சுவேலைக் குப் போகாமல் பாதுகாப்பு உத்தி யோகத்தராக வேலை செய்தார்.

### புலி மூத்திரை

"அப்பத்தான் இடி விழுந்தது. வீட்ட வந்த சிலர் ஒரு கடிதத் துண்டு குடுத் திச்சினம். அதில 2012.01.27ஆம் திகதி கொழும்பு நான்காம் மாடிக்கு விசாரணைக்கு வரச் சொல்லியும், அவருக்கு எல்.ரீ.ரீ.ஈ. உடன் தொடர்பு இருக்கெண்டும் எழுதியிருந்தது. அது குறித்து விசாரிக்கத்தான் கூப்பிடு கினம் என்றும் அந்த கடிதத்தில் இருந் தது. (கடிதத்தை காண்பிக்கிறார். அது தமிழில் எழுதப்பட்டிருக்கிறது.)

"அதுக்குப் பிறகும் ஒரு தவணைக்கு கொழும்புக்கு விசாரணைக்கெண்டு போய் வந்தவர். மூன்றாம் முறை (2012.03.14) விசாரணைக்குப் போனவர் திரும்பிவரேல்லை. தேடிப் போன என்னட்ட, 'பாதுகாப்பு, பொதுமக் கள் பாதுகாப்பு சட்டமும் ஒழுங்கும் பற் றிய அமைச்சு' என்று தலைப்பில ஒரு கடிதம் தந்திச்சினம். அது தனிச் சிங் களத்தில இருந்தது.

"அவருக்கும் புலியளுக்கும் தொடர்பு இருக்கெண்டிச்சினம். நான் இல்லை எண்டு சொன்னனான். அவர் இயக்க நிறுவனத்தில் சம்பளத்துக்குத்தான் வேலை செய்தவர். வன்னியில் இருந்த பெரும்பாலானாக்கள் இதைத்தான் செய்தவை எண்டு சொன்னன். அவை யள் அதைக் கேக்கவே இல்லை.

"அவரை விடச்சொல்லிக் கேட்டு நான்போகாத இடம்இல்லை. ஒருக்கா அவரைப்பாக்ககொழும்புக்குப்போகேக்க, அங்கயிருந்த பயங்கரவாத தடுப்பு பிரிவு அதிகாரி ஓராளிண்ட காலைப் பிடிச்சுக்கூடக் கெஞ்சிப் பாத்தன்.

"குடும்பம் இவரை நம்பித்தான் இருக்கு. அவர் இல்லை எண்டால் பிள்ளை யளின்ர வாழ்க்கை நாசமாய் போயிடும் என்று எவ்வளவோ சொல்லியும் அவை இரங்கேல்லை. நான் சிஐடியின்ர காலைப்பிடிச்சு அழுததைப் பாத்து என்ர கடைசி மகள் ஆத்திரப்பட்டு அவற்ற சப்பாத்தைப் பிடுங்கி எறிஞ்சு கதறியழுதாள். ஆனால் அவைக்கு மனசு இளகவேயில்லை.

### சிலுவை சுமந்த சிறுவன்

"அப்பாவப் பிடிச்சுக்கொண்டுபோன மறுநாளே மகன் (நிதர்சன்) பள்ளிக் கூடம் போறத நிப்பாட்டீட்டான். அப்ப அவன் யாழ்ப்பாணம் ஸ்ரான்லிக் கொலிஜ்ஜில தரம் 9 படிச்சவன். என் னால் அவனைத் திரும்ப பள்ளிக்கூடம் அனுப்பமுடியேல்லை.

"நாங்கள் யாழ்ப்பாணத்தில் வாடகை வீட்டிலதான் இருந்தம். வீட்டு வாடகை, கரண்ட்பில், வீட்டுச் செலவு, பிள்ளை களின்ர படிப்பு எண்டு சமாளிக்க முடி யேல்லை. அதனால பிள்ளை ரவுணுக் குள்ள ஒரு இரும்புக் கடைக்கு வேலைக் குப் போனான். அப்பத்தான் எங்க ளுக்கு கிளிநொச்சிக் காணியில வீட் டுத் திட்டம் தந்தவை. யாழ்ப்பாணத் தில இருந்து கிளிநொச்சிக்கு வந்து குடியேறினம்.

"அண்டையில இருந்து மகன் மேசன், தச்சு வேலைக்குப் போறவன். என் னால் அதுக்குப் பிறகு அவன பள்ளிக் கூடம் அனுப்பமுடியேல்லை. பெத்த வயிறு பத்தி எரிஞ்சுது.... என்ன செய்ய மூன்று பெம்பிளைப் பிள்ளையள். அவன்தான் மூத்த பிள்ளை...." சொல்லிக்கொண்டே அழுகிறார்.

### விதி

"நாலாம் திகதி பிள்ளை( நிதர்சன்) வழக்கம்போல காலேல 7.30 மணியிருக்கும் வேலைக்கு போக வெளிக்கிட்டான். சைக்கிளுக்கு காத்து அடிச்சதைப் பாத்தன். பம்மைக் கொண்டுவந்து வைச்சிட்டு சைக் கிளை எடுக்கப்போனவன் திடீர் எண்டு விழுந்திட்டான். சத்தம் கேட்டு ஓடிவந்து பாத்தால் மூச்சுப் பேச்சு இல்லை. நான் குளறியழுத சத்தம் கேட்டு ஆக்கள் ஓடிவந்தினம்.

"உடனை ஒரு மோட்டார் சைக்கிளைக் கொண்டு வந்தினம். அது ஸ்ராாட்டாக மாட்டன் எண்டிட்டுது. பிறகு ஓட்டோ பிடிக்கப் போச்சினம். அதுக்கும் அதேநிலைதான். பிறகு திருநகர் றோட்டுக்குப் போய் மஞ்சுளா பேக்கரி சந்தியில இருந்து ஓட்டோ கொண்டு வந்த பிறகுதான் ஆஸ்பத்திரிக்குப் போனம்.

"பிள்ளை மயங்கிப் போட்டான் எண்டு நினைச்சுத்தான் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனனாங்கள். ஆனா உயிர் போட்டுது என்று டொக்டர்மார் சொல்லிப்போட்டினம்.

"கிட்டத்தட்ட ரெண்டு வருசமா வீட்டுப் பொறுப்பை அவன்தான் பாத்தவன். அவனும் இப்ப எங்கள விட்டுப் போட் டான். அந்தளவுக்குப் பாவம் செய்து நாங்கள் பிறந்திட்டம்.

"அவனுக்கு எந்த வருத்தமும் இருக்க வில்லை. மூன்றாம் திகதி வேலை செய்யும் இடத்தில் தலைச்சுத்து என்று சொன்னவனாம். ஆனால் எங்களுக் குச் சொல்லேல்லை. பிறகுதான் அது எங்களுக்கு தெரியவந்தது."

பார்வை வெறித்து நிலை குத்திப்போக வார்த்தைகள் வராமல் அமர்ந்திருக் கிறார் சிவாஜினி.

### குட்டித் தங்கையின் ஆசை

நிதர்சனின் கடைசித் தங்கை கதுர்சிகா தாயின் பக்கமாக வருகிறாள். அவளி டம் "அண்ணாவில விருப்பமா?" என்று கேட்டதும் அழத் தொடங்கிவிட்டாள்.

இந்த வருடம்தான் முதலாம் தரத்தில் சேர்ந்திருக்கிறாள் கதுர்சிகா. அண்ண னிடம் கொப்பி வாங்கித் தருமாறு கேட்டாளாம். அதற்கு அவன் சொன்ன பதில்கல்நெஞ்சையும்கரையவைக்கும்.

"நான் எப்படித்தான் வேலை செய்தா லும் காசு தாறாங்கள் இல்லை. எல்லா ரும் பெரியாக்கள். நான்மட்டும்தானே சின்னஆள். என்னிட்டத்தான் நல்லா வேலை வாங்குவினம். ஆனால் சம்பளத்த ஒழுங்கா தாராங்கள் இல்லை. 10ஆம் திகதி காசு வந்திடும். அப்ப அண்ணன் உனக்கு கொப்பி பென்சில் எல்லாம் வாங்கித் தாறன். இப்ப இருக்கிறத வச்சு சமாளி, என்ன?" என்று சொன்ன அந்த அண்ணனை நினைத்து ஏங்குகிறது அந்தத் தங்கை யின் மனது.

"அப்பாவை விடுவித்திருந்தால் அண் ணனுக்கு இந்த நிலை வந்திருக்காது. இப்ப அண்ணனும் இல்லை. இனி எங்களுக்கு யாரும் இல்லை. அப்பா ஒரு குற்றமும் செய்யேல்லை. அவரை ஏன் விடுகினம் இல்லை? அவரை விடச்சொல்லுங்கோவன்!" தங்கைகள் மூவரும் இதைத்தான் திரும்பத் திரும்பச் சொல்லுகின்றனர்.

### கே.பி.யும் வந்தார்

பிள்ளை உயிரிழந்த செய்திகேட்டு அந்த வீடு தேடி வந்து ஆறுதல் கூறிய அரசியல்வாதிகள் மற்றும் பலரில் கே.பி. எனப்படும் செல்வராசா பத்ம நாதனும் அடங்குகிறார். "இவை தானே முந்திப் புலிகள். இயக்கம் எல்லாம்! ஆனால் அவை இப்ப சுதந்திரமாக உலாவுகினம். புலிக ளின்ர தளபதியள் என்று சொல்லித் திரிஞ்சவை எல்லாம் அப்படியிருக் கினம். ஆனா, சம்பளத்துக்கு வேலை செய்த என்ர புருசனைத்தான் புலி எண்டு அடைச்சு வைச்சிருக்கினம். இது என்ன நியாயம்?"

அதன் பின்னர் நேற்று வடக்கு மாகாண ஆளுநரும் வருகை தந்து என்ன தேவை என்று கேட்டுவிட்டுச் சென்றாராம். தடுப்பில் இருக்கும் கணவனை விடுங்கள் அதுபோதும் எங்களுக்கு என்று சொல்லியிருக் கிறார்கள் அந்தக் குடும்பத்தினர்.

### இரக்கமற்ற அதிகாரிகள்

நிதர்சன் திடீரென வீழ்ந்து உயிரி ழந்தமைக்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

வீட்டாரிடம் சாவில் சந்தே கம் ஏதும் இருக்கிறதா? என்று சட்ட வைத்திய அதிகாரி கேட்ட போது எங்களுக்கு அப்படி எதுவும் இல்லை. சாவுக்கான காரணத்தை நீங்கள்தான் கண்டறிய வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். சிறுவனின் சாவு தொடர்பான அவ னது உடற்கூற்று மாதிரிகள் கொழும் புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. சோதனை முடிவில் ஒருவேளை சாவுக்கான காரணம் தெரியவரும். ஆனால் அதற்கிடையில் "உன் மகன் குடிச்சுப்போட்டுத்தான் செத்தவனாம் என்று நாங்கள் கேள்விப்பட்டம்" என ஈவிரக்கமற்ற முறையில் கேள்வி கேட்டிருக்கிறார்கள் பயங்கரவாத தடுப்புப் பிரிவுப் பொலிஸார்.

"என்ர பிள்ளை குடிக்கிறதில்லை. அக்கம்பக்கத்தில கேளுங்கோ சொல்லு வினம். அப்பிடி எனக்குத் தெரியாமல் செய்தாலும் மருத்துவ அறிக்கையில உண்மை தெரியவரும்தானே" என்று கோபப்படுகிறார் சிவாஜினி.

### மீட்க உதவினால்போதும்

"சிலர் தொடர்புகொண்டு உதவி செய்யலாம் என்று சொல்லுகின்ம். கணவரை விடுவிக்க உதவுங்கோ. அது போதும் எங்களுக்கு. அதுதான் எங்களின்ர கோரிக்கை." முடித்துக் கொள்கிறார் சிவாஜினி.

2014 இற்கான புதிய அனுமதிகள்
தைப்பூசம் அன்று வித்தியாரம்பம்

BBC
ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை
11 வது வருடத்தில்

| Play Group | Montessori | Pre School |
| --- | --- | --- |
| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |

10 வருடங்களில் 7500 ற்கு மேற்பட்ட சிறார்கள் கல்வி பயின்றுள்ளார்கள்.
90 % மாணவர்கள் புலமைப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்கள்.

கற்பித்தல் முறை:
★ சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method
★ தமிழ் கட்டாய பாடம்.
★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்
★ சிறார்களின் திறமைகளை வெளிக் கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவார்.
★ விளையாட்டுப் போட்டி, English Concert, முத்தமிழ் விழா, சித்திரக்கைவேலைக் கண்காட்சி, Graduation Ceremony.

பாலர் பாடசாலை வளாகங்கள்
தலைமைக் காரியாலயம் → யாழ்ப்பாணம்: 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம்: 625, K.K.S வீதி, யாழ்ப்பாணம் [மனோகரா திரையரங்கிற்கு அருகாமை]
நீர்வேலி: 1வது மைல் கல் இராச வீதி
கோப்பாய்: பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி
சாவகச்சேரி: சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை
மானிப்பாய் 1: 252, ஆலடிச்சந்தி, யாழ் வீதி.
அச்சுவேலி: அச்சு நகர், சங்கானை வீதி, அச்சுவேலி
மானிப்பாய் 2: சங்கரப்பிள்ளை வீதி. [மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி]
சங்கானை: பிரதேச செயலகம் அருகாமை [நிகர வைரவர் கோயிலடி]
சுன்னாகம்: Dr. சபாரத்தினம் வீதி சுன்னாகம்
வடமராட்சி: பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி.
(C/11771)

British Business College — Where Students Come First
BRITISH BUSINESS COLLEGE
64, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Tel:077 362 7055, 021 222 4060, 021 222 5796, 077 6646357
British Council இனால் அங்கிகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு நிலையம்.
Registered as an Education & Training Company with the Registrar of Companies- Sri Lanka. Reg. No: P 9718

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2014
JAFFNA INTERNATIONAL TRADE FAIR
5th Edition
2014 ஜனவரி 17ம் 18ம் 19ம் திகதிகளில்
மு.ப 10.00 தொடக்கம் பி.ப 8.00 வரை
துரையப்பா விளையாட்டரங்கில்
www.jitf.lk




உடன் இணைந்து
கல்வி யாழ்ப்பாணம்
Husnie - +94 773 501594
Imalka - +94 112 390560-2
E-mail: jitf@saexhibitions.com
Organized by LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
Gold Sponsor dimo TECHNOLOGY
In Association with CCIY
Supported by SRI LANKA
Education Partner BRITISH COUNCIL
Official Logistic Provider
Official Print Media Sunday Observer Daily News
Official Print Media Tamil
Official Radio Partner

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வட பகுதி மக்களின் உறக்கத்தை கெடுக்கும் வன்முறைச் சம்பவங்கள்

யாழ். மாவட்டத்தைக் கலக்கி வந்த. வாள் வெட்டுக்களுடன் தொடர்புபட்ட 13பேர் வாள்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும், இந்தக் குழுவைச் சேர்ந்த ஏனையோரைக் கைதுசெய்ய இரு விசேட பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் ஊடகங்களில் பரபரப்பாக செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அடிதடி, கோஷ்டி மோதல், வாள் வெட்டு, மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் இவர்கள் ஈடுபட்டு வந்தனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. 'ஆவா' என்ற பெயரில் இயங்கும் இந்தக் குழுவில் முப்பது பேர் உள்ளனர் என்கின்றனர் யாழ்.பொலிஸார். ஒரு பெண் உட்பட ஏனையோரைக் கைது செய்யவே விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

போர் முடிவடைந்த பின்னர் யாழ்.குடா நாடு எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினை கலாசார சீரழிவுகளும், வன்முறைகளுமே. யாழ். குடாநாடு செல்வோர் காபெற் வீதிகளையும் நவீன கட்டடங்களையும் கண்டு வியப்படைகிறார்கள். ஆனால், அங்கு இடம்பெறும் கலாசார சீரழிவுகள், வன்முறைகள் ஆகியவற்றைக் கண்டுகொள்வதில்லை. யாழ்ப்பாணத்தின் மறுபக்கம்தான் அது.

கஞ்சா, சாராயம் உட்பட போதைப் பொருள்கள் தாராளமாக புழக்கத்தில் உள்ளன. நடைபாதை வியாபாரிகளை அச்சுறுத்திக் கப்பம் பெறும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. ஆனால், பாதிக்கப்படுபவர்கள் தாம் பழிவாங்கப்படலாம் என்ற அச்சத்தால் பொலிஸில் முறையிடத் தயங்குகிறார்கள். பொலிஸார் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளதும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

தெற்கில் விபசாரம், போதைப்பொருள் பாவனைகள், வன்முறைகள் தினமும் இடம்பெறுகின்றன. அதே நிலைமைதான் தற்பொழுது வடக்கிலும் உருவாகி வருகிறது. இவற்றைக் கட்டுப்படுத்தத் தவறுவோமானால் எமது எதிர்கால சமுதாயம் சீரழிந்துவிடும்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வீடுடைப்புக் கொள்ளைகள் தொடர்பாக பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின் போது ஜனாதிபதி ஒரு சமயம் கருத்துத் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பு வட மாகாண முதலமைச்சருக்கு உண்டு என்று கூறினார். ஆனால், பொலிஸாருடன் இணைந்து வட மாகாண முதல்வர் செயற்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார். மாகாண சபைக்கு அரசமைப்பிலுள்ள பொலிஸ் அதிகாரம் வழங்கப்படாமல் இது சாத்தியப்படப் போவதில்லை. ஆளுநரின் ஒத்துழைப்பின்றி, செயலாளர்களின் ஒத்துழைப்பின்றி வட மாகாண முதல்வர் செயற்பட முடியாதிருக்கிறார்.

இந்த இலட்சணத்தில் மாகாண முதல்வர் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவார் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

கடந்த மூன்று வருடங்களாக குறிப்பிட்ட குழுவினால் யாழ்ப்பாணத்தில் அடிதடி, கோஷ்டி மோதல், வாள்வெட்டு மற்றும் கொள்ளைகள் இடம்பெற்று வந்துள்ளன. அண்மையில் கோண்டாவிலில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதால் தான் இந்தக்குழு பற்றிய தகவல் வெளிவந்தது.

அதன் பின்புதான் பொலிஸார் உஷாரடைந்தனர். அவர்கள் 13 பேரைக் கைதுசெய்து வாள்களையும் கைக்குண்டுகளையும் கைப்பற்றியுள்ளனர். இது பாராட்டுக்குரியதுதான். இதேபோன்ற நடவடிக்கைகளில் அவர்கள் தொடர்ந்து ஈடுபடவேண்டும். சமூக விரோதிகள், போதை வஸ்துக்காரர்களை மட்டுமல்ல, கப்பம் கேட்போர், பாலியல் தொழிலில் ஈடுபடுவோர் ஆகியோர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

போர் வடுக்கள் நீங்கி மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டும் என்பதே அரசின் எதிர்பார்ப்பு. ஆனால், குடாநாட்டில் இடம்பெறும் சம்பவங்களால் மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர். தமது குழந்தைகளின் எதிர்காலம் குறித்து அவர்கள் கவலை கொண்டுள்ளனர். அரசாங்கம் இது குறித்து கவனம் செலுத்துவது அவசியமாகும்.

# இலங்கையின் அபிவிருத்தியும் புலம்பெயர் இலங்கையரும்

இலங்கையை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லும் ஒருபகுதியாக புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களுக்கு அழைப்பு விடுப்பது அதிகரித்துள்ள போதிலும், இலங்கையர்கள் பல்வேறு காரணங்களுக்காக தமது சொந்த நாட்டுக்குத் திரும்புவதில் தயக்கம் காண்பித்து வருகின்றனர்.

இலங்கையில் 2002-03 வரையான சமாதான காலப்பகுதியில், இலங்கையின் வடக்கை அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் ஒன்றை வரைவதற்கு புலம்பெயர் தமிழ் சமூகத்தின் ஒரு பகுதியினர் தமது ஆதரவை வழங்கினர். இத்திட்ட வரைபை வரைகின்ற முயற்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் ஒருங்கிணைக்கப்பட்டது.

இந்தத் திட்டம் முற்றாக சுதந்திரமடைந்த வடபிராந்தியத்தை மையப்படுத்தி வரையப்பட்டதா அல்லது இல்லையா என்பது முக்கியமானதல்ல. இத்திட்டத்தின் கட்டமைப்பு மற்றும் இதன் முகாமைத்துவம் போன்றவை கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய மிக முக்கிய விடயங்களாகும்.

புலம்பெயர் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த 200 வரையான வல்லுநர்களின் உதவியுடன் வடக்குக்கான அபிவிருத்தித் திட்டத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைநகரமாகக் காணப்பட்ட கிளிநொச்சியில் தமிழ் வல்லுநர்கள் ஒன்றிணைந்து இத்திட்டத்தை வரைந்தனர். இவர்கள் வாரக் கணக்கிலல்ல, சில நாள்கள் ஒன்றிணைந்து, தமது சொந்தச் செலவில் இலங்கைக்குச் சென்று இத்திட்ட வரைபில் பங்கெடுத்தனர். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்வேறு துறைசார் வல்லுநர்கள் ஒன்றாக்கப்பட்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு தகவல்களைச் சேகரித்து இத்திட்டத்தை வரைந்தனர். இவர்கள் வெளிநாடுகளுக்குத் திரும்பிச் சென்ற பின்னர் அங்கிருந்தவாறு இதனை வழிப்படுத்தினர். இலங்கையில் சமாதானம் முடிவுக்கு வரும்வரை இத்திட்டம் நடைமுறையிலிருந்தது.

### புலம் பெயர் உறவுகளை வைத்து அபிவிருத்தியை அடைய முடியும்

அண்மைக் காலத்தில், இலங்கையை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லும் ஒருபகுதியாக புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களுக்கு அழைப்பு விடுப்பது அதிகரித்துள்ள போதிலும், வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் பல்வேறு காரணங்களுக்காக தமது சொந்த நாட்டுக்குத் திரும்புவதில் தயக்கம் காண்பித்து வருகின்றனர். பொருத்தமான சம்பளம், பிள்ளைகளுக்கான பாடசாலை மற்றும் உயர் கல்வி, வீடமைப்பு, ஏற்புடைய சூழல், சட்ட ஆட்சி, மோதல் மற்றும் இரட்டைக் குடியுரிமை போன்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக புலம்பெயர் வாழ் இலங்கையர்கள் ஆழமாக யோசிக்கின்றனர்.

இலங்கையின் புலம்பெயர் மக்கள் தொடர்பாக எழுதப்பட்ட புதிய நூலில், இரண்டு அல்லது மூன்று மில்லியன் இலங்கையர்கள் வெளிநாடுகளில் வாழ்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கும் மேலாக 1-2 மில்லியன் இலங்கையர்கள் வளைகுடா நாடுகளில் பணியாற்றுகின்றனர். 2006இல் சேகரிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 62,000 வரையான இலங்கையை பிறப்பிடமாகக் கொண்டவர்கள் ஆஸ்திரேலியாவில் வாழ்வதாகவும் ஆஸ்திரேலியாவில் உள்ள இனக் குழுமங்களில் இலங்கையர்கள் 16ஆவது இடத்தில் உள்ளதாகவும் இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2011இல் கனடாவில் 450,000 வரையான இலங்கையர்கள் உள்ளதாகவும் இவர்களுள் 350,000 வரையானவர்கள் தமிழர்கள் எனவும் 75,000 இற்கும் மேற்பட்டவர்கள் சிங்களவர்கள் எனவும் 30,000 வரையானவர்கள் முஸ்லிம்கள் எனவும் மதிப்பிடப்பட்டதாக இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேபோன்று இலங்கையில் பிறந்த 300,000 வரையான மக்கள் பிரிட்டனில் வாழ்வதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் 40 சதவீதமான தொழிற்படையினர் புலம்பெயர் நாடுகளில் வசித்து வரும் நிலையில் இவர்களை ஒன்றிணைத்து இவர்களின் ஆற்றல்களைப் பகிர்ந்து கொண்டு நாட்டை முன்னேற்ற முடியும். இதற்கான அரசியல் தொழிற்படு சூழல் இலங்கையில் நிலவுகிறது.

புலம்பெயர் இலங்கையர்கள் தமது சொந்த நாட்டுக்குத் திரும்பிச் சென்று அங்கு பணியாற்ற வேண்டுமாயின் முதலில் அவர்கள் இலங்கை அரசின் தலையீடுகள் இன்றிச் சுதந்திரமாகப் பணியாற்றுவதற்கான பொருத்தமான சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது போர் முடிவுக்கு வந்த போது, விடுமுறையிலிருக்கும் போது பணிபுரிதல் என்கின்ற ஒரு யோசனையின் கீழ் இலங்கைக்குச் சென்று அதன் அபிவிருத்திக்காகப் பணியாற்றுவதென புலம்பெயர் இலங்கையர்கள் ஆலோசனை செய்தனர். புலம்பெயர் இலங்கை வல்லுநர்களின் ஆற்றல்கள் மற்றும் ஆளுமைகளுக்கேற்ப தரவுத் தளம் ஒன்றை உருவாக்கி அவர்களுக்குப் பொருத்தமான பணியை, குறுகிய காலத் திட்டத்தில் இந்த நிறுவனங்களின் விருப்பத்தின் பேரில் இலங்கை அரச திணைக்களத்திலோ அல்லது அரசசார் பற்ற நிறுவனங்களிலோ தொடர்வதென முன்னர் ஆராயப்பட்டது.

### அரசு தயக்கம் காட்டுகிறது

இலங்கையின் கொழும்பில் இதற்கான வேலைத்தளம் ஒன்றை நிறுவி அங்கே புலம்பெயர் இலங்கை வல்லுநர்கள் தமது அதிகளவு நேரத்தைச் செலவீடு செய்வதன் மூலம் அபிவிருத்தித் திட்டங்களை வரைந்து தாம் வெளிநாடுகளுக்குத் திரும்பிச் சென்ற பின்னர் அவர்கள் அதனை அங்கிருந்தவாறு இத்திட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்கு வழிகாட்டுவதெனத் தீர்மானிக் கப்பட்டது. இவர்கள் தாங்கள் தமது விடுமுறைகளைக் கழிப்பதற்காக இலங்கைக்குச் செல்லும் போது இதனைச் செய்வதெனத் தீர்மானித்ததுடன், முற்றிலும் இது சேவையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இவர்கள் தமது பணியை முடித்த பின்னர் இவர்கள் பணியாற்றிய நிறுவனம் இவர்களின் பணியை உறுதிப்படுத்தி இவர்களுக்கு சான்றதழ் வழங்குவதெனவும் ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலானது சில சந்தர்ப்பங்களில் தடைப்பட்டாலும் கூட, இந்த முயற்சியை மீளஆராய்வதற்கான காலம் இதுவாகும். இதனை மீள ஆராய்ந்து புதிய வழிமுறையில் இதனைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையுள்ளது. இளம் வல்லுநர்கள் இலங்கைக்குச் சென்று தமது ஆற்றலையும், அறிவையும் பயன்படுத்தி நாட்டை முன்னேற்றுவதென்பது ஆரோக்கியமான ஒன்றாக இருக்கும்.

இலங்கையானது தன்னை பிறிதொரு சிங்கப்பூர் அல்லது கொரியா மட்டத்துக்கு அபிவிருத்தி செய்வதற்கு புதிய வல்லுநர்களின் ஆதரவும் அவர்களின் அறிவும் பயன்படுத்தப்பட வேண்டிய தேவையுள்ளது. இலங்கை இவர்களின் ஆதரவுடன் தனது சொந்தக் கலாசாரம் மற்றும் சூழல் சார் நியமங்களுடன் தன்னை அபிவிருத்தி செய்து கொள்வது மிகப் பொருத்தமானதாகும்.

### இலங்கையின் அபிவிருத்திக்கு சேவை நோக்கம் அவசியம்

இலங்கை அரசின் மூலோபாயத்தின் கீழ் கடன் பெறப்பட்டு நாட்டில் துரித கட்டுமான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகள் 2009 மேயில் தோற்கடிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளின் பின்னர் தற்போது வெளிநாட்டு முதலீடுகள் இலங்கையில் மிகக் குறைவடைந்துள்ளன. தொலைத்தொடர்பாடல், நிதிச் சேவைகள், சுற்றுலாத்துறை மற்றும் வர்த்தகம் போன்ற பல்வேறு சேவைத் துறைகளில் பெருமளவு வளர்ச்சி காணப்பட்டாலும் கூட்டு/கிராமியப் பொருளாதாரம் தொழில் வாய்ப்புக்கள் போன்றவை மந்தகதியிலேயே உள்ளன. இலங்கையின் பொருளாதாரமானது பல ஆயிரக்கணக்கான உள்நாட்டுத் தொழிலாளர்கள் மற்றும் வளைகுடாவில் பணிபுரியும் இலங்கையர்களிலும் அதிகம் தங்கியுள்ளது.

இலங்கையை அடுத்த கட்டத்துக்கு நகர்த்திச் செல்வதற்கு ஏதோவொன்று தவறியுள்ளது போல் தென்படுகிறது. இதனை ஈடுசெய்வதற்கு புலம்பெயர் இலங்கையர்கள் உதவமுடியும். இலங்கை அரசானது இந்த முயற்சியைக் கட்டுப்படுத்தாது இதற்கு அனுசரணையாகச் செயற்பட முடியும்.

இலங்கை அரசுக்கும் சிவில் சமூகத்துக்கும் இடையிலான ஒரு தொடர்பாடலாக இது காணப்படவேண்டும். பௌத்தர்கள், இந்துக்கள், கத்தோலிக்கர்கள் மற்றும் முஸ்லிம்கள் என எல்லோரும் ஒன்றிணையும் போது மட்டுமே இலங்கையை அடுத்த கட்டத்துக்கு இட்டுச்செல்லமுடியும். இலங்கையின் அபிவிருத்தியில் சேவை நோக்குடன் கைகோர்க்கும்போது புலம்பெயர் இலங்கையர்கள் நாடு திரும்பி நாட்டின் அபிவிருத்தியில் பங்கெடுக்க வேண்டும் எனக் கோருவதற்கான ஒரு ஆரம்பமாக அது இருக்கும்.

> 2011இல் கனடாவில் 450,000 வரையான இலங்கையர்கள் உள்ளதாகவும் இவர்களுள் 350,000 வரையானவர்கள் தமிழர்கள் எனவும் 75,000 இற்கும் மேற்பட்டவர்கள் சிங்களவர்கள் எனவும் 30,000 வரையானவர்கள் முஸ்லிம்கள் எனவும் மதிப்பிடப்பட்டதாக இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேபோன்று இலங்கையில் பிறந்த 300,000 வரையான மக்கள் பிரிட்டனில் வாழ்வதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இலங்கையின் 40 சதவீதமான தொழிற் படையினர் புலம்பெயர் நாடுகளில் வசித்து வரும் நிலையில் இவர்களைஒன்றிணைத்து இவர் களின் ஆற்றல்களைப்பகிர்ந்து கொண்டு நாட்டை முன்னேற்ற முடியும். இதற்கான அரசியல் தொழிற்படு சூழல் இலங்கையில் நிலவுகிறது.


(நன்றி: புதினப்பலகை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோன் கீல்ஸ் லாண்ட் நிறுவனத்தின் அடுக்குமாடி

ஜோன் கீல்ஸ் லாண்ட் நிறுவனம், யூனியன் பிளேஸில் உபாய ரீதியாக அமைக்கப்பட்ட தனது OThree20 என்ற வானுயர்ந்த அடுக்குமாடி குடிமனைத் தொகுதியின் விற்பனையை பொறுத்தமட்டில், மொத்தக் குடியிருப்புக்களில் 415குடியிருப்புக்கள் ஏற்கனவே விற்கப்பட்டு விட்டதாக அறிவித்துள்ளது.
மொத்தமாக விற்றுத் தீர்ப்பதற்கு இன்னும் 60குடியிருப்புக்களே மீதமாக இருக்கின்றன. அவையும் மிகக் குறுகிய காலப் பகுதிக்குள் விற்கப்பட்டு விடும் என்பதில் நாம் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறாம் என்று ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் நிறைவேற்று பிரதித் தலைவரும், ஜோன் கீல்ஸ் குழும சொத்துக்கள் பிரிவின் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரியுமான ரோஷானி ஜயசுந்தர மொறாயஸ் தெரிவித்தார்.
பரபரப்பான தலைநகரும் வர்த்தக மாவட்டமுமாகத் திகழும் கொழும்பின் மையப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள OThree20 அடுக்குமாடித் தொகுதி கொழும்பு நகர மத்தியிலமைந்த ஒரு பாலைவனச்சோலை என வர்ணிக்கப்படுகின்றது. ஜோன் கீல்ஸ் குழுமத்தின் சொத்து தொடர்பான வணிகப் பிரிவாகத் திகழும் ஜோன் கீல்ஸ் லாண்ட் நிறுவனத்தின் மனநிறைவைத் தருகின்ற மற்றுமொரு நவீன குடியிருப்புத் தொகுதி அபிவிருத்தித் திட்டமாக இது அமைகின்றது. 475குடியிருப்புக்களை உள்ளடக்கிய ஒவ்வொன்றும் 37மாடிகளைக் கொண்ட மூன்று கோபுரங்களை இந்த அடுக்குமாடித் தொகுதி உள்ளடக்கியுள்ளது. அதேவேளை ஹோட்டல்கள், சுப்பர் மார்க்கட் விற்பனை நிலையங்கள், பல்பொருள் அங்காடிகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள்

**வானுயர்ந்த அடுக்குமாடி குடிமனைத் தொகுதியின் விற்பனையை பொறுத்தமட்டில், மொத்தக் குடியிருப்புக்களில் 415குடியிருப்புக்கள் ஏற்கனவே விற்கப்பட்டு விட்டதாக அறிவித்துள்ளது.**



போன்றவற்றுக்கு மிகவும் அண்மித்ததாகவும் அமைந்துள்ளது.
நேர்த்தி மற்றும் நவீன காலத்திற்கேற்ற சிறப்பம்சங்களை ஒருங்கே கொண்டதாக அமைக்கப்பட்டுள்ள OThree20 அடுக்குமாடித் தொகுதி, அதனோடு சமகால வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வசதிகளை ஒன்றாக இணைத்துள்ளது. உண்மையில் நவீன வாழ்க்கை முறை தொடர்பான எதிர்பார்ப்புக்குப் பொருந்தும் விதத்திலேயே இந்த குடிமனை கட்டடத் தொகுதி நேர்த்தியான முறையில் வடிவமைப்புச் செய்யப்பட்டுள்ளது. இங்கு காணப்படுகின்ற உலக நடப்புகளுக்கேற்ற கட்டடக் கலை நுட்பம் மற்றும் சமகாலத்திற்கு அவசியமான வசதிகள் போன்றவை தலைநகரில் வசிப்பதற்கு மிகப் பொருத்தமான இடமாக இதனை மாற்றியமைக்கின்றன. (த)



ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் இரண்டாம் மேற்றரக் கிளையில் இடம்பெற்ற புது வருட நிகழ்வின்போது 18 பிளஸ் கணக்கை பேணிவந்த வாடிக்கையாளருக்கு தங்கப்பவுணை இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் ரி.எம்.ரி.தென்னக்கோன் வழங்கிக் கௌரவித்தார்: (த-14)

# நவீன மயப்படுத்தப்பட்ட பம்பலப்பிட்டி அபான்ஸ்

இலங்கையில் திருமதி அபான்ஸ் பெஸ்டன்ஜி அவர்களால் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட அபான்ஸ் நிறுவனத்தின் விற்பனை நிலையம் தற்போது மீள் நிர்மாணம் செய்யப்பட்டு நவீன வசதிகளுடன் மீண்டும் அபான்ஸ் காட்சியறையாக நேற்று திறந்து வைக்கப்பட்டது.
இன்று இலங்கையெங்கும் பரந்து விரிந்துள்ள அபான்ஸ் குழுமம் நாடெங்கிலும் தன்னுடைய காட்சியறைகளைக் கொண்டுள்ளது. இவை அனைத்துக்கும் ஆரம்பப்படியாக அமைந்த இந்த விற்பனை நிலையம் இன்று நவீனமயமாக்கப்பட்ட காட்சியறையாக புனர்நிர்மாணம் செய்யப்பட்டு, தனது வாடிக்கையாளர்களதும் நலன் கருதி மீண்டும் திறக்கப்பட்டது.
இல.396, காலி வீதி, பம்பலப்பிட்டிய (பம்பலப்பிட்டிய மாணிக்கப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில், பம்பலப்பிட்டி தொடர் மாடி குடியிருப்புக்கு எதிரில்) என்ற முகவரியில் அமைந்துள்ள இந்த காட்சியறை அபான்ஸ் வாடிக்கையாளர்களின் தேவையறிந்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்த காட்சிய றையாகும். இது நீண்ட காலந் தொட்டே பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை போன்ற பகுதிகளில் வாழுந் தமிழ் மக்களுக்கென விழாக்காலங்களில் மிகவும் கவர்ச்சியான சலுகைகள் மற்றும் தள்ளுபடிகள் போன்றவற்றை வழங்கி வருகின்றது. அபான்ஸ் நிறுவனத்தின் ஆரம்ப கால வாடிக்கையாளர்கள் இப்போது இதன் தற்போதைய வாடிக்கையாளர்களாய் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.
என்றும் தனது வாடிக்கையாளர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும், தள்ளுபடிகளையும் வழங்கும் அபான்ஸ் நிறுவனம் மீள் நிர்மாணம் செய்து ஆரம்பிக்கும் இந்த காட்சியறையின் மூலம் உலகத்தரம் வாய்ந்த சகல தொலைக்காட்சிப் பெட்டிகள், குளிரூட்டிகள், வளிச்சீராக்கிகள், சலவை இயந்திரங்கள், ஆடியோ செட்டுகள் போன்றவற்றோடு சகல சமையலறை உபகரணங்களையும் உள்ளடக்கியுள்ளது.
உங்கள் வீட்டுக்கும் மற்றும் உங்கள் சமையலறைக்கும் தேவையான அனைத்துப் பொருள்களையும் வட்டியில்லாது இலகு தவணை முறையில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் உங்கள் வசதிக்கேற்ற முற்கொடுப்பனவு குறையை செலுத்தியும் எடுத்துச் செல்லும் வசதியையும் வழங்குகின்றது.
மேலும் உழவர் திருநாளாம் இந்த தைப்பொங்கல் காலத்தில் ஜனவரி 10 ஆம் திகதி முதல் பொங்கல் தினமான 14 ஆம் திகதி வரை சகல பொருள்களுக்கும் விசேட விலைக் கழிவுகள், இலவச பரிசுகள் மற்றும் மாற்றீட்டுச் சலுகைகளையும் வழங்குகின்றது. தொடர்புகளுக்கு 011 259 0502/077 423 2378.

# புதிய ஸ்மார்ட் போன்

## வகைகளை அறிமுகம் செய்யும் மைக்ரோமெக்ஸ்



இந்தியாவின் முன்னணி கையடக்க தொலைபேசி உற்பத்தி நிறுவனமான மைக்ரோமெக்ஸ் நிறுவனம் அதன் கேன்வாஸ் தொடரில் 3G அண்ட்ரொயிட் தொழில்நுட்பத்தில் அமைந்த புதிய 45 அங்குல A74 Cavas Fu மற்றும் 5 அங்குல A76 Cavas Fu ஸ்மார்ட் போன் வகைகளை அறிமுகம் செய்துள்ளது.
இவ்விரு ஸ்மார்ட்ஃபோன்களிலும் முன் ஏற்றப்பட்ட அப்ளிகேஷன்கள், Tiled otificatio மற்றும் முழுமையான திரை தெளிவுத்திறனுக்கு மேலதிகமாக சிறந்த பயனர் இடைமுகம் வசதிகள் காணப்படுகின்றன. அண்ட்ரொயிட் 4.2.2 ஜெல்லி பீன் சிஸ்டத்தில் இயங்குவதனால் பாவனையாளர்கள் தாம் விரும்பிய Google Play பயன்பாடுகளை தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.
5 மெகா பிக்செல் பின்கமரா மற்றும் 0.3 மெகா பிக்செல் முன்கமரா மூலம் வீடியோ அழைப்பு மற்றும் Chats களை மேற்கொள்ள முடிவதுடன், பாவனையாளர்கள் தமது மகிழ்ச்சியான தரு ணங்களை உச்சத் தெளிவுடன் படம் பிடித்து வைத்துக் கொள்ள முடியும். மேலும் எந்நேரத்திலும் கோப்புக்களைப் பகிர்ந்துகொள்ளக் கூடிய வகையில் Bluetooth 2.0, Wi-Fi, USB 2.0 மற்றும் GSP ஆகியன நெட் வொர்க் இணைப்புக்கு உதவுகின்றன. இவ்விரு கைத் தொலைபேசிகளின் உள்ளக மெமரியை 32 GB வரை விஸ்தரித்துக்கொள்ள முடியும். A74 மற்றும் A76 இலுள்ள 1.3 GHz மற்றும் 1.3 1.3 GHz dual core processor சிப் இனை கொண்டுள்ளதனால் அதிவேக மான கேமிங் அனுபவத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
A74 ஆனது 1500 mAh மற்றும் A76 ஆனது 2000 mAh பற்றரிசெயற்திறனைக் கொண்டுள்ளது. தமது வடிவமைப்புக்களின் தரத்தை அதிகரிக்கும் வகையில், Mystic Blue, Ragig Red மற்றும் Midight Black போன்ற வர்ணத்தெரிவுகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. (த)

# மக்கள் வங்கி வழங்கி வரும் சேவைகள் மகத்தானவை

*பேராசிரியர் சின்னத்தம்பி புகழாரம்*

யாழ்ப்பாணம், ஜன.12
வங்கியில் மேற்கொள்ளப்படுகின்ற சேமிப்புகள் வங்கிக்கானது அல்ல. சேமிப்பவரின் வாழ்க்கைக்கு பாதுகாப்பானது என்பதை நாம் உணர்ந்து எம் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தைக் கொண்டுவர வேண்டும் என்று யாழ்.பல்கலைக் கழக கலைத்துறைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி தெரிவித்தார்.
மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையின் ஏற்பாட்டில் 'இசுறு உதான', சிசு உதான' கணக்கின் சீட்டிழுப்பு நிகழ்வு அண்மையில் வங்கியில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது;
கூட்டுறவு எவ்வாறு மக்களோடு ஒன்றிணைந்து அவர்களின் வாழ்க்கையை வளப்படுத்தி வந்ததோ அதே மாதிரியான ஒரு சேவையை மக்கள் வங்கி வழங்கி வருகிறது. கிராமிய மட்டங்களிலும் சாதாரண மக்கள் மத்தியிலும் மக்களோடு இணைந்து வங்கிச் சேவையை வழங்கி வருகிறது.
அந்த வகையில் சிறுவர்களுக்கான சிசு உதான மற்றும் இசுறுஉதான கணக்குகளைப் பேணிவரும் சிறார்களைக் கௌரவப்படுத்தும் முகமாக அவர்களுக்கான வெகுமதிகளை வழங்க வங்கி முன்வந்துள்ளது.
பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குச் சேமிப்புப் பழக்கத்தை கற்றுக் கொடுக்க வேண்டும். சேமிப்பு என்பது பாதுகாப்பு என்பதை நாம் உணர வேண்டும். சிறுவர்களுக்கான சேமிப்புகள் அவர்களின் எதிர்காலத்துக்கான முன்னேற்றப் பாதைக்கு பெருந்தொகை நிதியைப் பெற்றுக் கொடுப்பதாக அமையும்.
வங்கியில் சேமிப்பு மேற்கொள்வது வங்கிக்கானது அல்ல. எம்மால் செய்ய முடியாத ஒன்றை வங்கி செய்கிறது. மிக எளிமையாகவும், பாதுகாப்பாகவும் மக்களுடைய நலனுக்கான சேவையை வங்கி செய்கிறது.
எனவே வங்கி எமக்கு கொடுக்கின்ற இந்த உதவியை நாம் பயனுள்ள வகையில் பயன்படுத்தி வாழ்க்கையை வெற்றிகொள்வோம் - என்றார். (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

நாளை

மார்கழி-29 திங்கட்கிழமை 13.01.2014
திதி: திரயோதசி முழுவதும்
நட்சத்திரம்: ரோகிணி.கா.06.37 வரை
சுபநேரம்: 12.33- 02.03 வரை
இராகுகாலம்:08.03.-09.33 வரை

**மேடம்**: குடும்பத்தினருடன் சின்னச் சின்ன விவாதங்கள் வந்துப் போகும். அரசு காரியங்கள் இழுபறியாகும். விலை உயர்ந்த பொருள்களைக் கவனமாகக் கையாளுங்கள்.

**இடபம்**: அதிரடியாகச் செயல்பட்டு சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பணவரவு உண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**மிதுனம்**: இரண்டுமூன்று நாள்களாக முடியாமல் இழுத்தடித்த காரியங்களெல்லாம் இனி முடிவுக்கு வரும். கணவன் - மனை விக்குள் அன்னியோன்னியம் பிறக்கும். பிள் ளைகளின் நீண்டாநாள் கோரிக்கைகளை ப்பூர்த்தி செய்வீர்கள்.

**கடகம்** : மன உளைச்சல் நீங்கும். கலகலப்பாக சிரித்துப்பேசும் சூழல் அமையும். கணவன் - மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்

**சிங்கம்**: சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் இருக்கும். சின்னச் சின்ன அவமானங்கள் வரக் கூடும். விமர்சனங்களைக் கண்டு அஞ்சாதீர்கள்.

**கன்னி**: ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். குடும்பத்தினரின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். தாயின் உடல் நிலை சீராகும். நண்பர்கள், உறவினர்களின் உதவி கிட்டும். மனக்குழப்பங்கள் நீங்கும்.

**துலாம்**: சோர்வு, அலைச்சல் நீங்கி ஆனந்தமாக காணப்படுவீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். கையில் காசுபணம் தேவையான அளவு இருக்கும். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அரசியல்வாதிகளின் ஆதரவு கிட்டும்.

**விருச்சிகம்**: நீண்ட நாள் எண்ணங்கள் பூர்த்தியாக முயற்சிப்பீர்கள். பிள்ளைகளின் உடல்நலத்தில் அக்கறைக் காட்டுவீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மன உளைச்சல் நீங்கும்.

**தனுசு**: மன உறுதியுடன் செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் மகிழ்ச்சியுண்டு. குழந்தைகளின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள்.

**மகரம்**: புது முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்தில் இருந்து பணவரவு உண்டு. கணவன் - மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். முன்கோபம் விலகும். பிரியமானவர்களைச் சந்தித்துப் பொழுதைக் கழிப்பீர்கள்.

**கும்பம்**: உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்துப் போவீர்கள். பிள்ளைகளின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வீர்கள்.

**மீனம்**: கணவன் - மனைவிக்குள் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். யாருக்கும் பணம், நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2 | | | 3 | 5 | | 7 |
| | | 6 | 4 | 9 | | | 8 | |
| | 7 | | | | | 9 | | 1 |
| 5 | | | | 2 | | 6 | | 8 |
| 2 | | | | | | | | 4 |
| 3 | | | | 8 | | 7 | | 5 |
| 7 | | 1 | | | | | 5 | |
| | 4 | | | 1 | 6 | 2 | | |
| 6 | | 5 | 3 | | | 4 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 9 | 5 | 4 | 6 | 8 | 1 | 7 |
| 8 | 1 | 5 | 9 | 2 | 7 | 4 | 6 | 3 |
| 7 | 6 | 4 | 8 | 1 | 3 | 2 | 9 | 5 |
| 6 | 5 | 7 | 3 | 9 | 8 | 1 | 2 | 4 |
| 1 | 9 | 2 | 7 | 5 | 4 | 6 | 3 | 8 |
| 4 | 3 | 8 | 2 | 6 | 1 | 7 | 5 | 9 |
| 2 | 8 | 6 | 4 | 3 | 5 | 9 | 7 | 1 |
| 9 | 4 | 3 | 1 | 7 | 2 | 5 | 8 | 6 |
| 5 | 7 | 1 | 6 | 8 | 9 | 3 | 4 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

எங்கள் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும்
மெழுகுவர்த்தியாய் இருந்து தன்னையே உருக்கி
ஒளியூட்டிய எங்களின் ஆருயிர்த் தெய்வத்தாய்......

## அமரர் இராமலிங்கம் குணம்

(பெரியம்மா - பொலிஸ்பெரியப்பா / பொலிஸ் ஐயாவின் பாசமிகு மனைவி)



அன்னை மடியில்
24.09.1939

இறைவன் அடியில்
25.12.2012

ஓராண்டு சென்றாலும் நாளாக நாளாக தீராது உன் பிரிவின் வலி
கால்நூற்றாண்டு கடந்தாலும் - உன் கருணை முகம் காணாது
அடங்காது நாம் கதறி அழும் ஒலி ஊர் ஊராக உறவென்று சொல்லி
ஆராரோ வந்து ஆற்றினாலும் ஆறாது உயிரின் வலி
வாராயோ எமை வந்து பாராயோ என ஏங்குது எம் விழி - நீ
இல்லை என்று இருக்கையிலே இதயத்தில் இறங்குது உளி

தாய்க்கெல்லாம் தாயாக நோய்தீர்க்கும் மருந்தாக
காயாத கடலைப் போல் பாய்ந்துவரும் உன்பாசம்
ஓயாமல் தேடும் சேயாக நாம் அலைய
இணுவில் முதற்கொண்டு இடம்பெயர்ந்திருந்த இடமெல்லாம்
இருப்பவர் இதயத்தில் பெரியம்மா என்று உன்னை
உரிமையாய் உச்சரித்த உறவுகள் உருக்குலைய
பார்த்திருந்த பரமசிவனும் - உன்
பாசத்தில் பங்கு கேட்டு பக்கத்தில் அழைத்துக் கொண்டானே!

கடந்த 25.12.2012 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி **அமரர் இராமலிங்கம் குணம்** அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை இன்று (12.01.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் நினைவுப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சந்தானகிருஷ்ணன்** (மகன் -Instructor, Vavuniya Campus),
**கணவர்** (பொலிஸ் பெரியப்பா/ பொலிஸ் ஐயா - ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)
**மற்றும் குடும்பத்தினர்.**

**மகாதனை, துர்க்காபுரம்,தெல்லிப்பழை.**
T.P.:077 666 0456. 021 790 3558 (42275) (2.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வதிரி தமிழ் மன்ற முன்பள்ளியில் அண்மையில் நடைபெற்ற கலை விழா மற்றும் பரிசளிப்பு நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சிறார்கள் தேவாரம் இசைப்பதையும் காணலாம். (ஒ)



கைதடி அரச முதியோர் இல்லத்தில் முகாமைத்துவ உதவியாளராகச் சேவை புரிந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற திருமதி பா.நிர்மலாதேவிக்கு இல்லத்தில் உள்ள மூதாட்டி ஒருவர் பிரியாவிடை நிகழ்வில் அன்பளிப்பு வழங்குகிறார். (ஒ-51)



உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்ட சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சிவானந்தராசா, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.அமிர்தலிங்கம் ஆகியோரை அதிபர் தி.தேவதயாளன் வரவேற்கிறார். (ஒ)



வல்வை கலை, கலாசார இலக்கிய மன்றத்தால் அண்மையில் வல்வெட்டித்துறையில் நடத்தப்பட்ட கலை இலக்கிய விழாவில் பிரதம விருந்தினரான யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினரான வல்வை ஆவணக் காப்பாளர் பா.மீனாட்சிசுந்தரம் ஆகியோர் வரவேற்கப்படுவதை காணலாம். (ஒ-422)



வலி.கிழக்கு தென்பகுதி (நீர்வேலி) ப.நோ.கூ.சங்கத்தின் உரும்பிராய் கூட்டுறவு நகரை தென் கிழக்காசிய நாடுகளின் கூட்டுறவாளர் குழு நேரில் சென்று பார்வையிட்டது. நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் மங்கல விளக்கேற்றுகிறார். (ஒ-11)




கைதடி அரச முதியோர் இல்லத்தின் புதிதாகத் தெரிவான ஊழியர் நலன்புரி சங்க உறுப்பினர்கள் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரனுடன். ... (ஒ-51)



யாழ். மாவட்ட சமுர்த்தி அலுவலகர்களின் நத்தார் ஒளிவிழா ஊர்காவற்றுறை பிரதேசத்தில் சமுர்த்தி உதவி ஆணையாளர் எஸ். மகேஸ்வரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் கலந்து கொண்டார். சிறுவர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படுவதைக் காணலாம். (ஒ-21)



யாழ்.தாவடியைச் சேர்ந்த முத்தையா மாசிலாமணி 2013 ஆம் ஆண்டுக்கான அரச விருது விழாவில் இலக்கியம் நாடகத்துறைக்கான கலாபூஷணம் விருதைப் பெற்றுக் கொண்டார். (ஒ-10)




கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் நடைபெற்ற குடும்ப விழாவில் 'ஒளிவிழா' இடம்பெற்ற நாடகக் காட்சி. (ஒ-135)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Bitdefender

## WORLD'S #1 RANKED ANTIVIRUS TECHNOLOGY

**உலக தரப்படுத்தலில் முதல் இடத்தில் இருக்கும் Antivirus தொழில்நுட்பம் இப்பொழுது யாழ். மண்ணில்**




**SPECIAL OFFER ON JITF 2014**

**இப்பொழுது! வட பிராந்திய அனைத்து கணினி காட்சியறைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்**

**பெயர் சொல்லிக் கேட்டு வாங்குங்கள் "BITDEFENDER"**

**1 USER Rs. 1650.00**

**3 USER Rs. 3200.00**

**இம் மாதம் 17ஆம், 18ஆம், 19 ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் யாழ். சர்வதேச வர்த்தகச் சந்தை - 2014 (JITF - 2014 ) 47ஆம் - இலக்க Stall இக்கு வருகைதந்து Bitdefender - 2014 Launch இல் கலந்துகொண்டு சிறப்புச் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.**

**வடபிராந்திய தலைமை விநியோகஸ்தர்**

(சி.10769) (45.6.3)

**NORTHERN COMPUTERS**
Innovative Solutions!

# 303, Kasthuriyar Road,
Jaffna, Sri Lanka.
Tel: +9477 555 97 55
Email: ncjaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# After O/Level's

## சர்வதேச தரம் வாய்ந்த டிப்ளோமா கற்கைநெறிகள்

DiTEC INTERNATIONAL **Diploma in Information Technology**

Duration : 3 months — Free Text Books — assured by edexcel

*With an International Certification (Edexcel - UK)*



FREE DVD with Role-play Videos

DiE INTERNATIONAL **Diploma in English**

Duration : 3 months — Free Text Books — assured by edexcel

### கற்கைநெறியின் சிறப்பம்சங்கள்

- 10 பாட டிப்ளோமாக்கள் உள்ளடங்கியது
- பாடப்புத்தகங்கள் இலவசம்
- அனுபவமிக்க விரிவுரையாளர்கள்
- ESOFT இன் 10 பாட டிப்ளோமாக்கள் சான்றிதழுடன் Edexcel UK, BCS-UK போன்ற பிரித்தானிய சான்றிதழ்களையும் பெறமுடியும்.

கற்கைநெறி முடிவில் 6 சான்றிதழ்கள்

பிரித்தானியப் பட்டப்படிப்பின் முதல் வருடப் பட்டப்படிப்பிற்கு சமனான கற்கைநெறி

**Merit Base Offer**

50% Discount — 3 "A" Pass* — 2 "A" Pass* — "A" Pass*

Most popular IT Diploma in Sri Lanka Over 25,000 enrollments in 2012

### International Recognized Diplomas are ONLY @ ESOFT

DiSE assured by edexcel INTERNATIONAL — Diploma In Software Engineering

DiCA assured by edexcel INTERNATIONAL — Diploma In Computerized Accounting

DiBM assured by edexcel INTERNATIONAL — Diploma In Business Management

DiWE assured by edexcel INTERNATIONAL — Diploma In Web Engineering

(C/10766)

**புதிய பிரிவுகள்**
**2014.01.15 காலை 9 : 00 மணி**

பாடநெறிகள் தொடர்பாகமேலதிக தகவல்களை தெரிந்துகொள்வதற்கு உங்கள் பெயர் மற்றும் பாடநெறியினை கீழுள்ள இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்
**077 990 56 11**

The Sri Lanka's Largest **IT, Business & English** Education Network

ESOFT — Shaping Lives, Creating Futures. — ESOFT METRO CAMPUS — Sri Lanka's Largest IT Education Network

**ESOFT METRO CAMPUS - JAFFNA**
No.137, K.K.S Road, Jaffna | Tel: 021 222 4142 | 077 309 9 308

KILINOCHCHI BRANCH: 01, Kanagapuram Rd, Kili | 021 228 5444

JAFFNA 2nd BRANCH: No.17/1, Brown Rd, Jaffna| 021 750 1120

# புல்லாங்குழல் இசை



**"வேணுகான மணி"**
**பிச்சையப்பா ஞானவரதன்**

இங்கிலாந்தின் குழலிசைச்சக்கரவர்த்தி, இலங்கையிலும்......
**யாழ்.பல்கலைக்கழக இசைத்துறையின் ஏற்பாட்டில்**
காலம்:இன்று (12.01.2013) ஞாயிறு பி.ப. 3 மணி
இடம்: யாழ். பல்கலைக்கழக கைலாசபதிகலையரங்கம்

சங்கீத கலாநிதி Dr.N.ரமணி, மறைந்த "கலாசூரி" T.V.பிச்சையப்பா ஆகியோரின் மாணவன். இவர் குழலிசை ஒலிக்காத நாடே இல்லை. 2012 மார்கழி இசைவிழாவில் "*குழலிசை ஜோதி*" என்ற பட்டத்தினைப் பெற்றவர். மிருதங்க மேதை காரைக்குடி R.மணி, இசையமைப்பாளர் நரசிம்மன், நாட்டிய மேதைகள், அடையார் லஷ்மணன், தனஞ்சயன், சித்திரா விஸ்வேஷ்வரன் போன்ற பல கலைஞர்களுடன் இணைந்து வாசித்துள்ளார். தனது "*கவின்கலை*" அமைப்பின் மூலம் 29 மாணவரை அரங்கேற்றியுள்ளார்.

அத்துடன் இராமநாதன் நுண்கலைக்கழகத்தினரது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

இசைத்துறையினர், யாழ். பல்கலைக்கழகம்.
(42289)(3.6.4) 071 20 100 20

## கல்வி

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் தரம் 6 முதல் தரம் 11 வரை ஆங்கில வகுப்புக்கள், தரம் 10, 11இக்கு வணிகக் கல்வியும் கணக்கீடும் வகுப்புக்கள். 15.01.2014 முதல் ஆரம்பம்.
தொடர்பு : 071 654 3985 (42293) (7.8.3)

## வாடகைக்கு

யாழ்.நகர் மத்தியிலிருந்து 1½ கி.மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள நிறுவனங்கள், மற்றும் காரியாலய பாவனைக்கு உகந்தவகையில் அமைக்கப்பட்ட கட்டடத்தொகுதி வாடகைக்குண்டு. (1800 சதுர அடி விஸ்தீரணம்).
தொடர்பு:
077 765 6918/077 218 8840 (42287)(12.3.5.)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கில் 4 பரப்புக் காணி உடனடி விற்பனைக்கு உண்டு. விலை பேசித்தீர்க்கலாம்.
தொடர்பு: 071 860 7327, 077 693 9592 (42290) (2.8.3)

## வன்னிப் பிரதேசத்தில் 5 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி இடமாற்றம் கிடைக்கப்பெறாத ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடல்

நாளை (13.01.2014) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். முத்திரைச் சந்தியின் அருகில் மேற்படி இடமாற்றம் சம்பந்தமான ஒன்றுகூடல் நடைபெறவுள்ளதால் தவறாது ஆசிரியர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள்
(42294) (46.3.6)

# MBBS 2014 - 27th Batch

University of Science & Technology, Chittagong Bangladesh **(USTC)**

**World Health Organisation (WHO), General Medical Council-UK (GMC), Sri Lanka Medical Council (SLMC)**
இனால் அங்கீகரிக்கப்பட்டது



- தவணை முறை கொடுப்பனவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
- குறிப்பிட்டளவான அனுமதிகள் மாத்திரமே உள்ளன.
- உடனடிப் பயணம்
- தங்குமிட வசதி ஒழுங்கு செய்துதரப்படும்.

**நேர்முகப்பரீட்சை :**
திகதி : 2014, ஜனவரி 14
நேரம் : காலை 10.00 மணி
எமது காரியாலயத்தில் நடைபெறும்

**Institute of Vocational Studies (Pvt) Ltd.**
No. 476, Kandy Road (டயர் கோபரேசன் சந்தி, செங்கடகல பினான்ஸ் எதிரில் ), Dalugama, Kelaniya.
Tel : 0112 910 323, Hotline : 0777 444 500 / 07777 57337,
Fax : 0114 810 829
(C/10507)

**SRI LANKAN-GERMAN DEVELOPMENT COOPERATION** — giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

## Project Coordinator - Diary Project (Jaffna District)

The Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) is an international cooperation enterprise for sustainable development with worldwide operations. As a federally owned enterprise, we support the German Government in achieving its objectives in the field of international cooperation for sustainable development. GIZ drives projects that support Sri Lanka's development objectives and works with stakeholders from across the spectrum in the government, public and private sectors.

The Dairy Development Project Northern Province aims at improving milk production and income for dairy farmers in Chavakachcheri division in Jaffna District. It will be jointly implemented by Tetra Laval Food for Development Office, Cargills (Ceylon) PLC and GIZ. The project will use unique methodologies developed and tested in a number of Asian countries. The objective is to replicate the successes of these pilot projects commencing in Chavakachcheri into other divisions, districts and eventually nationwide.

In this regard, the project invites applications from highly motivated and committed professionals possessing a background in agriculture, ideally dairy, Tamil speaking and familiar with the local context. Most of all, the candidate must have "mover qualities" combined with a strong sensitivity in order to bring in and motivate farmers, connect with local institutions as well as stakeholders based in Colombo.

The Project Coordinator is responsible for planning, coordinating, and directing the milk improvements initially among 100 (gradually expanded to 400 or more) smallholder dairy producers included in the local commercial dairy value chain in the Chavakachcheri division with special focus on the key areas of:

- Implementation of the Programme as per proven methodology from other developing countries - the successful candidate will be fully trained to implement the methodology;
- Coordination and Management of project activities in the Programme area;
- Networking, Partner and Key stakeholder Relationship Management and
- Efficient and cost effective Programme Management.

**Required qualifications, competencies/skill and experience**

**FORMAL EDUCATION:**
- Degree in Agricultural Engineering with specialization in Animal Husbandry Science or Veterinary Science

**PROFESSIONAL EXPERIENCE:**
- At least 5 years of proven ability and experience in dairy management systems with a minimum of 2 years management experience in program implementation at district or national level.

The selected candidate must be in good physical shape since the job involves a substantial amount of time being spent hands on at various small dairy farms (80% of time spent in field).

Qualified applicants must submit an updated CV including 1)a one page-writing sample that describes how you would develop a plan to motivate local farmers, connect with local institution as well as the stakeholders based in Colombo, 2)email & telephone contacts of two professional referees to giz-hrsrilanka@giz.de or by post to the Human Resource Unit, GIZ Colombo, No. 5, Jawatte Avenue, Colombo 5, before cob **21 January 2014**.

Candidates who had applied for the previous advertisement need not apply again.

(C/10506) We thank all applicants but only the short listed candidates will be contacted.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகிறோம்




நேற்று 11.01.2014இல்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்
"சிறப்புக் கலைமாணி" பட்டம் பெற்ற
கந்தரோடை, கோபாலசர்மா-பவானி அம்மா
தம்பதிகளின் தவப்புதல்வன்
**கோ.ரகுவரன்** B.A(Hons)
அவர்களை ஆசீர்வதித்து
எமது வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

Best Wishes வாழ்த்துவோர்:
**க.வைத்தீசுவரக் குருக்களும்,**
**பிள்ளைகளும்.**
**கந்தரோடை, சுன்னாகம்.**

## மின்சாரம் தாக்கியதில் ஊழியர்கள் இருவர் படுகாயம்

இலங்கை மின்சார சபையின் வவுனியா அலுவலகத்தைச் சேர்ந்த ஊழியர்கள் இருவர் மின்சாரம் தாக்கியதில் படுகாயமடைந்து வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

நேற்றுக்காலை 9 மணியளவில் வவுனியா நகரசபைக்கு முன்பாக உள்ள வீதியொன்றில் திருத்த வேலைகளில் ஈடுபட்ட என்.ஜெயசூரிய (வயது-43), எஸ்.தவரூபன் (வயது-33) ஆகிய இருவருமே படுகாயமடைந்தனர். இவர்கள் உடனடியாக மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மின்சார சபையின் பொறியியலாளர் எஸ்.பிரபாகரனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது:

நகர சபைக்கு முன்னால் உள்ள மின் கம்பத்தில் எமது ஊழியரான ஜெயசூரிய ஏறிய போது அவருக்குத் திடீரென மாரடைப்பு ஏற்பட்டுஅவர் துடிதுடித்தார். அவரைக் காப்பாற்றுவதற்கு இன்னொரு ஊழியரான தவரூபன் முற்பட்டார். இதன் போது இரு வரும் மின் சாரம் தாக்கி எரிகாயங்களுக்கு உள்ளாகினர் எனத் தெரிவித்தார்.

(க-402)

## Future Green World (pvt) Ltd
## எதிர்காலத்தின் பசுமை உலகம்

வடமாகாணத்தைத் தளமாகக் கொண்டியங்கும் Future Green World (pvt) Ltd ஆனது கடன் சுமையால் வாடும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக விவசாயம், கால்நடை வளர்ப்பு, மரநடுகைத் திட்டங்களை அறிமுகப்படுத்தி நடை முறைப்படுத்தி வருகிறது.

**நீங்கள் கடன் சுமையில் வாடுகிறீர்களா?**

எங்களுடன் கைகோருங்கள் வருமானத்தை அதிகரியுங்கள்

**எமது திட்டங்கள்**

- ★சந்தன மர பயிர்ச்செய்கை
- ★மலைவேம்பு பயிர்ச்செய்கை
- ★தேக்குமரப் பயிர்ச்செய்கை
- ★ பெஷன் புருட் உற்பத்தி
- ★பப்பாசி உற்பத்தி
- ★சோளன் உற்பத்தி
- ★பயறு உற்பத்தி
- ★எள்ளு உற்பத்தி
- ★பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களுக்கு ★கோழி வளர்ப்பு
- ★மாடுவளர்ப்பு திட்டங்களை வழங்கி அவற்றுக்கான சந்தை வாய்ப்புக்களையும் வழங்குகின்றோம்.
- ★ மாதர்சங்கங்கள், பெண்கள் அபிவிருத்திக் குழுவினர் நேரடியாகவோ அல்லது தபால், தொலை பேசி மூலமாகவோ எம்மைத் தொடர்பு கொள்ள முடியும்.

**நிறைவேற்றுப் பணிப்பாளர்** Future Green World (Pvt) Ltd
இல.15, இரணைமடுச்சந்தி, கிளிநொச்சி
T.P: 077 665 5433/021 568 5999
E mail -greenworldsan@gmail.com

(42208)
(4.6.3)




## O/L-ONLY
**NO NEED IELTS**
ENGLISH COURSE

**TOTAL COST 325,000/=**
(Reg fee + College Admi + Visa fee + Consult fee + Air Ticket)

**BEST OPPORTUNITY**

O/L உடன் ஆங்கிலம் கற்க **canada** செல்லவுள்ள மாணவ மாணவிகளுக்கு ஓர் அரிய சந்தர்பம் **college** கட்டணம் **canada** சென்ற பின்னரே.தவற விடவேண்டாம்.

**INTERNATIONAL CITY COLLEGE**
No: 07 ,W.A.SILVA MAWATHA, WELLAWATTE,COLOMBO-06.
TEL: 0114 594 104 Hot: 077 12 50 789 FAX: 0112 582722

## யாழ் மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

**கறுப்பாக இருக்கிறீர்களா? உடற்பருமனா?**

**இதோ ஓர் பொன்னான வாய்ப்பு**
ஆம்!!! New Whiteinig Super Cream

கரும்புள்ளி / பரு / முகச்சுருக்கம் / கை கறுப்பு /
உடம்பு நிறம் முக நிறம் போன்ற அனைத்து பிரச்சனைக்கும் சிறந்த தீர்வு

மற்றும் 1 மாதத்தில் 5 – 10% வரை குறைக்க
அருமையான மருந்து உள்ளது
இரு பாலர் அனைவருக்கும் ஏற்றது

**தைத்திருநாளை முன்னிட்டு**

2 Whitening Cream வாங்கினால்
1 Day Cream Free
வாய்ப்பை தவற விடவேண்டாம்

(C/10514)
Tel: 0716733292




## CHILD PROTECTION
### TECHNICAL ADVISOR - KILINOCHCHI

Save the Children is implementing the USAID funded "New beginnings" project in four provinces through 2014.

The ideal candidate for the above position will have a,

- Record of successful implementation of child protection programs in diverse settings
- He / she should be a University graduate (Masters and/or Bachelor's degree) in child development or related field
- Excellent written, spoken English and fluency in Tamil
- Field-based experience working with an NGO
- Minimum of 06 years' experience and good knowledge of Child Protection approaches and tools
- 50% travel to provinces (C/10505)
- Salary will commensurate with experience & qualification

Please refer to our web site www.savethechildren.lk for the specific job profile.

Please send your CV's, with the names and contact details of two non-related referees, to the given address within 7 working days of this advertisement. Please state the position applied for, on the top left corner of the envelope or as the subject of the e-mail.

**Save the Children International**
12, Amarasekara Mawatha, Colombo 5
E-mail: slhr@savethechildren.org
Only applicants selected for the interview will be contacted.

SUCCESS ADZ

## நல்லூர் பிரதேசசபை கொக்குவில் உப அலுவலகம்
## ஆதனப் பெயர் மாற்றம்

**வட்டாரம் - 12, குமரக்கோட்டம்வீதி,**
**ஆதன இலக்கம் - 19**

நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட கொக்குவில் உப அலுவலக வட்டாரம் -12, குமரக்கோட்டம் வீதி, 19 என்ற இலக்கங்களைக் கொண்ட ஆதனம் கே.இராசையா கைம்பெண் இராசலட்சுமி உ.கோ.இராசையா இராசேந்திரம் எனும் பெயரில் எமது ஆதன பதிவேட்டில் காணப்படுகின்றது.

இந்த ஆதனத்தை கந்தையா இராசையா இராஜேந்திரம் மகள் அனுஷா என்பவர் நொத்தாரிசு சா.அபிமன்னசிங்கம் முகதாவில் 2748ஆம் இலக்க 06.07.1998ஆம் திகதிய பிரகடன உறுதி மூலம் தனது பெயருக்கு வெளிப்படுத்தல் செய்து, நொத்தாரிசு சா.அபிமன்னசிங்கம் முகதாவில் 5281ஆம் இலக்க 26.01.2009ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் இராசேந்திரம் உதயகுமார், இராசேந்திரம் மகள் அனுஷா, இராசேந்திரம் மகள் றஜிதா ஆகியோரால் குறித்த இராசேந்திரம் சசிகுமார், இராசேந்திரம் ராஜ்குமார் ஆகியோருக்கு நன்கொடை வழங்கியுள்ளார். இதன் மிகுதி ஆதனத்தை நொத்தாரிசு சா.அபிமன்னசிங்கம் முகதாவில் 5280ஆம் இலக்க 26.01.2009ஆம் திகதிய நன்கொடை உறுதிமூலம் இராசேந்திரம் மகள் அனுஷா, இராசேந்திரம் மகள் றஜிதா, இராசேந்திரம் சசிகுமார், இராசேந்திரம் ராஜ்குமார் ஆகியோரால் குறித்த இராசேந்திரம் உதயகுமாருக்கு நன்கொடை வழங்கி உள்ளார்.

தற்போது இவ்வாதனங்களை இராசேந்திரம் சசிகுமார், இராசேந்திரம் உதயகுமார் என்பவர்கள் தங்களது பெயருக்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்கள். எனவே, இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து, குறித்த ஆதனமானது இராசேந்திரம் சசிகுமார், இராசேந்திரம் ராஜ்குமார், இராசேந்திரம் உதயகுமார் எனும் பெயர்களுக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், இந்த ஆதனப் பெயர் மாற்றங்கள் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ப.வசந்தகுமார்,**
**தலைவர்**
**நல்லூர் பிரதேசசபை.**

## SICHER® German Technology
## 25% வரை
விலை கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்

**2014 யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சிக்கு வாருங்கள்**
JITF இடம் துரையப்பா விளையாட்டு அரங்கில் திகதி ஜனவரி 17 | 18 | 19




**DISCOUNT VOUCHER**
25% FOR SICHER PRODUCTS
31.01.2014 வரை
Reliable Equipment
Showroom
இல.408, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10. Tel:0117 444 408
Terms & Conditions Applicable

DEEN 077 7783089 RANJITH 077 3856769 FEROZ 077 3832684
www.sichersrilanka.com | www.reliablesl.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வியாபார நோக்கமற்ற மணல் சேவை செய்வதற்கு பாரவூர்தி சங்கம் தயார்

*யாழ்.அரச அதிபரின் பதிலுக்காகக் காத்திருப்பு*

யாழ்ப்பாணம்,ஜன.12

யாழ்.மாவட்ட மக்களின் நலன் கருதி பாரவூர்திச் சங்கம், வியாபார நோக்கமற்ற மணல் சேவையை செய்வதற்கு யாழ்.மாவட்ட பிரதேச ரீதியாக கூலிகளை நிர்ணயித்து எழுத்து மூலம் அரச அதிபரிடம் வழங்கியுள்ளோம். அவருடைய பதிலுக்காக காத்திருக்கிறோம்.

இவ்வாறு யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2013 ஒக்ரோபர் 21 ஆம் திகதி காலப்பகுதி வரை 1,133 அங்கத்தவர்களின் லொறிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் ஐநூறுக்கு மேற்பட்ட லொறிகள் கடந்த இரு வருடங்களாக மணல் ஏற்றும் பணிகள் இன்மை மற்றும் வேலைகள் இன்மையால் இரும்பு விலைக்கு விற்கப்பட்டுள்ளன. மேலும் பல பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றன. அதே சமயம் ஒரு தொகுதி லொறிகள் உரிய தவணைப் பணம் செலுத்தாமையால் லீசிங் நிறுவனங்களினால் மீளப் பெறப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு நிலைமையில் யாழ். அரச அதிபருடன் கடந்த வாரம் எமது தொழில் அற்ற நிலைமை சம்பந்தமாக கலந்துரையாடியுள்ளோம். அவருடைய பதிலுக்காக சங்கம் காத்திருக்கிறது - என்றுள்ளது.

இதேவேளை, கடந்த 8 ஆம் திகதி உதயனில் வெளியான செய்தியில் யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின்தலைவர் ஆர்.ரவிக்குமார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அவர் சங்கத்தின் பொது முகாமையாளரே. ரவிக்குமார் கடந்த 7 ஆம் திகதி முதல் அந்தப் பதவியிலிருந்து தானாக விலகிச் சென்றுள்ளார் - இவ்வாறு சங்கத்தின் தலைவரான செ.ஜெயக்குமார் அறிவித்துள்ளார். (ஓ)

## பரிசளிப்பு விழா

கோவிற்கடவை சன சமூக நிலையத்தின் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு கோவிற்கடவை சித்தி விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கோவிற்கடவை சன சமூக நிலையத் தலைவர் அ.பௌநந்தி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.தர்மராஜா, கௌரவ விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபர்செல்வன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலை வைத்திய உத்தியோகத்தர் Dr.திருமதி மனோரஞ்சிதமலர் கணேசலிங்கம் அவர்களின் பாசமிகு மாமனார்

**கணபதிப்பிள்ளை சிவகுரு**

கடந்த 09.01.2014 சிவபதமடைந்தார். அவர்களின் மறைவால் துயர் அடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பொறுப்பு வைத்திய அதிகாரி,
வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள்,
கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலை, கரவெட்டி.

(43050)
(12.3.6)

நீங்காத நினைவுகளுடன்

## ஐந்து வருட நிறைவில்....

செல்வி

## சாளினி தேவராஜா



(யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் - வர்த்தக பிரிவு 2008)

எமது இதயம் நிறைந்த நாள்
09.10.1989

எம் உதிரம் உறைந்தநாள்
12.01.2009

ஆண்டுகள் ஐந்து கடந்து போனபோதும்
ஆறவில்லையம்மா - உன் பிரிவின் துயர்கள்
நாடுகள் கடந்து நாம் சென்றபோதும்
மாறவில்லையம்மா... உன் துன்பச் சுமைகள்
அழியாத உன் நினைவுகள் தந்து
தினம் தினம் ஆறாத் துயர் கொண்டு
உண்மைகளை உனக்குள் உறங்க வைத்து
நிஜங்களை இன்னும் தேடுகின்றோமம்மா
மாறாத துன்பம்தனை உள்ளத்தில் உரமாக்கி
ஆறாத கண்ணீரைத் தினம்
காணிக்கையாய்த் தருகின்றோமம்மா
உன் பிரிவால் சுமந்த வேதனைகள் தீராதம்மா....
எம் உயிர் பிரியும் நாள்வரை....

– என்றும் சுமைகளுடன்
**அப்பா, அம்மா, தம்பி.**
**(லண்டன்).**
இல.67, மத்தியூஸ் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(28157)(2-6-3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**பொன்னையா மகேஸ்வரன்**

(ஓய்வுபெற்ற பிரதம இலிகிதர் இ.போ.ச - வவுனியா)



மலர்வு
11.05.1944

உதிர்வு
24.12.2012

எமது குடும்பத்தின் ஒளிவிளக்கே எமைப் பிரிந்து
எங்கு சென்றீர் ஆண்டொன்று ஆனாலும்
ஆறாது எம்துயரம் ஈசுவும் ஜேந்தியும்
என்றழைக்கும் உமதழைப்பு இனி எப்போது
எம்வீட்டில் கேட்கும் ஆசிரிய சேவையில்
ஜனாதிபதி விருது பெற்றிட
அனைத்து வழியும் கற்றுத் தந்தீர்
அந்த மகிழ்ச்சியை பகிர்ந்திடாது பிரிந்து விட்டீர்
அதனால் மகிழ்வை உணராது
நாமும் மறந்துவிட்டோம் – இனி என்று
வருவீரோ? ஏக்கமுடன் பார்க்கின்றோம்
தினம் தினம்.....

*நீங்கா நினைவுகளுடன்*
சகோதரிகள்,
குடும்பத்தினர்.

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

(33072)(7.6.3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**சின்னையா ஈஸ்வரநாதன்**



மண் மகிழ
18.04.1952

கண் நெகிழ
25.12.2012

கோல நிலவாய் என் வாழ்வில் ஒளியளித்தீர்
அன்புருவாய் உடனிருந்து குறைதீர்த்து வாழவைத்தீர்
காலக் கொடுமையினால் நினைவாகிப் போய் – இன்று
இவ்வுலகு தனை நீங்கி எங்குற்றீர்
ஆண்டொன்று ஆனதையா!
தேடிக் கதறுகின்றேன் உங்கள் திருவதனம்
சாலத் துதித்துங்கள் சாயா நினைவேந்தி
அரனடியில் அமைதிபெற அஞ்சலித்தேன்.

மாதா கோயிலடி,
துன்னாலை வடக்கு, கரவெட்டி.

**மனைவி.**

(சி/10767)(7.6.3)

## நெஞ்சைவிட்டகலாத முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**சின்னட்டி செல்லையா**



திதி : வளர்பிறை துவாதசி
(12.01.2014)

தோற்றம்
17.05.1934

மறைவு
23.01.2013

ஓராண்டு கடந்தாலும் உங்கள் ஆடம்பரமில்லாத
அன்பான பேச்சும் செயல்களும்
இன்னமும் எங்கள் எல்லோரினதும் மனங்களிலும்
அகலாது நிற்கின்றதே ஐயா!
நீங்கள் இல்லாத எங்கள் இல்லங்கள்
வெறிச்சோடிக் கிடக்கின்றது எங்கள்
எண்ணங்கள் எதுவும் இயங்காது நின்றுவிட்டது ஐயா!
சொந்த பந்தங்களின் உணர்வுகள் உறைந்துவிட்டது
உற்றார் உறவினர்கள் உங்களைத் தேடுகிறார்கள்
சகோதரர்களின் இதயங்கள் இயங்கவில்லை ஐயா!
உங்களது நெறிமுறை தவறாத வாழ்வின் பயனாக
நிச்சயம் உங்களது ஆத்மா இறைவனிடம் சங்கமிக்கும்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கலைநகர்,
அளவெட்டி தெற்கு.

**குடும்பத்தினர்.**

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு
16 . 05 . 1961

இறப்பு
11 . 12 . 2013



## திருமதி ஜமுனா (வவா) குணநாயகம்

கோண்டாவில் வடக்கு வாஹீஸ்வரியைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜமுனா (வவா) குணநாயகம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்று (12.01.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அமரர் அமரத்துவம் அடைந்த நேரம் சகல வழிகளிலும் உறுதுணை புரிந்து அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாகைகள் வெளியிட்டோருக்கும் மற்றும் தேவையான உதவிகளைச் சேவையாக வழங்கியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

பலாலி வீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.
(கோண்டாவில் பஸ் டிப்போவிலிருந்து 300 மீற்றர் தொலைவில்)

**சீ.குணநாயகம்**
**(குணசிங்கம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் மருத்துவமுகாம் நெல்லியடியில்

நெல்லியடி, ஜன.12

வடமராட்சி லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிறு காலை 9.30 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நெல்லியடி முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக கழகத்தின் செயலாளர் லயன் சி.முரளீதரன் அறிவித்துள்ளார்.

மருத்துவமுகாமில் நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுக்கப் பரிசோதனை, பொது மருத்துவ சிகிச்சை, கண் பரிசோதனை, பல் மருத்துவம், சரும வைத்தியம் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன. மருத்துவ சேவையில் பங்குபற்றி பயன் பெற விரும்புவோர் இன்று ஞாயிறு காலை 8.30 மணிக்கு மண்டப அலுவலகத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-35)

## மாடி வீடு வாடகைக்கு

நகர மத்தியிலிருந்து ஒரு கி.மீற்றர் தூரத்தில் சகல வசதிகளையும் கொண்ட, 10 அறைகள் கொண்ட, வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் மட்டும்.

(42290) (12.8.6.) தொடர்பு: 077 781 3646

## வாடகைக்கு உண்டு

யாழ் நகரில் பிரபல பாடசாலைகளுக்கு அருகில் K.K.S. Road, தட்டாதெரு சந்தியில் அமைந்துள்ள 4R மாடி வீடு இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 077 310 9585 (49062) (7.8.3)

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் வடக்கு வீதி ஒழுங்கையில் பாடசாலை தாண்டி இடது கைப்பக்கம் வரும் முதல் ஒழுங்கையில் 4¼ பரப்பு காணி விற்பனைக்குண்டு. தரகர் தவிர்க்கவும். தொடர்பு : 077 759 9015

(சி/10610)(7.8.3)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

VK-xxxx இலக்கமுடைய CB 125 Dulux (Imation Control, Bens Mark, on Light, 2009 Model விற்பனைக்குண்டு. (42236) (4.8.3)

தொடர்பு: 077 254 1964

## விற்பனைக்கு

பாவனைக்கு உகந்த நிலையிலுள்ள (பதிவு செய்யப்படாத) 1991/ 2005/ 2007 Jcb 3CX இயந்திரம் விற்பனைக்கு உண்டு.

(C/11120) தொடர்புகளுக்கு:

077 1440216









## AIDE ET ACTION

### தொழில்கல்வி நிலையங்களுக்கு போதனா ஆசிரியர்கள் தேவை

AIDE ET ACTION இன் வாழ்வாதார தொழில் கல்வி நிகழ்ச்சியான Initiative for livelihood Education and Development ( iLEAD ) வவுனியா,முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மொத்தமாக 6 நிலையங்களில் கீழ் வரும் வேலைவாய்ப்புக்கள் உள்ளன.

- Computer Application Assistant
- Electrician
- English Language
- Motorcycle Mechanic
- Computer Hardware Technician
- Beautician

max adz

அனுபவமுள்ள போதனா ஆசிரியர்கள் தங்கள் தொடர்பு இலக்கத்துடன் கூடிய சுயவிபரக்கோவையை கீழ் வரும் முகவரிக்கு 20.01.2014 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும் ( மின்னஞ்சலும் செய்யலாம்)

**THE ADMINISTRATIVE OFFICER**
23-1/1,Gregorys Road,Dehiwala.
E-Mail : ilead.colombo@gmail.com
( நேர்முகப் பரீட்சை வவுனியாவில் நடைபெறும் )

## கேரள ஆயுர்வேத மருத்துவம்

**நமது சிகிச்சைகள்**

- இருதயவலி
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பிரச்சினைகள்
- மூட்டுவலி
- இடுப்புவலி
- புரோட்ஸ்ரேட் பிரச்சினைகள்
- ஒற்றைத்தலைவலி
- மனஅழுத்தம்
- இருமல்
- சளி
- படுக்கைப்புண்
- நச்சு வைரஸ் பாதிப்பு
- பாலியல்குறைபாடு

Tel: 011 438 8101
011 438 8100
011 438 8102
011 438 8200

**சில பிரச்சினைகளைத் தீர்த்திட சிறிய வழிமுறைகள்**

### கல்லீரல் மருத்துவம்

அதிக மதுபாவனை உடல் நலத்தை கெடுக்கும்

**உங்கள் கல்லீரலை பரிசோதனை செய்தீர்களா?**

நோய்க்கான அறிகுறிகளில் அவதானமாக இருங்கள்.
-கருமைப் படர்வு.
-கால்களில் வீக்கம்.



**Free consultation**
Daily@ Ceylinco House.
monthly clinics are conducted islandwide.

தயவுசெய்து மருத்துவருடன் கலந்தாலோசியுங்கள்

**Hotline : 0777 708 310 / 0777 555 600**
**0777 708 330 / 0777 708 434**

*JAFFNA TRADE FAIR 17,18,19*
*துரையப்பா விளையாட்டரங்கு*
*ஸ்டோல் B.1*
*சீனி, இரத்த அழுத்தம்*
*இலவச பரிசோதனை.*

FAIR PHARMA (PVT) LTD
Kerala Ayurvedic Medicine

11th Floor. Westwing.
69. Janadipathi Mawatha
Colombo1.
E.mail:fairpharmasrilanka@yahoo.com
Website:www.ayurveda.lk.

Approved by Department of Ayurveda, BOI, an ISO : 2008 QMS Certified Company

## விற்பனைக்கு

8 மாதம் பூர்த்தியான மினிபொமேரியன் ஆண், பெண் நாயும்,45 நாள் பூர்த்தியான பொமேரியன் குட்டிகளும், மணிதாரா, வெள்ளாடியன் வன்றும் J.C இன் 1 வருட பசு கன்றும் விற்பனைக்கு.
தொடர்புக்கு:லி.மயூரன்
ஆயக்கடவை பிள்ளையார் கோயில் முன்பாக புன்னாலைக்கட்டுவன் தெற்கு, (42234) (4.8.3)
பூசுராயர் கோயிலடி (டயலொக் ரவர் அருகில்)

## காணி விற்பனை

கெருடாவில் இ.த.க பாடசாலையை அண்மித்த பகுதியில் நன்னீர் வற்றாத வெட்டுக் கிணற்றுடன் கூடிய 20 பரப்பு தோட்டக் காணி (அரிசி ஆலை அமைப்பதற்கு உகந்தது) உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 866 0405 (43061) (7.8.3)

## வீடு வாடகைக்கு

பொற்பதி வீதி கோண்டாவில் கிழக்கில் பெரிய Hall ஐந்து அறைகள் சமையல் அறை இணைந்த குளியல் அறை 2 பிரத்தியேக குளியல் அறையுடன் வீடு வாடகைக்கு உண்டு அரச, அரசசார்பற்ற, தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு
0779 007 481

## வைத்தியம்

சுவாமி ஆயுர்வேத ஆஸ்பத்திரி Home & Hotel Visit வசதி சம்பந்தமான, ஆண்களுக்கான பிரச்சனை மற்றும் அனைத்து நோய்களுக்கும் ஒய்ல் மசாஜ் இந்தியா சிகிச்சை ஸ்பா ஆயுர்வேத மசாஜ் & ஸ்டீம் பாத் அர்சல் வியாதிகளுக்கும் @ வெள்ளவத்தை வெவனியா.

பிரியா
0728 138 773
0777 204 921

## வீடு விற்பனைக்கு

ஆலங்கட்டை வீதி, வதிரியில் வீட்டுக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு
0772 270 605

## வாடகை

Attached bathroom உடன் கூடிய அறைகள் வாடகைக்கு உண்டு. (ஒரு நாள் 500/=)
Hotel Villa City,
422 Galle Rd. Colo 6
இராமகிருஷ்ண வீதிக்கு அருகில்

0722 552 222

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், உரும்பிராய் வடக்கு உட்பகுதியில் 31 பரப்புக் காணி 5 அறை வீடு , 2 கிணறுகளுடன் விற்பனைக்கு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு : 075 837 7870 (சி/10613) (7.8.3)

## வான் விற்பனைக்கு

டவுனேசி KR - 42 வான், PA - xxxx விற்பனைக்கு

(42296)(46.8.3) தொடர்பு: 077 418 8484

## வாடகைக்கு

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில் 5 Room, 2 Bath Room கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு : 072 562 1879 (சி/10612) (7.8.3)

## அறைகள் வாடகைக்கு

ஒரு நாளைக்கு 500/=
இணைந்த குளியலறையுடன்
Hotel Villa City,
422, Galle Road, Col-6.
தொடர்பு : 072 255 2222 (சி/10616) (7.8.3)

*நல்லதொரு குடும்ப இலக்கை நோக்கிய ஓர் உன்னத பயணம்*

## குடும்பத்தில் உள்ள அனைவரும் அவசியம் வாசிக்க வேண்டிய ஓர் அற்புத சஞ்சிகை

பாலகனுக்கு பல தரமான பயிற்சிகள் (7 - பக்கங்கள்)

அரசியல், பாலியல், சினிமா கலக்காத குறுகிய காலத்தில் பல்லாயிரக் கணக்கான வாசகர்களின் மனதை கவர்ந்த ஒரு பரிணாமப் படைப்பு





**ஜனவரி மாத சஞ்சிகையின் உள்ளடக்கங்கள்**

5 வகை திறன் போட்டிகள்

சமய, அறிவு விருத்திக்கான 130,000/= பரிசுப் போட்டி

- நையாண்டி நிஜமானது
- வாழ்க மணமக்கள்
- வாழ்வில் வெற்றி பெற
- மாத திட்ட அட்டவணை
- 2014 கலண்டர்
- சமூக நலனில் பெண்
- ரொமான்ஸ் இரகசியங்கள்
- வன்முறையால் 60% பெண்கள் பாதிப்பு
- நீங்கள் அறியாத புதுமைப் பெண்
- பரதமும் ஒரு தெய்வம் சார்ந்த கலையே
- 2023 Years - Here & Now
- மாதர் சாதனைகள்

- குழந்தை வளர்ப்பில் தந்தையின் கடப்பாடுகள்
- பெண்களின் வளர் இளம் பராயத்தில் உடலிலும் மனோ நிலையிலும் ஏற்படும் மாற்றங்கள்
- வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு வீட்டில் உள்ள பொறுப்புகள்
- Wife is a knife என்று கூறலாமா?
- பெண்கள் மீதான வன்முறையின் ஆரம்பம் எது?
- அவசர புத்தி
- மகப்பேற்றைப் பாதிக்கும் அதிக கோப்பி பாவனை
- திருமலைக்குப் பெருமை
- மலையக பெண்களின் வாழ்வு
- மனைவி செய்த தவறாலும் நன்மை கிட்டலாம்
- ஆணுக்கு எதிரானதல்ல பெண்ணியம்
- பெண்கள் விரும்பும் அடர்ந்த நீண்ட கூந்தல்
- எல்லா தான தர்மங்களிலும் சிறந்த தானம்
- சரித்திரத்தில் இடம் பிடித்த சங்கா
- Emergency Service Contacts - Colombo
- சரியான நேரத்துக்கு வந்த ரயில்
- [illegible]

*நட்சத்திர இல்லத்தரசி *சிரிப்பு ஒரு மருந்து *சமையல் குறிப்புகள் *சமய அனுஷ்டானங்கள் *தொழுகை நேரங்கள் *ஜனவரி மாத இராசி பலன் *காதலி தேடிக்கொடுத்த மனைவி *சிறுவர் விருந்து (C/10517)

இல்லத்தரசிகளுக்கான இன்னும் பல சுவாரஸ்யமான அம்சங்களுடன் வெளிவந்துள்ளது. உங்கள் பிரதிகளை அருகிலுள்ள பத்திரிகை முகவர்களிடமும் புத்தக சாலைகளிலும் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக தொடர்புகளுக்கு : 071 4273035 / 071 6182182

## STUDY MBBS INDIA

2014 ஆண்டிற்கான நுழைவுகள் ஆங்கில மொழியில்



**RECOGNIZED BY:** SLMC, Europian Medical Association, Medical Council of India, GMC-UK, ECFMG-USA & WHO

**இந்தியா - JJM Medical College**
Affiliated to Rajive Ghandhi University

**சீனா - Dalian Medical University**

**ஐரோப்பா - Georgia** (C/11197)
Tbilisi State Medical University

கட்டணம் [illegible]4500 ஒரு வருடத்திற்கு

**பெங்களூர் பல்கலைக்கழகம்**

**Programs After A/L's**

- **B.Sc.** - Biotech/Micro/Genetics
- **Business Management**
- **B.Sc. - IT** ■ **B.Com**
- **Bachelor of Engineering**
- **B.A.** - Journalism/English/Psychology
- **B.Sc.** - Fashion & Apparel Design
- **B.Sc.** - Medical Lab Technology
- **B.P.T.** - Physiotherapy
- **BE** - Bachelor of Engineering
- **Pre-Medicine Course** available for students without A/L

**ICAM கல்வி நிறுவனம்**
17 A, Kassapa Road, Colombo 05
0773-039666 / 011-2593933 / 0773-022177 | www.icam.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரு பிள்ளை

டுள்ளார்.

இந்தக் கோரச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை வடமேற்கு பிரிட்டனின் ஹரோப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் லண்டன் வாழ்தமிழர்களிடையேபெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

திருமதி வாகீஸ்வரன் ஜெயவாணி(வயது-33) அவரது 5 வயது மகனான அனோபன் மற்றும் 7 மாதங்களேயான றதீபன் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

வாகி கணக்காய்வு நிறுவனத்தை நடத்தி வரும் சக்திவேல் வாகீஸ்வரன்(வயது 36) என்பவரது மனைவியே, தனது பிள்ளைகளைக் கொலை செய்து விட்டு தானும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இவர்கள் கடந்த பத்து வருடங்களாக லண்டனில் வசித்து வந்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

'வீட்டுக்கு வந்த போது அனோபன், ரதீபன் ஆகிய பிள்ளைகளின் உடல்கள் கழிவுகள் கொட்டப்படும் கறுப்பு நிறப் பைக்குள் போடப்பட்டபடி இருந்தன. அவ்வேளை மனைவியும் வீட்டில் சடலமாக இருப்பதைக் கண்டேன் என்று உயிரிழந்தவர்களின் குடும்பத் தலைவரான வாகீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தச் சம்பவம் தன்னைப் பாதித்துள்ளதாகவும் இப்போதைக்கு அந்த வீட்டுக்குத் திரும்பப் போவதில்லை என்றும் அவர் அழுகையுடன் கூறினார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அயலவரான கௌதமி மகாதேவா தெரிவிக்கையில், சம்பவம் நடந்த காலையில் கணவருக்கான மதிய உணவைத் தயாரித்து அவரை வழியனுப்பி வைத்திருக்கின்றார் மனைவி ஜெயவாணி. கணவன் வீடு திரும்பிய போது இவ்வாறானதொரு துயரமான நிலை ஏற்பட்டுள்ளது.

பொறுப்புள்ள பெண்மணியான அவர் இவ்வாறு செய்தது நம்பமுடியாமல் இருக்கின்றது. கடந்த புதன்கிழமை எனக்கும் எனது நண்பிகள் சிலருக்கும் உயிரிழந்த பெண்மணியிடமிருந்து தவறிய அழைப்புக்கள் (மிஸ்ட் கோல்கள்) கிடைக்கப் பெற்றிருந்தன. மறுநாள் வியாழக் கிழமை நாங்கள் மீளவும் தொடர்பை எடுத்தபோது அவர் பதிலளிக்கவில்லை. அப்போது எல்லாம் முடிந்திருக்க வேண்டும் என்று நினைக்கின்றேன். அவர் கடைசி அழைப்பாக எங்களுக்கு எடுத்திருக்கக் கூடும் என்றார்.

பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் யாரிடமும் விசாரணை மேற்கொள்ளவில்லை. குறித்த பெண்மணி மன அழுத்தத்திலிருந்தாரா என்ற கோணத்தில் விசாரணை முன்னெடுத்துள்ளதாகவும், உயிரிழந்த பெண்மணியின் உடற்கூற்றுப் பரிசோதனையில், கழுத்து நெரிக்கப்பட்டதால் உயிரிழப்பு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரது பிள்ளைகளின் உடற்கூற்றுப் பரிசோதனை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளதாக ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இன்னொரு அயலவரான ரஷ்மா பிறவுண் தெரிவிக்கையில், அவர்களின் இரண்டாவது பையன் பிறந்த பின்னர் கஷ்டம் ஏற்பட்டிருக்க வேண்டும். மாதத்தில் மூன்று அல்லது நான்கு தடவைகள் பயங்கரச் சத்தமாக சண்டை பிடிப்பார்கள். இதன் போது கணவரே விட்டுக் கொடுத்துச் செல்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெறுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் 7 மாதக் குழந்தை அழுததாகவும் அப்போது தாயார் பெரும் சத்தமாகக் குழப்பத்துடன் இருந்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் துயரச் சம்பவம் லண்டன் வாழ் தமிழ் மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (த-5)

### வீடுகள்

பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தினால் அந்தப் பகுதியில் பெரும் அச்ச நிலை தோன்றியுள்ளதுடன், இரவு முழுவதும் பதற்றமான சூழலே நிலவியது.

**பின்னணி**

குறித்த பகுதியிலுள்ள கேணியடியின் பின்பாக இராணுவ முகாம் அமைந்துள்ளது. குறித்த முகாமைச் சுற்றிலும் பொது மக்களின் வீடுகள் காணப்படுகின்றன. முகாமிலுள்ள இராணுவச் சிப்பாய்கள் அயலிலுள்ள வீடுகளில் பெண்கள் குளிக்கும் பொழுது எட்டிப் பார்ப்பது உள்ளிட்ட சில்மிஷ நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர் என்று அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

கடந்த டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி பெண் ஒருவர் குளிப்பதை இராணுவ சிப்பாய் ஒருவர் எட்டிப் பார்த்ததைத் தொடர்ந்து அங்கு திரண்ட மக்கள், சிப்பாயைப் பிடித்து முறையாகக் கவனித்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு வந்த இராணுவ முகாம் பொறுப்பதிகாரி, நடந்த சம்பவத்துக்கு மன்னிப்புக் கோரியதுடன், குறித்த முகாமிலிருந்து இராணுவச் சிப்பாய்களை உடனடியாக இடமாற்றம் செய்திருந்தார். அத்துடன் குறித்த இராணுவ முகாம் விரைவில் அகற்றப்படும் எனவும் உறுதியளித்திருந்தார்.

**மீண்டும் திருகுதாளம்**

இதன் பின்னர் புதிதாக வந்த இராணுவத்தினரும் அங்குள்ள வீடுகளை எட்டிப் பார்ப்பது,முகாமுக்கு முன்பாகப் பெண்கள் தனித்திருக்கும் வீட்டுக்கு இரவில் சென்று ரோச்லைட் அடித்துப் பார்ப்பது என்று தொடர்ச்சியாகத் தங்களுக்கு தொந்தரவு கொடுத்து வந்ததாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இவ்வாறானதொரு நிலையில் நேற்று இரவு 7.30 மணியளவில் முகாமைச் சுற்றி அமைந்துள்ள இரண்டு வீடுகளுக்கு இராணுவத்தினர் கல்லெறிந்ததாகவும் அதனையடுத்து அந்தப் பகுதியில் மக்கள் குழுமியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

**மிரட்டிய இராணுவம்**

மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில் அங்கு வாகனத்தில் ரோந்து சென்ற பொலிஸார் வந்தனர். உங்களைக் கொல்லுவோம் என்று பொலிஸாருக்கு முன்பாகவே படையினர் தம்மை மிரட்டியதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கடுமையான வார்த்தைப் பிரயோகங்களைப் பாவித்து அவர்கள் மிரட்டியதாகவும், ஒரு கட்டத்தில் நாங்கள் முகாமை விட்டு விட்டு வெளியேறுகின்றோம். முகாமுக்கு ஏதாவது நடந்தால் நீங்கள் அனைவரும்தான் பொறுப்பு என்று சொல்லிவிட்டு மோட்டார் சைக்கிளில் இராணுவத்தினர் ஓடித் தப்பியுள்ளனர் என்றும் மக்கள் கூறினர்.

**நழுவிய பொலிஸ்**

இராணுவத்தினர் வேண்டுமென்றே தமது முகாமைத் தாமே ஏதாவது செய்து விட்டு எங்களை எதுவும் செய்யக் கூடும். எனவே பொலிஸார் பாதுகாப்புக்கு வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர். அதனை உதாசீனம் செய்த பொலிஸார், தாம் தொடர்ச்சியாக ரோந்து வருவோம் என்றும் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு பதிவு செய்யுமாறும் கூறி விட்டுச் சென்று விட்டனர்.

இதனையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்யச் சென்றபோதும், பொலிஸார் முறைப்பாட்டை ஏற்க மறுத்துள்ளனர் எனவும் அத்துடன் முறைப்பாடு பதிவு செய்ய மறுத்தமைக்கு எந்தக் காரணமும் தெரிவிக்கப்படவில்லை எனவும் அப்பகுதி மக்கள் மேலும் கூறினர்.

**மீளத்திரும்பிய இராணுவம்**

வெளியேறிச் சென்ற இராணுவத்தினர் இரண்டு மணித்தியாலங்களில் மீளவும் முகாமுக்கு வந்துள்ளனர். அங்கு நின்ற மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி ஆகியவற்றின் இலக்கங்களைப் பதிவு செய்துள்ளனர். அதன் பின்னர் முகாம் வாசலிலேயே அவர்கள் இருந்தனர்.

இராணுவத்தினர் மீளத் திரும்பி வந்ததைத் தொடர்ந்து அந்தப் பகுதி மக்கள் கலைந்து சென்றுள்ளனர். இருப்பினும் தமக்கு ஏதாவது நடக்குமா என்ற அச்சத்துடன் இரவுப் பொழுதைக் கழிக்க வேண்டியுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

(த-5-21)

### அமெ.

ஆத்திரமடைந்த இலங்கை அரச அதிகாரிகள், கொழும்பு 'தி ஐலண்ட்' பத்திரிகைக்கு ஆவணம் ஒன்றை வெளியிட்டுள்ளனர். போரின்போது விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்துமாறு அமெரிக்காவின் பசுபிக் பிரிவு பரிந்துரை செய்திருக்கும் தகவல் அடங்கிய ஆவணத்தையே அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

"இதற்கிடையே, போரில் உயிர் தப்பியவர்களிடம் இருந்து எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டமை மற்றும் பொதுமக்கள் கொல்லப்பட்டமை குறித்த விவரங்களை ஸ்ரீபன் ராப் கேட்டறிந்து கொண்டுள்ளார். எனவே நம்பகமான சுதந்திரமான விசாரணை ஒன்று அவசியம்" என்று அமெரிக்கத் தூதரகத்தின் பொது உறவுகள் துறைப் பணிப்பாளர் கிறிஸ் தோபர் ரீல் தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்காவின் போர்க் குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசு மறுத்துள்ளது. ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்துபவர்களுடன் இணைந்து இலங்கையில் நல்லிணக்க முயற்சிகளை அமெரிக்கா குழப்புகிறது என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியிருந்தார். ஸ்ரீபன் ராப்பிடம் இந்த விடயத்தைத் தாம் சுட்டிக்காட்டியிருந்தார் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸை நேற்றுமுன்தினம் ராப் சந்தித்தபோது அமெரிக்காவின் நிலைப்பாடு பற்றியும் அமெரிக்கத் தூதரகத்தின் வலைத்தளப் பதிவு குறித்தும் அரசின் கடுமையான எதிர்ப்பு அவரிடம் பதிவு செய்யப்பட்டது. இதேபோன்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகமவும் ஸ்ரீபன் ராப்பிடம் இந்த விடயம் தொடர்பில் அரசின் கடும் எதிர்ப்பைப் பதிவு செய்தார்.

இவை எல்லாவற்றுக்கும் பின்னரும் தமது முடிவில் மாற்றம் எதுவும் இல்லை என்று தெரிவித்திருக்கும் அமெரிக்கா, கொழும்புத் தூதரகத்தின் வலைத் தளத்தில் போர்க் குற்றத்தைத் தொடர்புபடுத்தி இடப்பட்ட ஒளிப்படம் மற்றும் கருத்துக்களை நீக்க முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது. (உ-5)

### நிர்வாக சேவை

ரமேஸ், வடக்கு மாகாண சபையினால் தனக்குக் கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாகவும், தமது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்பாடுமாறு வற்புறுத்துவதாகவும்,அத்துடன் வெளிநாடுகளிலிருந்து குறுந்தகவல்கள் மற்றும் தொலைபேசி அழைப்பினூடாகக் கொலை மிரட்டல் விடுக்கப்படுவதாகவும் தெரிவித்து இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கத்துக்கு முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து உடனடியாக நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம், கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தியதுடன் பிரதம செயலாளருக்குக் காட்டப்படும் பாகுபாடு தொடர்பில் ஜனாதிபதி மற்றும் வடக்கு ஆளுநர் தலையிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தது.

இதே சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள், வடக்கு மகாண ஆளுநரினால் கடந்த காலங்களில் முறையற்ற இடமாற்றங்களுக்கு உள்ளாகியபோது சங்கத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். பல தடவைகள் முறைப்பாடு செய்தும் சங்கம் இதுவரை எதுவித பதிலும் அனுப்பவில்லை என்று பாதிக்கப்பட்ட ஊழியர்கள் உதயனிடம் தெரிவித்தனர்.

தமக்காக இன்றுவரை ஆளுநரை எதிர்த்துக் குரல் கொடுக்காத சங்கம், பிரதம செயலாளருக்காக மட்டும் அவசர அவசரமாகக் குரல் கொடுப்பது ஏன் என்றும் அவர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

சங்கம் பக்கச் சார்பாகச் செயற்படுவதாகவும், கீழ்நிலை நிர்வாக உத்தியோகத்தர்கள் பாதிக்கப்பட்டால் அதைக் கண்டு கொள்வதில்லை எனவும் அவர்கள் மேலும் குற்றம் சாட்டியுள்ளனர். (த-5)

### விசேட

ஆண்டுக்குள் திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் அமைச்சு, உலக வங்கியின் நிதியுதவியுடன் விசேட தேவையுடையவர்களுக்கான பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் 50 பேருக்குத் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் மாதாந்தம் விசேட தேவையுடையவர்களுக்கு வழங்கி வருகின்றது.

இதன் அடுத்த கட்டமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் விசேட தேவையுடையவர்களுக்கான தொழிற்பயிற்சி நிலையங்கள் நிறுவப்படவுள்ளன. அதனூடாக ஒவ்வொன்றும் 3 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் விசேட தேவையுடையவர்களுடன் சேர்ந்தியங்கும் நிறுவனங்களே தெரிவு செய்யப்பட்டு அவைகளூடாகவே இந்த தொழிற் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

முதலாவது தொழிற்பயிற்சி நிலையம் மன்னாரில் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது. சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமாரினால் இந்தப் பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் செயலகத்தின் விசேட தேவையுடையோர் திணைக்களப் பணிப்பாளர் ரவீந்திரா மற்றும் திட்டப் பிரதிப் பணிப்பாளர் வை.பரந்தாமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது தொடர்பில் செயலாளர் இமெல்டா சுகுமார் தெரிவிக்கையில், இந்தத் தொழிற் பயிற்சி நிலையத்தினூடாக விசேட தேவையுடையவர்களுக்குப் பயிற்சி வழங்கப்படும். அவர்கள் அந்தப் பயிற்சியை முடித்த பின்னர் சுயதொழில் வாய்ப்புக்கான உதவிகள் பெற்றுக் கொடுக்கப்படும். இதன் மூலம் அவர்கள் தமது சொந்த உழைப்பில் தம்மைப் பார்த்துக் கொள்ள முடியும்.

வடக்கு கிழக்கின் ஏனைய மாவட்டங்களில் இந்த ஆண்டுக்குள் தொழிற்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படும். இதனூடாக முதற்கட்டமாக ஆயிரம் பேர் வரை பயனடைவார்கள் என்றார்.

(த-5)

### காட்டமான

கொண்டுவரும் நடவடிக்கைகளில் அமெரிக்கா மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

இதற்காக இது தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் நோக்குடன், அமெரிக்காவின் போர்க் குற்ற நிபுணர் ஸ் ரீபன் ராப் இலங்கைக்கு வந்திருந்தார். இவர் தனது இலங்கைப் பயணத்தின் போது வடக்குக்கும் குறிப்பாக இறுதிப் போர் இடம்பெற்ற புதுமாத்தளன் பகுதிகளுக்கும் சென்றிருந்தார்.

இதன்போது இரணைப்பாலை சென். அன்ரனீஸ் மைதானத்தைப் பார்வையிட்ட அவர், அங்கு நூற்றுக்கணக்கான பொதுமக்கள் படையினரின் பீரங்கித் தாக்குதலில் கொல்லப்பட்டனர் என்று டுவிட்டரில் பதிவு ஒன்றையும் வெளியிட்டிருந்தார்.

**எதிர்ப்பு**

மேற்படி டுவிட்டர் கருத்து தொடர்பில் இலங்கை அரசு கடும் அதிருப்தி வெளியிட்டிருந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் ஸ் ரீபன் ராப்பைச் சந்தித்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் மற்றும் அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம ஆகிய இருவரும் நேரடியாகத் தமது எதிர்ப்பை ராப்பிடம் வெளிப்படுத்தினர்.

இது தொடர்பாக ஸ் ரீபன் ராப்பிடம் விளக்கம் கோரியதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளபோதும் ராப்பின் விளக்கம் என்ன என்பது தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

**அறிக்கை**

இலங்கைப் பயணம் தொடர்பில் ராப், ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் அறிக்கை சமர்ப்பிப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த அறிக்கை மிகக் காட்டமானதாக அமையும் என்றும் தெரியவருகிறது. (த-5)

### ஆவா குழுவை

தெரிவித்தனர்.

உடுவில் அம்பலவாணர் வீதியில் தேவாலயத்தை அண்மித்து நேற்று மதியம் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அந்த நேரம் வீட்டில் யாரும் இருந்திருக்கவில்லை. அதனால் சேதங்கள் தவிர்க்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

வீட்டில் இருந்தவர்கள் அயல் வீட்டுக்குச் சென்றுவிட்டுதிரும்பி வந்தபோதே திருட்டு இடம்பெற்றமை தெரியவந்துள்ளது.

வீட்டுக் கதவைப் பிரித்து உள்நுழைந்த அந்த ஆயுதக் கும்பல் ஏழரைப் பவுண் நகைகள், 5 ஆயிரம் ரூபா பணம்,கைத்தொலைபேசி,கைப்பை என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளது.

மின்மோட்டர் மற்றும் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் என்பவற்றையும் அவர்கள் எடுத்துச் சென்றபோதும் அதனைத் தொடர்ந்து கொண்டு செல்ல முடியாத நிலையில் வீட்டின் வேலியோரமாகப் போட்டுவிட்டுச் தப்பிச்சென்றுள்ளனர்.

அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அங்கு சென்ற அவர்கள், விசாரணை மேற்கொண்டதோடு ஆயுததாரிகள் விட்டுச் சென்ற கத்தியையும் மீட்டனர்.

எவரையும் கைது செய்யவில்லை என்றும் விசாரணை தொடர்கிறது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(த-4)

### தமிழக

தினவிற்கும் தமிழக மீனவ சங்க பிரதிநிதி குழுவினருக்குமிடையிலான முக்கிய கலந்துரையாடல் 15 ஆம் திகதி டில்லியில் நடைபெறவுள்ளது.

இருநாட்டு மீனவ சமுதாயத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இதன் போது கலந்துரை யாடப்படவுள்ளது.

தமிழக மீனவ சம்மேளனத்தின் ஆலோசகரும் இலங்கை-இந்திய மீனவ சங்க அமைப்பின் தமிழக தலைவருமான என்.தேவதாஸ் தலைமையிலான தமிழக மீனவர்கள் குழுவினரே இதில் பங்கேற்கவுள்ளனர். இவ் அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளரும் மீன்பிடித்துறை அமைச்சின் ஆலோசனை சபை அங்கத்தவருமான எஸ்.பி. அந்தோனிமுத்து இதனை நேற்று உறுதிப்படுத்தினார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லியடி, உடுப்பிட்டி அணிகள் இறுதியாட்டத்தில் பலப் பரீட்சை

மாங்குளம், ஜன.12

வடமராட்சிக் கல்வி வலயத்துக்குட்பட்ட 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியும் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

இதன் அரை இறுதியாட்டம் நேற்று கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

முதல் அரை இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணி மோதியது.

ஆட்டத் தொடக்கத்திலிருந்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி வீரர்கள் பந்தைத் தம் வசப்படுத்தி வைத்திருந்தனர். அப்போது 8 ஆவது நிமிடத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி வீரர் சாருஜன் முதல் கோலைப் போட்டார். இதன் பின்னர் ஆட்டம் விறு விறுப்படைந்தது. இதனால் இரு அணிகளும் சமமாக மோதிக் கொண்டன.

இடைவேளைக்கு முன்னர் நெல்லியடி மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போது இரு அணிகளும் சமபலத்துடன் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதனை விளையாட்டில் நிரூபித்தனர். இதனால் இரு அணியின் பக்கமும் பந்து மாறி மாறிச் சென்றது. ஆட்டம் முடிவடைவதற்கு 3 நிமிடங்கள் இருக்கும் போது நெல்லியடி மத்திய கல்லூரி அணி வீரர் சிந்துஜன் ஒரு கோலைப் போட்டு தமது அணியை முன்னிலைப்படுத்தினார். அதன் பின்னரும் இறுதிவரை விக்னேஸ்வராக் கல்லூரி அணியினர் முயற்சிகள் பயனளிக்காமல் போக 2:0 என்ற கோல் கணக்கில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

அடுத்த அரையிறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி அணியை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரி அணி மோதியது. ஆட்டம் தொடங்கிய போது இரு அணிகளும் தமது ஆட்டத்தை மிகச் சிறப்பாக வெளிப்படுத்தின. அப்போது 13 ஆவது நிமிடத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி வீரர் ரமிலன் கோலைப் போட்டார். இதனால் முற்பாதியாட்டத்தில் 1:0 என்ற கோல் கணக்கில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய 2 ஆவது நிமிடத்தில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணி வீரர் ஒரு கோலைப் போட்டு சமப்படுத்தினார். இதனால் இரு அணிகளின் ஆட்டத்திலும் அனல் பறந்தது. இதனால் இரு அணிகளின் கோல் போடும் வாய்ப்புக்கள் இழக்கப்பட வெற்றி தோல்வி, சமநிலை தவிர்ப்பு உதையின் மூலம் தீர்மானிக்கப்பட்டது. இதில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-422-23)

## கடற்கரை கரப்பந்தாட்டம் இறுதிப் போட்டிகள் இன்று

வலி. வடக்கு, ஜன. 12

யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே முதல் தடவையாக நடத்தப்படும் ஆண்களுக்கான கடற்கரைக் கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு காரைநகர் கசூரினா கடற்கரையில் சங்கத் தலைவர் இ.மனோகரன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைநகர் பிரதேச சபைத் தலைவர் கே.ஆனைமுகன் கலந்துகொள்வார். (த-86)

## அண்ணா, றெட்றேஞ்சர்ஸ் அணிகள் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி

வலி. வடக்கு, ஜன. 12

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் திருநாளையொட்டி நடத்தும் ஏழு பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இடம்பெற்றன.

இந்தப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகத்துக்கும் அராலி கிழக்கு அண்ணா விளையாட்டுக்கழக 'பி' அணிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் அண்ணா விளையாட்டுக் கழக 'பி' அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது.

மற்றுமொரு காலிறுதிப் போட்டியில் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகமும் மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. இதில் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது. (த-23-86)



வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்படும் 2014 ஆம் ஆண்டுக்கான ஆண், பெண் இருபாலாருக்குமான வேக நடைப்போட்டி நேற்று சனிக்கிழமை வவுனியாவில் ஆரம்பமானது. போட்டியை வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலர் எஸ்.கமலதாசன் கொடி அசைத்து ஆரம்பித்து வைத்தார். (த-23)

## கரப்பந்து இறுதியாட்டத்துக்கு பிரதீப், நியூஸ்ரார் அணிகள்

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் திருநாளை முன்னிட்டு மின்னொளியில் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித்தொடரின் அரையிறுதி ஆட்டங்களில் ஆனைக்கோட்டை பிரதீப், சங்கானை நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.

நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

மூன்று செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் ஆனைக் கோட்டை பிரதீப் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில்வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் வழுக்கம்பரை அம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சங்கானை நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் சங்கானை நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதி யாட்டத்துக்குத் தகுதி பெற்றது. இறுதியாட்டம் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும். (த-23)

## பூநகரி லீக் நடத்தும் உதைபந்தாட்ட போட்டி

பூநகரி பிரதேச உதைபந்தாட்ட லீக்கின் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைந்தாட்டச் சுற்றுப் போட்டி தொடரின் ஆட்டங்கள் முழங்காவில் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றுவருகின்றது.

இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

காலை 9 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பள்ளிக்குடா ஜொலி போய்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இரணைமாதா நகர் சென். மோரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் முழங்காவில் விநாயகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென். மோரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

முற்பகல் 11 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் செட்டியார் தரவெளி இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கிராஞ்சி செந்தாமரை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மதியம் 12 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் இரணைமாதா நகர் சென். மோரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென். மோரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் ஒரு மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பள்ளிக்குடா ஜொலிபோய்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிராஞ்சி சென். தாரகை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## சண்டிலிப்பாய் இளைஞர் சம்மேளனத்தின் மென்பந்து கிரிக்கெட் ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், ஜன.12

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் தைப்பொங்கல் விழாவை முன்னிட்டு நடத்தும் மென்பந்து சுற்றுப் போட்டித் தொட ரின் ஆட்டங்கள் மானிப்பாய் செல்ல முத்து விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெறும் 'பி' பிரிவு அணிகளுக்கான ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

காலை 7.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உடுவில் உதய சூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சங்கானை பிரதேச செயலக அணி மோதவுள்ளது.

இதில் வெற்றி பெறும் அணி 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் காமாட்சி விளையாட்டுக் கழக 'பி' அணியுடன் மோதும்.

காலை 8 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் லெவின் ஸ்ரார் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து இணுவில் கலையொளி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இதில் வெற்றிபெறும் அணி மு.ப. 10 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் வராகி விளையாட்டுக் கழக அணியுடன் மோதும்.

காலை 8.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் தெல்லிப்பழை கலையொளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பிறிமீயர் லீக் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இதில் வெற்றி பெறும் அணி மு.ப.10.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி வெக்டர் விளையாட்டுக் கழக அணியுடன் மோதும்.

காலை 9 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஆறுகால் மடம் காந்திஜி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து முத்துத்தம்பி விளையாட்டுக் கழக 'பி' அணி மோதும்.

இதில் வெற்றி பெறும் அணி மு.ப. 11 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் கிங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியுடன் மோதும்.

மு.ப.11.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் குருநகர் றோயல் கிங்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இதில் வெற்றி பெறும் அணி பி.ப. 1.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழக அணியுடன் மோதும்.

நண்பகல் 12 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கொடிகாமம் சுப்பர் சிக்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இதில் வெற்றிபெறும் அணி பி.ப. 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியுடன் மோதும்.

நண்பகல் 12.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் யுத் சலஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இதில் வெற்றிபெறும் அணி பி.ப. 2.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஏ.பி.எல். விளையாட்டுக் கழக அணியுடன் மோதும்.

பிற்பகல் 1 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உடுவில் மத்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி றொக்கட் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இதில் வெற்றிபெறும் அணி பி.ப. 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணியுடன் மோதும். (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணச் சமர்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் மின்னொளியில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாடுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக ' ஏ' அணியை எதிர்த்து ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக்கழக 'பி' அணி மோதவுள்ளது. (த-23)

## அராலி மாவத்தை நடத்தும் சைக்கிள், மரதன் ஓட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.12

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் திருநாளை முன்னிட்டு நடத்தும் மரதன் , சைக்கிள் ஓட்டப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக் கிழமை கரைப்பிட்டி விநாயகர் ஆலய முன்றலில் இடம் பெறவுள்ளன. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலிங்கவை தக்க வைத்தது மும்பை இந்தியன்ஸ் அணி




இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் 7ஆவது பருவகாலம் இவ்வருடம் இடம்பெறவுள்ள நிலையில், அதற்கு முன்னதான ஏலத்திற்கு முன்னர் அணிகள் தங்களது முன்னாள் வீரர்களைத் தக்க வைத்து வருகின்றன.

இதன்படி மும்பை இந்தியன்ஸ் அணி றோகித் சர்மா, லசித் மலிங்க, கெரான் பொலார்ட், ஹர்பஜன் சிங், அம்பத்தி ராயுடு ஆகியோரைத் தக்க வைத்துள்ளது. கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி டேவிட் மில்லரையும், மனொன் வோக்றாவையும் தக்க வைத்துள்ளது.

ஒவ்வோர் அணியும் அதிகபட்சமாக தலா 5 வீரர்களைத் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்பதோடு, அந்த 5 வீரர்களும் ஏலத்தில் உள்ளடக்கப்படமாட்டார்கள். அத்தோடு தங்களது அணியில் விளையாடிய வீரர்களை ஏலத்தின் போது மீண்டும் வாங்குவதற்கும் அணிகளுக்கு வாய்ப்புக்களுள்ளன. ஒரு வீரரை வேறோர் அணி ஏலத்தில் பெற்ற பின்னர், அவ்வணி வாங்கிய அதே விலைக்கு அவரது பழைய அணி அவரை வாங்கிக் கொள்ள முடியும். 3 தொடக்கம் 5 வீரர்களைத் தக்க வைத்துக் கொள்ளும் அணிகளுக்கு இதற்கான ஒரு வாய்ப்பும், ஒன்று தொடக்கம் இரண்டு வரையிலான வீரர்களைத் தக்க வைப்பவர்களுக்கு இதற்கான இரண்டு வாய்ப்புக்களும், எந்தவொரு வீரரையும் தக்க வைக்காத அணிகளுக்கு இவ்வாறான 3 வாய்ப்புகளும் வழங்கப்படும்

இந்நிலையிலேயே மும்பை இந்தியன்ஸ் அணி 5 வீரர்களைத் தக்க வைத்துள்ளது. இதில், அண்மைய ஆஷஸ் தொடரின் நாயகன் மிட்சல் ஜோன்சனை அவ்வணி தக்கவைத்துக் கொள்ளவில்லை. அணித்தலைவர் றோகித் சர்மா, வேகப்பந்த வீச்சாளர் லசித் மலிங்க, சகலதுறை வீரர் கெரான் பொலார்ட், சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங், விக்கெட் காப்பாளர் அம்பத்தி ராயுடு ஆகியோரை அவ்வணி தக்க வைத்துள்ளது. கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி தென்னாபிரிக்க அதிரடி அவ்வணி துடுப்பாட்ட வீரர் டேவிட் மில்லரையும், பெரிதளவில் அறியப்படாத இளம் வீரர் மனொன் வோக்றாவையும் தக்க வைத்துள்ளது. (த)

# மெஸ்ஸி அதிரடியில் பார்சிலோனா வெற்றி




இரு மாதங்களுக்குப் பின் பார்சிலோனா அணியில் இணைந்த நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்ஸி இரு கோல்கள் அடித்து தனது அணிக்கு வெற்றி தேடித் தந்தார்.

காலில் ஏற்பட்ட காயம் காரணமாகக் கடந்த இரு மாதங்களாக மெஸ்ஸி ஓய்வில் இருந்தார். இது பார்சிலோனா அணிக்கு பெரும் பின்னடைவாக அமைந்தது.

இந்நிலையில் ஸ்பெயினில் நடைபெற்று வரும் ஸ்பானிஸ் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் கிடாபி அணிக்கு எதிரான ஆட்டத்தில் மெஸ்ஸி களமிறங்கினார்.

இந்த ஆட்டத்தில் 4-0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா அபார வெற்றி பெற்றது. மெஸ்ஸி இரு கோல்களை அடித்து அசத்தினார். (த)



# கொல்கத்தாவில் கம்பீர், நரைன், ஹைதராபாத்தில் ஸ்ரெய்ன்,

இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் 7ஆவது பருவகாலம் இவ்வருடம் இடம்பெறவுள்ள நிலையில், அதற்கு முன்னதான ஏலத்துக்கு முன்னர் அணிகள் தங்களது முன்னாள் வீரர்களைத் தக்க வைத்து வருகின்றன. இதன்படி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி கௌதம் கம்பீரையும், சுனில் நரைனையும் தக்க வைத்துள்ளதோடு, சண் றைசர்ஸ் ஹைதராபாத் அணி டேல் ஸ்ரெய்னையும், ஷிகர் தவானையும் தக்க வைத்துள்ளது.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தனது தலைவர் கௌதம் கம்பீரையும், நட்சத்திரச் சுழற்பந்து வீச்சாளர் ஷிகர் தவானை யும் தக்க வைத்துள்ளது.

சண் றைசர்ஸ் ஹைதராபாத் அணி தங்கள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஷிகர் தவானையும், நட்சத்திர வேகப்பந்து வீச்சாளரான டேல் ஸ்ரெய்னையும் தக்க வைத்துள்ளது. (த)

# பாகிஸ்தான் வீரர்களுக்கு அதிகளவான பாதுகாப்பு



ஆசியக் கிண்ணத் தொடரில் பங்கேற்க வரும் பாகிஸ்தான் அணிக்கு அதிக பாதுகாப்பு வழங்கப்படும் என பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஆசியக் கிண்ணத் தொடர் வருகிற பெப்ரவரி 24ஆம் திகதி முதல் மார்ச் 8ஆம் திகதி வரை பங்களாதேஷில் நடை பெற உள்ளது.

இங்கு அரசியல் ஸ்திரமற்ற சூழ்நிலை நிலவுவதால், பாகிஸ்தான் பங்கேற்காது என தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில் கடந்த 9ஆம் திகதி நடந்த ஐ.சி.சி கூட்டத்தில், பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை பங்கேற்றது.

இதில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபை கூறுகையில், இந்த கூட்டத்தில் பாதுகாப்பு பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டது.

போட்டிகளில் கலந்து கொள்ள வரும் பாகிஸ்தான் அணி வீரர்களுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதை ஏற்றுக் கொண்டோம் என தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே பங்களாதேஷில் நிலவும் பாதுகாப்பு பிரச்சினை குறித்து ஆய்வு செய்ய குழுவொன்றும் அனுப்பப்பட உள்ளது. (த)

ஆசியக் கிண்ணத் தொடர் வருகிற பெப்ரவரி 24ஆம் திகதி முதல் மார்ச் 8ஆம் திகதி வரை பங்களாதேஷில் நடைபெற உள்ளது.

# போட்டியில் டோனி, கோஹ்லி

2013ஆம் ஆண்டுக்கான சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதுக்கு இந்திய அணித்தலைவர் டோனி, விராட் கோஹ்லி மற்றும் ஷிகர் தவான் ஆகியோர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர்.

ஈ.எஸ்.பி.என். கிறிக் இன்போ சார்பில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் சிறந்து விளங்கும் துடுப்பாட்ட வீரர்கள் மற்றும் பந்துவீச்சாளர்களுக்கு ஆண்டுதோறும் விருது வழங்கப்பட்டு வருகிறது.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கான சிறந்த துடுப்பாட்ட வீரர் விருதுக்கு, இந்திய அணியின் அணித்தலைவர் டோனி, ஷிகர் தவான் மற்றும் விராட் கோஹ்லி ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

சிறந்த டெஸ்ட் பந்துவீச்சாளருக்கான விருதுக்கு அஸ்வினும், ஒருநாள் போட்டிகளுக்கான பந்துவீச்சாளருக்கான விருதுக்கு ரவீந்திர ஜடேஜா வும் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

விருதுக்கு தேர்வானவர்கள் விவரம் இந்த ஆண்டு இறுதியில் அறிவிக்கப்படும். (த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்குத் தேவையானதும் தரமானதுமான கொங்றீட்டுக்கு (Ready Mixed) நாட வேண்டிய இடம்

# SANKEN



மேலதிக விபரங்களுக்கு

**சங்கென் ரெடி மிக்ஸ் கொங்கிறீட்**

A9 வீதியில் நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்திற்கு அருகில் பெற்றுக்கொள்ளலாம்.

(C/10980)(2.6)

தொலைபேசி :

021-2224840/021-2241185/ 0718643636


## அனுமதிப் பத்திரங்கள்

வவுனியா பிரதேச செயலகத்தில் சில அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதற்கு வாரத்தில் புதன்கிழமையை ஒதுக்கியுள்ளதாக வவுனியா பிரதேசசெயலர் கா. உதயராசா தெரிவித்தார். விறகு, அரிவுமரம், மணல், வீட்டுப்பாவனைப் பொருள்கள், கால்நடைகள் ஆகியவற்றை ஏற்றிச் செல்வதற்கான அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்கும், வருமான வரிச் சான்றிதழ் பெறுவதற்கும் குறித்த தினத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க-402)


**GERMAN INSTITUTE**

GERMAN SWISS மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் GERMANY யிலிருந்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது.
GOETHE INSTITUTE EXAM இக்கு ஏற்றவாறு.
10, PALA LY ROAD JAFFNA ஆரியகுளத்தடி
T.P:- 077 160 4823, Mrs. KAJENTHINI

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**Aat (Srilanka)**
Foundation, Intermediate, Final
Qualification : G C E O/L 6 PASSES
Or GCE A/L 2 PASSES
MEDIUM - TAMIL & ENGLISH

**Certificate Course in English**
Week end classes

**Spoken Sinhala**
Week end classes

Further Details : **JAFFNA COLLEGE**
UNDERGRADUATE Dept,
464, Hospital Road, Jaffna.
021 222 3382

**UK Student visa** with work Permission

**Spot Admission 2014**

| | |
|---|---|
| TIME | 19th (Sunday) January 2014 : 09.00AM-02.00PM |
| CONDUCTOR | Director of Exponet Overseas Consultants |
| VENUE | Jaffna Branch (Exponet) |

14 YEARS 2001 2014 EXCELLENCE

**February / March இற்கான அனுமதிகள்**

நீங்கள் ஏன் Exponet இனை தெரிவுசெய்ய வேண்டும்

- கடந்த 14 வருட காலமாக ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களின் UK உயர் கல்வி கனவை நனவாக்கி வெற்றி நடை போடுகின்ற ஸ்தாபனம்
- எமது நிறுவனம் ஸ்தாபித்து மேற்பட்ட முன்னிலை வகிக்கின்ற கல்லூரிகள், பல்கலைக்கழகங்களிருந்து மிகத் தெளிவான ஆலோசனைகளையும், பகுதி நேர வேலை வாய்ப்புக்களுடன் கூடிய விசாக்களையும் பெற்றுக்கொடுக்கின்றது
- நீங்கள் தெரிவு செய்வது கல்லூரியாயின் 2-3 வருடகாலமும், பல்கலைக்கழகம் ஆயின் குறைந்தது 4 வருட விசாவினையும் பெற்றுக்கொள்ள முடியும்
- Student Visa அனுமதிக்காக இணைவோருக்கு இலவசமான IELTS, Spoken வகுப்புக்கள் ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது
- சகல ஆவணங்களும் மிகத் திருத்தமாக சமர்ப்பிக்கப்படின் இரு மாதகாலங்களில் உங்கள் UK பயணத்தினை உறுதிப்படுத்தி கொள்ள முடியும்
- Student Visa தொடர்பான வழிகாட்டலில் யாழ் மாணவர்களின் அதிஉயர் நம்பிக்கையை பெற்ற எமது நிறுவனத்துடன் இணைந்து உங்கள் எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ளுங்கள்

**Colleges**
- Yearly Payment £ 3500
- IELTS Overall : 4.5 or B1

**Universities**
- Yearly Payment £ 3950 - £ 6450
- IELTS overall band: Minimum 5.5 Each Band >5.0

EXPONET Overseas Consultants


வார நாட்களில் 9-5 மணிவரையும் வார இறுதியில் 9-2 வரையும் எமது யாழ்கிளையினூடாக முற்றிலும் இலவசமான UK Student Visa தொடர்பான ஆலோசனைகளை பெறலாம்

#379-1/2 Galle Road, Colombo 06 Hotline: 011 7 555511/ 14/ 18 E-Mail: nimal@expogroup.lk
#197, Arasady Road, Jaffna. 021 75383395 | 021 2227230 Web: www.expogroup.lk

**யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சி - 2014**

JITF 2014

வரும் ஜனவரி 17,18,19 ம் திகதிகளில்
துரையப்பா விளையாட்டரங்கில்
விசேட விலைக்கழிவுடன் வின்றிச்
அறிமுகப்படுத்தும் புதிய இயந்திரங்கள்




max adz

தமிழில் தொடர்பு கொள்ள

விற்பனை நிலைய இல : 115 யாழ்ப்பாணம்


077 391 8870 | 077 1066 902



IESL இனால் அங்கீகாரம் பெற்ற பொறியியல் கற்கை நெறிகள்...

City & Guilds **Diploma In Civil Engineering**

திறந்த போட்டித் தன்மையுள்ள தொழில் சந்தையில் நீங்கள் உயர்ந்து நிற்கும் ஒரு தொழில் வல்லுனராக உங்களை தயார்படுத்தி கொள்ள......



அதியுயர் சம்பளத்தை பெற்றுத்தரும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பொறியியல் கற்கை நெறிகள்...

- Civil Engineering
- Quantity Surveying
- Electronic Engineering
- Motor Vehicle Engineering
- Electrical Engineering
- Mechanical Engineering
- Ref & A/C
- AutoCAD & Revit

எமது கல்வி நிறுவனத்தில் கல்வி கற்றவர்கள் யாழ்நகரிலே 50000 ரூபாவரை சம்பளம் பெறுவது குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்

- உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இலகு வேலை வாய்ப்புக்கள்
- சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ்
- இலகு தவணைக் கட்டண முறை
- தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் விரிவுரைகள்
- அனுபவமும் திறமையும் வாய்ந்த ஆசிரியர் குழாம்

SMS 021 466 66 99
077 106 7394

மேலதிக விபரங்களைப் பெற உங்கள் (Name) (Address) (Course) போன்ற விபரங்களை 0777 762283 க்கு Sms செய்யவும்

SKILLS COLLEGE OF TECHNOLOGY
No 207 Navalar Road,
Jaffna Sri Lanka.
E-Mail : Jafna@skillsinternational.lk

City & Guilds APPROVED CENTRE

Nugegoda Campus No. 102, Stanley Thilakaratne Mw, Nugegoda. E-mail: ...@skillsinternational.lk
Kurunegala Campus No. 252, Puttalam Road, Kurunegala. E-mail: kurunegala@skillsinternational.lk
Kandy Campus No. 511, Peradeniya Road, Kandy. E-mail: kandy@skillsinternational.lk
Jaffna Campus No.207, Navalar Road, Jaffna. E-mail: jaffna@skillsinternational.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.